# சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை

# பேயனார்

## முதலிய [illegible] புலவர்கள்

புலவர் கா. கோவிந்தன்

# பேயனார்

## முதலிய ௬௧ புலவர்கள்

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,

கழக வெளியீடு: ௭௨௨

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை - ௧௯

# பேயனார்

## முதலிய ௩௪ புலவர்கள்

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1250

# பதிப்புரை

காலம் இடையீடில்லா நுண்பொருள். அது, நல்லன அல்லன யாவும் செய்யவல்லது; நல்லன செய்தது பழையதான சங்ககாலம்; அக்காலந்தந்த நறுமணமலர்கள் பல; அம்மலர்களே சங்ககாலத்திய பொங்கருட் புலமையாளர்.

இவர்கள் செவ்விய சீரிய கூரிய தீஞ்சொல் வளன் நிறைந்த செந்தமிழ்ச் செய்யுளாம் தீந்தேன் தந்து அறிவுப்பசியாற்றிய அருந்திறலினராவர்.

இப்பெரியார் வரிசைகளுள், '**பேயனார்**' முதலவராக '**வேளாதத்தர்**' ஈற்றினராக முப்பத்தொன்பதின்மராவர். இவர்தம் வரலாறு கூறும் நூலுக்குப் **பேயனார்** எனப் பெயர் சூட்டிச் சங்கத் தமிழ்ப் புலவர் வரிசையில் ௧௯ ஆவதாக வெளியிட்டுள்ளோம். இதனை அவர்கள் பாவின் நய ஆய்வோடு செழும ஆக்கித்தந்தவர் **திரு. புலவர், கா. கோவிந்தன்** அவர்கள்.

தமிழக நன்மாந்தர்கள் இதனையும், இவ்வரிசையில் வெளிவந்துள்ள ஏனைய சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை நூல்களையும் வாங்கிக் கற்று அறிவுத்துறையாம் பண்ணைப்பணைத்த பெருஞ் செல்வத்தைப் பெற்று இன்புறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| ௧. | பேயனார் | 6 |
| ௨. | பேயார் | 12 |
| ௩. | பேராலவாயர் | 13 |
| ௪. | பொத்தியார் | 17 |
| ௫. | பொன்மணியார் | 22 |
| ௬. | பொன்னாகனார் | 23 |
| ௭. | போத்தனார் | 24 |
| ௮. | போதனார் | 25 |
| ௯. | மதுரைக் கண்ணனார் | 27 |
| ௧௦. | மருதன் இளநாகனார் | 29 |
| ௧௧. | மாதிரத்தனார் | 57 |
| ௧௨. | மாமூலனார் | 59 |
| ௧௩. | மாயெண்டனார் | 84 |
| ௧௪. | மார்க்கண்டேயனார் | 85 |
| ௧௫. | மாலைமாறன் | 87 |
| ௧௬. | மீளிப்பெரும்பதுமனார் | 88 |
| ௧௭. | முடத்தாமக் கண்ணியார் | 89 |
| ௧௮. | முதுவெங்கண்ணனார் | 105 |
| ௧௯. | மூலங்கீரனார் | 106 |
| ௨௦. | மேலைக்கடைக் கண்ணம் புகுத்தாராயத்தனார் | 107 |
| ௨௧. | மேலைக்கடையத்தார் நல்வெள்ளையார் | 109 |
| ௨௨. | மையோடக் கோவனார் | 111 |

| | | பக்கம் |
|---|---|---|
| ௨௩. | மோதாசனார் | 114 |
| ௨௪. | வடநெடுந்தத்தனார் | 116 |
| ௨௫. | வருமுலையாரித்தி | 118 |
| ௨௬. | வன்பரணர் | 119 |
| ௨௭. | வாடாப்பிரமந்தன் | 125 |
| ௨௮. | வான்மீகியார் | 126 |
| ௨௯. | வினைத்தொழிற் சோகீரனார் | 129 |
| ௩0. | வெண்கொற்றன் | 130 |
| ௩௧. | வெண்பூதனார் | 131 |
| ௩௨. | வெண்மணிப்பூதி | 133 |
| ௩௩. | வெள்ளாடியனார் | 134 |
| ௩௪. | வெள்ளியந்தின்னனார் | 136 |
| ௩௫. | வெள்ளெருக்கிலையார் | 137 |
| ௩௬. | வெள்ளைமாளர் | 140 |
| ௩௭. | வேட்டகண்ணன் | 141 |
| ௩௮. | வேளாசான் | 142 |
| ௩௯. | வேளாதத்தர் | 144 |

| | | பக்கம் |
|---|---|---|
| ௨௩. | மோதாசனார் | 114 |
| ௨௪. | வடநெடுந்தத்தனார் | 116 |
| ௨௫. | வருமுலையாரித்தி | 118 |
| ௨௬. | வன்பரணர் | 119 |
| ௨௭. | வாடாப்பிரமந்தன் | 125 |
| ௨௮. | வான்மீகியார் | 126 |
| ௨௯. | வினைத்தொழிற் சோகீரனார் | 129 |
| ௩0. | வெண்கொற்றன் | 130 |
| ௩௧. | வெண்பூதனார் | 131 |
| ௩௨. | வெண்மணிப்பூதி | 133 |
| ௩௩. | வெள்ளாடியனார் | 134 |
| ௩௪. | வெள்ளியந்தின்னனார் | 136 |
| ௩௫. | வெள்ளெருக்கிலையார் | 137 |
| ௩௬. | வெள்ளைமாளர் | 140 |
| ௩௭. | வேட்டகண்ணன் | 141 |
| ௩௮. | வேளாசான் | 142 |
| ௩௯. | வேளாதத்தர் | 144 |

# பேயனார்

## தோற்றுவாய்

தமிழ் இலக்கியம் ஒரு கரைகாணாப் பெருங்கடலாம்; பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் போலும் நூல்களையும், பிற்காலத்தனவாய எத்தனையோ புராணங்கள், கோவை, உலா, அந்தாதி, மாலை போலும் நூல்களையும் எண்ணிக்காணின், அவற்றுட் பொதிந்துகிடக்கும் பாக்கள் எத்தனை எத்தனை ஆயிரங்களோ? அவற்றை ஆக்கியளித்த ஆசிரியப் பெருமக்கள் எத்தனை எத்தனை நூற்றுவரோ? தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும், இந்நூல்களைக் கற்றுத் தேர்தல் வேண்டுமாயினும், அவை யனைத்தையும் கற்றுத்தேர்தல் கனவினும் இயலாத காரியமாம்; ஆயினும், அவற்றைக் கல்லாது விடுதல், கழுவாயற்றதோர் விழுமிய குற்றமாம்; "கல்வி கரையில; கற்பவர் நாள்சில" என்ப. ஆகவே, அவற்றுள் தலையாய நூல்கள் சிலவற்றையாவது அறிந்து பயன்கோடல் வேண்டும். தமிழ் நூல்களுள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியங்களாய நூல்கள் எல்லாம், ஏறக்குறைய ஒருகாலத்தே தோன்றியனவே ஆயினும், அவற்றுள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய நூல்களையே, அறிஞர்கள், சங்க இலக்கியம் எனப் பெயரளித்துப் போற்றுவர்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய அந்நூல்களுள் அடங்கிய பழந்தமிழ்ப் பாக்கள், பண்டைத் தமிழகக் காட்சியினைப் பளிங்கெனக் காட்டும் படக்காட்சியாகும்:

அவற்றுட் புக்குக்காணவல்லார், அன்றைய தமிழ்நாட்டைத் தம் கண்ணெதிரே காணவல்லராவர்; அன்று, தமிழகம் அரசியல் நிலைகுறித்துப் பிரிக்கப்பெற்ற பல்வேறு நாட்டுப் பிரிவினை, அவற்றிடைச் சிறப்புற்று விளங்கிய ஆறு, மலை, ஊர்கள், ஆங்காங்கு வாழ்ந்த பல்வேறு இனமக்கள், அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில் வகைகள், அம் மக்களிடையே வளர்ந்து வளங்கொழித்த மரம், செடி, கொடிகள், நீரினும், நிலத்தினும், நீலவானத்தினும் வாழ்ந்த உயிர் வகைகள், அன்றைய சிற்றூர், பேரூர் நிலைகள், ஆங்காங்கு நடைபெற்ற அக்காலப் பெரு விழாக்கள், அன்று வாழ்ந்த மக்கள் மனவளம் ஆக அனைத்தையும் அறிவித்து நிற்கின்றன அப்பாக்கள்; அப் பாக்களைப் பாடிய புலவர்களால் நமக்கு அறிமுகமான பேரரசர்களும், குறுநிலத் தலைவர்களும், கொடைவள்ளல் களும் பலராவர்; அத்தகையாருள் நூற்றுஎழுபத்தைவர் வரலாறு, அவர் பாக்களால் நமக்கு அறியக் கிடக்கின்றன; அப்பாக்களின் வழித்துணைபெற்று நாம் காணவல்ல ஊர்கள், அஞ்சில், அட்டவாயில், அம்பர், அரிசில், அரிமண வாயில், அரையம், அலைவாய், அழுந்தூர், அழும்பில், அள்ளூர், ஆமூர், ஆர்க்காடு, ஆலங்கானம், ஆலங்குடி, ஆலத்தூர், ஆவினன்குடி, ஆவூர், இடும்பில், இடைக்கழி நாடு, இடைக்காடு, இடையாறு, இரணியமுட்டம், இருந்தையூர், ஈர்ந்தூர், ஈழம், உகாய்க்குடி, உம்பற்காடு, உரோடகம், உறத்தூர், உறந்தை, ஊணூர், எயிற்பட்டினம், எருமைநாடு, ஏரகம், ஐயூர், ஒக்கூர், ஒல்லையூர், கச்சி, கச்சிப்பேடு, கடம்பின் பெருவாயில், கரும்பனூர், கருவூர், கழாத்தலை, கழார், கழுமலம், கள்ளில், காப்பியாறு, காமூர், காவிரிப்படப்பை, கானப்பேரெயில், கிடங்கில், கிள்ளி மங்கலம், குடநாடு, குடந்தை, குடவாயில், குமட்டூர், குழுமூர், குறும்பூர், குன்றூர், கூடல், கூடலூர், கொடுகூர், கொண்கானம், கொற்கை, கோடிக்கரை, கோவலூர், கோவூர், சாய்க்காடு, சிறுகுடி, சிறைக்குடி, செங்கண்மா, செந்தில், செருப்பாழி, செல்லூர், சோணாட்டுப்பூஞ் சாற்றூர், தகடூர், தண்கால், தண்டாரணியம், தலையாலங்

கானம், தாமல், திருப்போர்ப்புறம், துளுநாடு, துறையூர், தேமுதுகுன்றம், தேனூர், தொண்டி, நாஞ்சில், நாலூர், நான்மாடக்கூடல், நியமம், நீடூர், நெய்தலங்கானல் நெல்லினூர், நேரிவாயில், பருவூர், பல்குன்றக்கோட்டம், பவத்திரி, பாடலி, பாமுளூர், பாரம், பிசிர், பிடவூர், புகார், புனல்நீர்நாடு, பூழி, பெருங்குன்றூர், பொறையாறு, போஒர், மதுரை, மருங்கூர்ப்பட்டினம், மழபுலம், மாங்காடு, மாங்குடி, மாடலூர், மாந்தை, மாவிலங்கை, மிழலை, முக்காவனாடு, முசிறி, முத்தூறு, முள்ளூர், மோகூர், மோசி, வஞ்சி, வல்லம், வலாஅர், வாகைப்பறந்தலை, வாட்டாறு, வியலூர், விளங்கில், வீரைமுன்துறை, வெண்ணி, வெளியம், வெள்ளூர், வேம்பற்றூர், வேம்பி, வேலூர், வேளூர், முதலியனவாம். அயிரி, ஆன்பொருநை, கங்கை, காரி, காவிரி, சிலம்பாறு, சேயாறு, சோணை, பஃறுளி, பெண்ணையாறு, பெரியாறு, வையை முதலிய ஆறுகளையும், அதலைக்குன்றம், அயிரைநெடுவரை, இமயக் குன்று, ஏழில்நெடுவரை, கவிரம், குடமலை, குதிரைமலை, குமரிக்கோடு, குருகொடுபெயர் பெற்றமலை, கொல்லி, கோடை, நவிரம், நன்றா, நேரி, பரங்குன்று, பறம்பு, பொதியில், மாலிருங்குன்றம், முதிரம், வேங்கடம் முதலாய மலைகளையும் நமக்கு அறியக் காட்டுகின்றன அப்பாக்கள். அதியர், அருவாளர், ஆரியர், ஆவியர், ஒளியர், ஓவியர், கொங்கர், கோசர், தொண்டையர், நந்தர், பரதவர், பூழியர், பொதுவர், மழவர், மோரியர், யவனர், வடுகர், வேளிர் முதலாம் பலவேறு இனத்தார் தம் வரலாறுகளையும் விளங்க உரைக்கின்றனர் அப்புலவர்கள்.

இவ்வளவு வரலாறுகள் விளங்கத் துணைபுரியும் பத்துப்பாட்டு எட்டுத்தொகையாகிய நூல்களுள் அடங்கிய பாக்கள், இரண்டாயிரத்து மூந்நூற்று அறுபத்தொன்பதாம்; இவ்வளவு பாக்களையும் பாடிய புலவர்கள் எண்ணிக்கை, நானூற்று அறுபத்து எட்டு; இவருள், அக்கால அரசர்தம் வரலாற்றினை விரித்துரைத்தார், நூற்று நாற்பத்து நால்வரே.

இவ்வாறு பெருநிதிப் புதையலாய் விளங்கும் அப்பாக்களை அறிந்து பயன் கோடற்குமுன், அப்பாக்களைப் பாடிய புலவர்கள்தம் வரலாறுகளை அறிந்துகோடல் அமைவுடைத்தாகும். வரலாறுவிளங்கத் துணைபுரிந்த புலவர்கள், தம் வரலாறு உரைவழி வகுத்தாரல்லர்; அவர் வரலாற்றினை அறியப் பெருந்துணையாய் நிற்பன, அவர்தம் பெயரும், அவர் பாடிய பாக்களுள் சிலவுமேயாம். அப்புலவர்க்கமைந்த பெயர்களை நோக்கின், இயற்பெயர் இதுவென உணர்த்தி நின்றன சில; தந்தை பெயர் தெரிய வந்தன சில; தந்தை பெயரொடு தம்பெயரும் உணர வந்தன சில; உறுப்பான் அமைந்தன சில; ஊரான்வந்தன சில; ஊரும், பெயரும் உணரவந்தனவும், ஊரும் தொழிலும் உணரவந்தனவும், ஊரும்பெயரும், உற்ற தொழிலும் ஒருங்குணர வந்தனவும் சில; அவர் பாட்டிடை விளங்கும் அழகிய உவமையும், அரிய தொடருமே பெயராய் அமைந்தன சில; ஆதன், ஆந்தை, எயினன், கடுவன், கண்ணன், கீரன், குமரன், கொற்றன், தேவன், நாகன், பூதன் போலும் பெயர்களைப் பெற்றுவந்தன சில; ஆக, இவ்வாறு, அவர் வரலாற்றின் ஒரு பகுதி உணரத் துணை புரிவனவாதல் விளங்கும். இப்புலவர்கள்தம் வரலாறுகளை நோக்கியக்கால், அவரிடையே, அரசராய் வாழ்ந்தார் சிலரும், உழவு, நெசவு முதலாம் பல்தொழில் புரிந்து பயன்தருவார் சிலரும், வணிகராய் வாழ்ந்து வளங்கொழித்தார் சிலரும் விளங்கக் காணலாம்.

இவ்வாறு வாழ்ந்து வழிகாட்டிகளாய் விளங்கிய புலவர்களின் வரலாறுகளை, அவர் பெயர்த்துணையும் பாக்கள் துணையும்கொண்டு அறிவிக்க முன்வந்து, தனி நூலாக வெளியிடத்தக்க விரிந்த வரலாறு உடையராகிய, கபிலர், பரணர், நக்கீரர், ஒளவையார் ஆகியோர் வரலாறுகளைத் தனித்தனியே வெளியிட்டு, ஏனையோர் வரலாறுகளையும், "பெண்பாற்புலவர்கள்" "உவமையாற் பெயர் பெற்றோர்," "காவலபாவலர்கள்," "கிழார்ப் பெயர் பெற்றோர்," "வணிகரிற்புலவர்கள்," "மாநகர்ப்புலவர்கள்-1, 2, 3," "உறுப்

பாலும் சிறப்பாலும் பெயர் பெற்ருேர்," "அதியன் விண்ணத்தனர், குட்டுவன் கண்ணனர்" என்ற பல்வேறு தலைப்பின்கீழ் விரித்துரைத்து விட்டு, எஞ்சிநின்ற முப்பத்தொன்பது புலவர்கள் வரலாறுகளை உரைக்கும் இந்நூற்கு, அவருள், முதற்கண் நிற்பவராய பேயனர் பெயரே, பெயராக அமைந்துளது.

கூறிய நூல்கள் பதினறினும், முதல் நூலில், ஒருபுலவர் வரலாறும், 235 பாக்களின் பண்பும், இரண்டாம் நூலில் ஒருபுலவர் வரலாறும், 85 பாக்களின் பண்பும், மூன்ருவது நூலில், ஒருபுலவர் வரலாறும், 37 பாக்களின் பண்பும், நான்காவது நூலில், ஒருபுலவர் வரலாறும், 59 பாக்களின் பண்பும், ஐந்தாவது நூலில், 26 புலவர்கள் வரலாறும், 101 பாக்களின் பண்பும், ஆருவது நூலில் 22 புலவர்கள் வரலாறும், 50 பாக்களின் பண்பும், ஏழாவது நூலில் 28 புலவர்கள் வரலாறும், 142 பாக்களின் பண்பும், எட்டாவது நூலில் 41 புலவர்கள் வரலாறும், 159 பாக்களின் பண்பும், ஒன்பதாவது நூலில், 28 புலவர்கள் வரலாறும், 78 பாக்களின் பண்பும், பத்தாவது நூலில், 30 புலவர்கள் வரலாறும், 90 பாக்களின் பண்பும், பதினோராவது நூலில், 30 புலவர்கள் வரலாறும், 104 பாக்களின் பண்பும், பன்னிரண்டாவது நூலில், 50 புலவர்கள் வரலாறும், 92 பாக்களின் பண்பும், பதின்மூன்ருவது நூலில், 25 புலவர்கள் வரலாறும், 83 பாக்களின் பண்பும், பதினன்காவது நூலில், 65 புலவர்கள் வரலாறும், 548 பாக்களின் பண்பும், பதினைந்தாவது நூலில், 80 புலவர்கள் வரலாறும் 128 பாக்களின் பண்பும், பதினருவது நூலில், 39 புலவர்கள் வரலாறும், 188 பாக்களின் பண்பும், ஆக, 468 புலவர்களின் வரலாறும், 2178 பாக்களின் பண்பும் ஓரளவு அறிந்து கூறப்பட்டுள்ளன.

# க. பேயனார்

பேயனார் என்னும் பெயருடையராய இப்புலவர், முல்லை வளங்களை வனப்புறப் பாடுதலில் வல்லவராவர்; ஐங்குறுநூற்றின் ஐந்தாம் நூறாகிய முல்லைத்திணையைப் பாடியவர் இவரே; குறுந்தொகைக்கண் வந்துள்ள மூன்று செய்யுளும், நெடுந்தொகைக்கண் காணப்படும் செய்யுளும் அம்முல்லைத் திணைப்பொருள் பற்றியே பாடப் பெற்றுள்ளன.

நாடுகாவல், நன்பொருள் ஈட்டல் முதலாயின கருதித் தலைமகன் பிரிந்து போதலும், பிரிந்து சென்றான் செல்லுங்கால் கூறிய உரையினைத் தேறி, தலைமகன் ஆற்றியிருத்தலும், வினைமுடித்து வருவான் வழியின் இன்பங்கண்டு வருந்திக் கூறுவனவும் முல்லைத் திணைக்குரியவாம். இவற்றின் இயல்புகளை யெல்லாம் இனிதெடுத்துப் பாடியுள்ளார் புலவர். அவர்காட்டும் முல்லை நிலக்காட்சிகள் பலவாம்; அவை அனைத்தும் அறிந்து மகிழ்தல் எளிதில் ஆகாது; அவற்றுள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கண்டு களித்துச் செல்வோமாக.

பொருள் குறித்துப்போகும் தலைவன், கார்காலத் தொடக்கத்தே வருதல் உண்மை; ஆகவே கவலாது இருக்க எனக் கூறிச் சென்றான்; அவன் உரையினைத் தேறி, அவன் மனைவியும் ஆற்றியிருந்தாள். அவன் கூறிய பருவமும் வந்துவிட்டது; ஆயினும் அவன் வந்திலன்; அதனால் அவள் வருத்தம் மிகுந்தது; வருந்தியிருப்பாள் முன்வந்து நின்றான் பாணன்; அவள் துயர் போகுமாறு சில உறுதிகளைக் கூறத் தொடங்கினான்; அவன்பால், "பாண! சென்ற நின் தலைவர், என்னை மறந்து விட்டார்; என்பால் அவருக்கு அன்பும் இல்லை; ஆகவே, அவர் என்பொருட்டு இவண்வாரார்; அதற்காகவும் யான் வருந்துகின்றேனல்லேன்; தாம் கூறிய சொல் பொய்த்துப் போதலைக் கண்டும் அவர் நாணாமை கண்டே யான் பெரிதும் வருந்துகின்றேன்" என்று கூறித் தன் துயரினும், தலைவன் சொற் பிழைத்தலால் உண்டாம்

துயரே பெரிதாம் எனக்கருதும் பெருந்தகையாள் ஒருத்தியைப் பாடியுள்ளார் புலவர் :

"கைவல் சீறியாழ்ப் பாண! நுமரே
செய்த பருவம் வந்து நின்றதுவே;
எம்மின் உணரா ராயினும், தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யா ராகுதல் நோகோ யானே." (ஐங் : ௪௭௨)

கார்ப்பருவம் வந்துற்றதாகவும் காதலர் வந்திலரே எனக் கலங்கும் தலைவியின் நிலையினைக் கண்டாள் தோழி. தலைவி தன் துயர் கருதி அழுகின்றாளல்லள்; தலைவன் சொல் பிழைபட்டமை குறித்தே பெரிதும் அழுகின்றாள் என்பதை உணர்வாள் அவள்; ஆகவே, தலைவியின் துயர்போக்க விரும்பிய அவள் தலைவன் பிழைபட்டிலன் என்பதைப் பொய்யாகவாவது அவள் உளங்கொள்ளுமாறு உணர்த்தத் துணிந்தாள்; அவள்பால் சென்றாள். "தோழி! பொருள் தேடிப்போயுள்ள நின் தலைவர் நின்பால்பேரன்புடையராவர் அவர் நின் எழில் கெடக் கண்டு நிற்பாரல்லர்; அவர், தாம் கூறிய சொற் பிழையாது வந்து சேர்தல் உறுதி; கொன்றை மாலைபோல் மலர்ந்துள காட்சியைக் கண்டு மருண்ட நின் உள்ளம், இதைக்கார்காலம் எனப் பிறழக் கொண்டுவிட்டது; உண்மையில் இது கார்காலமன்று; கார்காலம் இன்னமும் தொடங்கிற்றில்லை; கொன்றை மலர்ந்தது கார்காலம் வந்து விட்டமையால் அன்று; கார்காலம் தொடங்குவதற்கு முன்னரே, அறிவில்லாத மேகம் மழைபெய்து விட்டது; காலமல்லாக் காலத்தே பெய்த இம்மழையைக் கார்காலத்து மழையெனப் பிறழக் கொண்ட கொன்றையும் மலர்ந்து விட்டது; இதுவே உண்மை; ஆகவே, இதைக் கார்காலம் எனப் பிறழக்கொண்டு புலம்புவது ஒழிக; தலைவர் அக்காலத்தே நில்லாது வந்து அன்புசெய்வர்" என்று கூறித் தேற்றினாள்; தலைவன் வரும் காலமே, கார்காலம்; அவன் வருதற்கு முன்வரும் அக்காலம், உண்மைக் கார்காலமன்று என உரைக்கும் உறுதியுள்ளம் உடையாளாய தோழியையும் பாடியுள்ளார் புலவர் :

"ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையங் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவன் இனி மடந்தை நின் கலிழ்வே? நின்வயின்
தகை எழில் வாட்டுந ரல்லர்:
முகை அவிழ்புறவின் நாடிறந் தோரே." (ஐங்: சசுஉ)

தனித்துறையும் தலைவியின் துயர் நிலை கண்ட பாணன், அவள் துயர் போக்க எண்ணினான்; உடனே, தலைவன் தங்கும் பாசறை நோக்கிச் சென்றான்; ஆங்கு அவனைக் கண்டு, அவள் துயரெலாம் எடுத்துக் கூறினான்; அதைக் கேட்டும், வந்தவினை முடியப்பெறாமையால், தன்னூர் செல்ல எண்ணினானல்லன்; தலைவன் செயல் பாணன் உளத்தே சினம் எழச் செய்தது; மனைவி, மனத்துயர் கொண்டு மனையின்கண் மடிந்திருப்பவும், விரைந்து மீள எண்ணாது வினையே கருதியிருக்கும் இவன் பண்புடையானல்லன் எனத் துணிந்தான்; உடனே தலைவனை நோக்கி, "தலைவ! நின்பால் பாடிப்பிழைக்கும் பாணனும் அல்லேன் யான்; எனக்குப் பொருள் அளித்துப் புரக்கும் தலைவனும் அல்லன் நீ" என வெறுத்துக்கூறி வெளியேறினான்; பாடிப் பிழைப்பதைத் தன் தொழில் என எண்ணாது, தனக்குப் பொருள் அளித்துப் புரக்கும் தலைவன், பண்புடையனாதலும் வேண்டும் என விரும்பும் பாணனையும் பாடியுள்ளார் புலவர்:

"நினக்குயாம் பாணரும் அல்லேம்; எமக்கு
நீயும் குருசிலை அல்லை மாதோ;
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே." (ஐங்: சஅ0)

பாணன் வழியாய்த் தலைவியின் துயர் நிலையினை அறிந்த தலைவன், வினையை விரைவில் முடித்துக்கொண்டான்; வீடுநோக்கிச் செல்ல எண்ணிய அவன் உள்ளம் மிகமிக விரைந்தது; அவன் தேரிற்பூண்ட குதிரைகள் உள்ளம்போல் உற்றுழி உதவும் உரனுடையன; தேர்ப் பாகனும் நெறியறிந்து ஓட்டும் நல்லறிவுடையான்; ஆகவே,

அவன் தேர் குறித்த காலத்தே காதலி ஊர் சென்று நிற்றல் உறுதி ; இதை அறிவான் தலைவனும் ; ஆயினும், அவளைக் காணத் துடிக்கும் அவன் உள்ள வேட்கை மேலும் விரைந்து செல்ல விரும்பிற்று ; அவ்விருப்பம் அவன் உள்ளத்தே நிறைந்துநிற்கும் அருளையும் மறக்கச் செய்தது ; தேர்ப்பாகன்பால் தாற்றுக்கோல் கொண்டு குதிரைகளைக் குத்தி விரைந்து செலுத்துமாறு வேண்டினான் ; என்னே அவன் ஆர்வம் ; ஆர்வமிகுதியால் அருளையும் மறக்கும் மனைமாண்புடையனாய தலைவனையும் பாடியுள்ளார் புலவர் :

> " சேயிழை மாதரை உள்ளி நோய்விட
> முள்ளிட்டு ஊர்மதி வலவ ! நின்
> புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே." (ஐங் : ௪அ௧)

தலைவன் உளம் அறிந்தான் பாகன் ; உள்ளவழியே ஓட்டிச் செல்லின் விரைவில் ஊர் அடைதல் இயலாது என்பதை உணர்ந்தான் ; குறுக்குவழி காணத் தூண்டிற்று அவன் உள்ளம் ; அவ்வாறே பருக்கைகள் நிறைந்த மேட்டுநிலம் என்று எண்ணாமல், தேரை விரைந்து ஓட்டினான் ; தேரும், அவ்வன்னிலமும் பிளந்து வழிவிடப் பாய்ந்தோடி வந்தது ; இவ்வாறு அவன் கண்ட புதுவழி ஓடிய தேர், குறித்த பருவத்திற்கு முன்னரே தலைவியின் மனைமுன் வந்துநின்றது ; கண்டான் தலைவன் ; சிறிது கழித்து வந்திருப்பினும், தலைவியை உயிரோடு கண்டிருத்தல் இயலாது என்பதை உணர்வானவன் ; உடனே பாகனை அன்பொழுகத் தழுவிக்கொண்டான் ; " பாக ! இன்று இவண் தேரைமட்டும் கொண்டுவந்து சேர்த்தனை அல்லை ; என் ஆருயிர்த் தலைவியையும் அன்றோ கொண்டு சேர்த்தனை " எனப் பாராட்டி மகிழ்ந்தான் ; இந்தக் காட்சியையும் காட்டுகிறார் புலவர் :

> " நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
> முரம்பு கண்ணுடைய ஏகிக், கரம்பைப்
> புதுவழிப் படுத்த மதியுடை வலவோய் !
> இன்று தந்தனை தேரோ ?
> நோயுழந் துறைவியை நல்கலானே." (குறுந் : ௨00)

தலைவனும், தலைவியும் மகிழ்ந்து மனையறம் நடத்துகின்றனர்; ஒருநாள் மாலைக்காலத்துப் பசுவெண்ணிலவொளி விளங்கும் மாடத்து மேலிடத்தே, குறுகிய கால்களையுடைய கட்டில்மீது போடப்பட்டுள்ள நறுமணம் நாறும் மலர் தூவப்பெற்ற படுக்கையில் அமர்ந்திருக்கும் தலைவன், ஆசைப்பெருக்கால் பெருமூச்சுவிட்டுத் தன் அன்பிற்குரிய மகனை ஆரத்தழுவி நின்றான்; அந்நிலையில் ஆங்கு வந்த தலைவி, தலைவன் தோளை அன்பொழுகத் தழுவி நின்றாள்; இந்தக் காட்சியைக் கண்டாள் தோழி; பாகனை அழைத்து, அக்காட்சியை அவனுக்கும் காட்டி அகமகிழ்ந்தாள்; அழகிய இக்காட்சியைத் தோழிவாயிலாக நமக்கும் காட்டிக் களிமகிழ்வூட்டுகிறார் புலவர்:

"கண்டிசின் பாண! பண்புடைத் தம்ம;
மாலைவிரிந்த பசுவெண் நிலவில்
குறுங்கால் கட்டில் நறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையின் உயிர்த்தனன், நசையின்
புதல்வன் தழீஇயினன் விறலவன்;
புதல்வன்தாய் அவன்புறங் கவைஇ யினளே."

(குறுந் : ந௯௧)

புலவர் பேயனார், அக்கால மக்கள்தம் செல்வச் சிறப்பினையும், அச்செல்வத்தை உடையார்தம் சீரிய பண்பாட்டினையும் சிறக்க உணர்ந்தவராவர்; கவலைக்கிழங்கு தோண்டியெடுத்தலால் உண்டாய குழிகளில், கொன்றை மரத்தின் பொன்னிறப் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் காட்சி, செல்வர்தம் மனையிடத்தேயுள்ள பொற்காசுகள் நிறைந்துள்ள பெட்டி வாய்திறந்து கிடப்பதுபோலும் எனக் கூறும் உவமை, தமிழர்தம் செல்வவாழ்வின் சிறப்பினை உணர்த்தி நிற்றல் காண்க.

"கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச், செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவு."

(குறுந் : உ௩௩)

தலைமகள் ஒருத்தியைப் பாராட்டும் புலவர், அவள் தந்தை அறிவு, ஒழுக்கங்களால் உயர்ந்து தோன்று வார்க்குப் பொன்னையும் பொருளையும் நீரொடு வழங்கி எஞ்சியவற்றையே தம் பொருளாக் கருதுவன். அவன் தன் மனைநோக்கி வருவார் எவர்க்கும் இல்லையென்று கூறுமல் சோறிட்டுப் புரக்கும் பேருள்ளம் உடையன் எனப் பாராட்டி அக்காலச் செல்வர் தம் பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புடை வாழ்வினராவர் என்பதை விளக்கி யுள்ளார்.

"உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில், யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி
நிரைகோல் குறுந்தொடி தந்தை." (குறுந்: உ௩௩)

# உ. பேயார்

பேயார் எனும் இப்பெயர் இவர்க்கு வருதற்காம் காரணம் விளங்கவில்லை. "கறைப்பல் பெரு மோட்டுக் காடு கிழவோள்," எனும் வெண்பாவை மேற்கோள் காட்டி, "இது பூதத் தாழ்வாரும், காரைக்காற் பேயாரும் பாடியது," எனக் கூறும் யாப்பருங்கல விருத்தியுரையினை எடுத்துக் காட்டி, "அவரும், இவரும் ஒருவரோ, வேறோ, யாதும் புலப்படவில்லை," என்று எழுதுவர் சில ஆசிரியப் பெருமக்கள்; யாப்பருங்கல உரையால், பேயார் எனும் பெயருடைப் புலவர் பிற்காலத்தும் வாழ்ந்தார் எனக் கொள்ளலாமேயன்றி, அவரை, இவரோடு ஒற்றுமை காணல் எவ்வாற்றானும் பொருந்தாது. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

காடழித்து நாடாக்கும் கானவர், அக் காட்டு மரங்களை அழித்து எரித்தலின் எழுந்த புகை, அம் மரங்களிடையே அகிலும் சேர்ந்துள்ளமையான், மணம் நிறைந்ததாகி எழுந்து, பரந்துசென்று, அக் காட்டை அடுத்துள்ள அக் கானவர்தம் சிற்றூர்மீது படியும் எனக் குறிஞ்சிநிலப் பண்பினைப் படம் பிடித்துக் காட்டும் புலவர், அவ்வாறு எழுந்த புகை வெண்ணிறம் பெற்றுள்ளமையான், நீர் அற்ற வெண்மேகம்போல் தோன்றும் என அழகிய உவமையினையும் அமைத்துப் பாடியுள்ளார்:

"நறை அகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறை அறு மையின் போகிச் சாரல்
குறவர் பாக்கத்து இழிதரும் நாடு." (குறுந்: ௩௩௯)

## ௩. பேராலவாயர்

மதுரையில், சொக்கப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு ஆலவாய் என்பது பெயர்; அதனால், ஆங்குக் கோயில்கொண்டிருக்கும் பெருமானுக்கு ஆலவாயர் என்பது பெயராம். சிவபெருமான், நக்கீரரோடு வாதாடவேண்டி, ஒரு புலவர் உருத்தாங்கி வந்தபொழுது நும் பெயர் யாது என்றார்க்கு எம்பெயர் பேராலவாயர் என்று கூறியதாகத் திருவிளையாடல் கூறும். அவ்விறைவனுக்குரிய இப் பெயரே, நம் புலவர்க்கு இயற்பெயராயிற்று. இவர், பிற ஊர்களிற் பிறந்து, மதுரைபோந்து வாழ்ந்தாரைப் போலல்லாமல், மதுரையிலேயே பிறந்து வாழ்ந்தவர்; ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தே வாழ்ந்தவர்; அவனுக்குரிய வையை யாறு, கொற்கைத்துறை, மதுரைத் தலைநகர் ஆகியவற்றைப் பாராட்டியுள்ளார்; அவன் இறந்தனனாகத் தீப் புகுந்த அவன் மனைவியார் பெருங்கோப்பெண்டு தீப் பாய்தல் கண்டு வருந்தியுள்ளார்.

வையை, மணம் நாறும் மலர்களால் மாண்புறும் மலர்ச் சோலைகளைத் தன் இருபாலும் கொண்டது; பெருநீர் உடையது என்றும், கொற்கைத்துறை, மீன் கொணர எண்ணிக் கடல்மேல் சென்ற பரதவர், அம் மீன்களோடு கொண்ட முத்துச் சிப்பிகளைக் கள்ளிற்கு விற்கும் வளமையால் நிறைந்த புகழ் உடையது என்றும், செழியன், வெற்றிதரும் வேற்படையாலும், பெரிய யானைப்படையாலும், நெடிய தேர்ப்படையாலும் புகழுடையோனவன் என்றும், கூடல் எனப் பெயருடைய மதுரை மாநகர், மலைபோல் உயர்ந்து தோன்றும் மாட வரிசைகளையுடையது என்றும் பாராட்டியுள்ளமை காண்க.

> "நெருனையும் கமழ்பொழில் துஞ்சி, இன்றும்
> பெருநீர் வையை அவளொடு ஆடி."

"பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்
கடும் பகட்டியானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூடல்." (அகம்: உகசு)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் இறந்தானாக, அவன் பிரிவுத்துயரால் வருந்தி வாழ எண்ணாது, அவனோடு உடன் உயிர் துறக்க எண்ணிய அவன் மனைவியும், பேரிசைப் புலமை யுடையாருமாய பெருங்கோப் பெண்டினைத் தீப் பாயாதிருக்க வேண்டிய சான்றோர்களுள் பேரால வாயரும் ஒருவர்; அவள் அவர் சொற் கேளாது தீப் பாய்ந்த கொடுங்காட்சியினைக் கண்டு கலங்கிப் பாடியும் உள்ளார்.

காட்டினகத்தே அமைந்த காடுகிழாள் கோயில்முன், அவள் தீப் பாய்தற்காம் பெருந்தீ எழுப்பப்பட்டுளது; அதைக் கண்டார் அப் புலவர்; அதே கோயில்முன், அக் காட்டுவாழ் மக்கள், தங்கள் பழகிய யானைகள் கொண்டுவந்து கொடுத்த விறகினால் மூட்டிய தீயினைக் கண்டவர் அப் புலவர்; அத் தீயினைக் கண்டவழி எழுந்தது மகிழ்ச்சி; இத் தீயினைக் காணும்வழி எழுவது கலக்கம்; அத் தீயின் ஒளியில், காட்டுக் கொடுவிலங்குகளுக்கு அஞ்சி வரும் மானினங்கள், தம் அச்சம் நீங்கி உறங்கியதையும், அவ்வாறு உறங்கிய அவற்றிற்கு, அத் தீயால் துயர் உண்டாம் என அஞ்சிய குரங்குகள், அந் நெருப்பை அழித்ததையும் கண்டு களித்தவர்; துஞ்சும் மானினங்கட்குத் துயர் உண்டாகா முன்னமே, துயர் உண்டாகிவிடுமோ என்ற எண்ணம் உடையபோல், அத் தீயை அழித்த அக் குரங்குகளின் மனப்பண்பினை வியந்து நிற்கும் காலத்தே, பெருங்கோப்பெண்டு, புனலாடிப், புனலாடியநீர் மயிர்வழி ஒழுக, அப் பெருங்காடு நோக்கித் துயர்நிறை உளத்தளாய் மெல்லென அடியிட்டு வருவதைக் கண்டார்; அவள், அரசன் வாழ்ந்த காலத்தே அரண்மனையிடத்தே வாழ்ந்த அன்புவாழ்க்கையினை அறிந்து மகிழ்ந்தவர் நம் புலவர்;

அக்காலை, அரசன் சிறிதுபொழுது பிரிந்திருப்பானுயினும், அச்சிறு பிரிவினையும் தாங்கமாட்டாது, இளமை உணர்வாம் காமநோயால் வருந்தி வாடும் இயல்பினள் அவள்; அத்தகைய மென்மையுடையாள், கணவனைப் பிரிந்து, கலக்கமுற்றுக் கால் கடுகக், காடுகிழாள்முன் அமைந்த பெருந்தீ நோக்கி வருவதைப் புலவர் உள்ளம் காணமாட்டாது கலங்குவதாயிற்று; மானினம் பிழைக்க, மந்திகள் அந் நெருப்பினை அழித்தன; ஆனுல், நம்மால் ஓர் அரசமாதேவியின் உயிரைக் காக்க இயலவில்லை; அவள் அந் நெருப்புட் புகுந்து மடிந்து மறைவதைக் கண்டு நிற்கின்றோம்! என்னே நம் மாண்பு! என்றெல்லாம் எண்ணி வருந்தினுர்; அவ் வருத்தம் ஒரு பாட்டாக வெளிவந்தது.

யானை தந்த முளிமர விறகில்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எடுப்பி
மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்மதானே; தன்கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியன்நகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்கும் தன்இளமை புறங்கொடுத்தே."

(புறம்: உசஎ)

வென்று மீளும் வீரர்களை வரவேற்க, ஊரில் உள்ளார் கால்பல நட்டுப் பசுந்தழை வேய்ந்து பந்தர் அமைப்பதும், ஆங்கே உள்ள பழ மணல் மாற்றி, நீர் கொழிக்கும் புது மணல் கொணர்ந்து பரப்புவதும், வருவார்க்கு வழங்க மதுவையும் ஆட்டிறைச்சியினையும் ஆங்கே சேர்த்து வைப்பதுமாய வரவேற்புவிழாக் காட்சியை நம் புலவர் இக்கால மக்களும் கண்டு களிக்குமாறு காட்டுகிருர்.

"நறவும் தொடுமின்; விடையும் வீழ்மின்;
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனல்தரு இளமணல் நிறையப் பெய்ம்மின்."

(புறம்: உசுஉ)

பண்டைத் தமிழகத்தில் வழியகத்தே அமைந்த ஊர்கள், பகைவர் படைகளாலும், ஆறலை கள்வர்களாலும் பலகாலும் தாக்குறுவதால் வறுமையுற்று அவ்விடங்களில் புல்வேய்ந்த குடிசைகளே காணப்படுவதையும் அவர்கள் வீட்டின் முன்பக்கத்தே தொங்கும் தயிர் கடைந்துவிட்ட மத்தினை ஆண்டுக் கட்டப்பெற்றுள்ள கன்று நக்கிநக்கிச் சுவைப்பதையும், வறுமையுற்ற காலத்திலும் வந்து தங்குவார்க்கு வாழ்வளித்து அனுப்புவதையும் ஆங்கு வாழும் மக்கள் விடியற்காலத்தே, கோழி முதற்குரல் எழுப்பியவுடனே எழுந்து வினைமேற் செல்வதையும் புலவர் பார்த்துப் பழகியவர் ஆதலின், அவற்றின் இயல்பு குன்றுவாறு எடுத்துக்காட்டியுள்ளார் :

"தீந்தயிர் கடைந்த திரள்கால் மத்தம்
கன்றுவாய் சுவைப்ப முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சீறூர் எல்லித் தங்கிக்
குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தலைக்குரல் விடியல் போகி." (அகம் : அஎ)

காடுகளில், ஆறலைத்து வாழும் மறவர்கள், அக்காட்டினகத்தே கற்களால் அரண் அமைத்து வாழ்வர் ; ஆண்டு அவர் எழுப்பும் பறைஒலி, அவ்வழிச் செல்வார்க்கு அச்சத்தை விளைக்கும் என அவர் கூறும் காட்டரண் அமைப்பும், நாட்டில் செல்வர் தம் மாளிகைகளில் விடியும் வரை விளக்கொளி விளங்கும் எனக்கூறும் நகரச்சிறப்பும் நாம் அறிந்து பாராட்டற்குரியனவாம் :

"கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி
அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென."
"வைகுசுடர் விளங்கும் வான்தோய் வியன்நகர்."
(அகம் : அஎ)

தலைவன் தேர் வரக்கண்ட தலைவி, விருந்தயர் விருப்பினளாயினள் என (நற் : ௩௬௧) அவர் கூறும் பாட்டு படித்து மகிழ்தற்குரியதாம்.

# ௪. பொத்தியார்

கோப்பெருஞ் சோழனின் உயிரொத்த தோழர்களுள் பொத்தியாரும் ஒருவர் ; உறையூர்க்கண் இருந்து ஆட்சி புரிந்த சோழவேந்தருள் கோப்பெருஞ்சோழன், அறிவு நலமும், ஆட்சி நலமும் ஒருங்கே அமையப்பெற்றவன் ; பெரும்புலவனாய்க், கண்ணகனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார், பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற்றியனார், பொத்தியார் போன்ற புலவர் பெருமக்கள் போற்ற வாழ்ந்தவன் ; மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்ன மானம் உடையவன்; தன் வயிற்றுதித்த மக்கள் தகாவொழுக்கத்தினராய்த் தன்மீதே போர் தொடுத்துப் போந்த பழிச்செயல் நாணி, வடக்கிருந்து உயிர்நீத்த வான் புகழ் உடையவன் ; இத்தகையானின் உயிர்நண்பராம் உரிமைபூண்டு, அவன் புகழையும், அவன் தன் ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையாரையும், அவரும் அவனும் மேற்கொண்டிருந்த உயிர் ஒன்றிய நட்பின் பெருமையினையும் போற்றிப் பாராட்டி, அவரோடு வாழ்ந்து அவர் வடக்கிருந்து உயிர் விட்டாராக, அவரை இழந்து தாம் மட்டும் வாழ எண்ணாது, அவர் இறந்து நடுகல்லான இடத்திற்கு அணித்தே வடக்கிருந்து உயிர்விட்ட உயர்ந்தோராவர். "கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத் தாய நட்பினைப் பயக்கும்" (குறள் : ௭௮௫ : பரிமேல்) என உயர்ந்த நட்பினர்க்கு எடுத்துக்காட்டாக, உயர்ந்தோரான் காட்டப்பெறும் பெருமைவாய்ந்த பிசிராந்தையாரே, பழியின் நீங்கிய பெருநண்புடைய பொத்தியார் "பொத்தில் நண்பின் பொத்தி" (புறம் : ௨௧௨) எனப் போற்றுவராயின், பொத்தியார் தம் புகழினைப் போற்றவும் வேண்டுமோ?

குணங்களால் நிறைந்த குன்றென வாழ்ந்தவன் கோப்பெருஞ்சோழன் ; அத்தகையான் உயிர்நீத்துக்கிடக்

கும் நிலையினைக் கண்ட புலவர் பொத்தியார் உளத்தே, அவன் புகழ் எல்லாம் தோன்றித் துயர் விளைத்தன; ஈதலும் இசைபட வாழ்தலுமே, உயிர்க்கு ஊதியமாம் எனக் கொண்டு பாடிவருவார்க்கெல்லாம் பெரும் பொருள் வழங்கும் வள்ளன்மையும், கூத்தரும், விறலியருமாய் வந்து ஆடி மகிழ்விப்பார்பால் காட்டும் அன்புடைமையும் அவன்பால் பொருந்தியிருந்தன; அறநூல் துறைபோய அறிஞர்களும் புகழுமாறு அரசியல் நடாத்தும் செங்கோற் சிறப்புடையவன்; புலவர் புகழ்ந்த பெருநட்புடையவன்; மகளிர்பால் மென்மையும், வீரர்பால் வன்மையும் உடையான்; நான்மறையுணர்ந்த நல்லோர்க்குப் புகலிடமாம் பெருமையாளன்; இவ்வாறு பல்லோர் புகழும் நல்லோனாய் நாடாண்ட நண்பனைக் கொண்டுசென்றனனே கூற்றுவன் என எண்ணினார் புலவர்; அக் கொடுஞ்செயல் புரிந்த கூற்றுவன்பால் கோபம் மிக்கு எழுந்தது; தன்னைப்போன்றே அவனை இழந்து வருந்தும் புலவர்களையும், பாணர்களையும் ஒருங்கு அழைத்து, "நாமும், நம் சுற்றமும் வருந்த, இவன் உயிரைக் கொண்டுசென்ற கூற்றுவனை வருத்தல் நம்மால் இயலாது ஆயினும் வாயார வைதலையாவது புரிவோம், வம்மின் புலவீர்!" என்று கூறி வருந்தினார்.

'பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே;
ஆடுநர்க்கு ஈத்த பேரன்பினனே;
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே;
திறவோர் புகழ்ந்த திண்நண் பினனே;
மகளிர்சாயல்; மைந்தர்க்கு மைந்து;
துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்;
அனையன் என்னாது, அத்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று;
பைதல் ஒக்கல் தழீஇ அதனை
வைகம் வம்மோ! வாய்மொழிப் புலவீர்!"

(புறம் : உஉக)

கோப்பெருஞ்சோழன், இறப்பதற்கு முன்னர், தன் அருகிருக்கும் ஆன்றோர்பால் "ஐயன்மீர், என் பெருநண்பர்

பிசிராந்தையார் வருவர்; அவர் வடக்கிருத்தற்காம் இடத்தை எனக்கு அணித்தே ஆக்கித் தாருங்கள்" என்று வேண்டினான்; அதுகேட்ட அவர்கள், "ஐய! பல்லாண்டு பழகிய நண்பரும், இந்நிலையில் நேரில்வருவது அரிது; பிசிராந்தையாரோ, சேணெடுந்தூரத்ததாகிய பாண்டிநாட்டின்கண் உள்ளார்; அவரும் நின்னைக் கேள்விவழியான் அறிந்தவரேயன்றி நின்னோடு நேரிற் பழகியவரல்லர்; அத்தகையார், இந்நிலையில் ஈண்டு வருதல் அரிதினும் அரிதே" என்று தெரிவித்தனர்; அவ்வாறு அவர் கூறக்கேட்ட அவன், "ஐயன்மீர்! ஆந்தையார் பாண்டிநாட்டுப் பிசிர் எனும் ஊரினரேயாயினும், அவர் உயிரை விரும்பும் உண்மை நண்பராவர்; தனது பெயரைச் சொல்லுமிடத்தெல்லாம், என்னின் வேறல்லர் என்பது விளங்க, என் பெயரைத் தன் பெயராக்கொண்டு "என் பெயர் கோப்பெருஞ்சோழன்" என்றே சொல்லுவர்; அத்தகையார் தம் நட்புத் திரிந்து என்னை இகழ்ந்து ஈண்டு வாராதிரார்; யான் அரசச்செல்வத்தே சிறப்புற்றிருந்த காலத்தே வந்து என்னைக் கண்டிலராயினும், யான் அல்லலுறும் இக்காலத்தே வந்து காணுகிறார்; அவர் நில்லாது வருவர்; ஆகவே, அவர்க்கு ஓர் இடம் ஒழித்துத் தருக" என்று கூறி உயிர்விட்டான்; அவனைச் சூழ இருந்த சான்றோர்கள் அவன் பிரிவால் உண்டாய துயரினை ஒருவாறு தேறி, அவனுக்கு நடுகல் நிறுவுதலும் புரிந்துவிட்டனர்; சின்னாட்கள் கழிதற்கு முன்பே பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் கூறியவாறே அவண் போந்து, அவன் நிலைகண்டு கண்ணீர்விட்டுக் கலங்கித் தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

பார்த்துப் பழகியறியாத ஒருவர் நில்லாது வருவர் எனச் சோழன் துணிந்துகூறிய கூற்றும், அச்சொல் பழுதாகாவண்ணம் அவண் வந்து சேர்ந்த பிசிராந்தையார் பேரன்பும், சோழன் நடுகல்லைச் சூழஇருந்த புலவர்க்குப் பெருவியப்பாயின; புலவர் பொத்தியார் அவர் செயலை வியத்தலோடு, அவரை வாயாரவும் வாழ்த்தினர்:

"நினைக்கும் காலை மருட்கை உடைத்தே;
எனைப்பெருஞ் சிறப்பினோடு ஈங்கிது துணிதல்;
அதனினும் மருட்கை உடைத்தே, பிறன்நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசை மரபாக, நட்புக் கந்தாக,
இனையதோர் காலை ஈங்கு வருதல்;
வருவன் என்ற கோனது பெருமையும்,
அது பழுதின்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும், வியத்தொறும் வியப்பிறந்தன்றே!"
(புறம் : உகஎ)

பொத்தியார், சோழனைச் சூழ இருந்த பிற சான்றோர்களைப் போன்றே, தாமும் அவனோடு வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தார்; ஆயினும், அவன் அதற்கு இசைந்தானல்லன்; பொத்தியார் மனைவி, அக்காலைக் கருவுற்றிருந்தனர்; மனைவி கருவுற்றிருக்கும் காலத்தே, அவளைத் தனியே வருந்தவிடுத்து உயிர்விடுதல் உயர்ந்தோர் ஒழுக்கமன்று என உட்கொண்ட உரவோனாதலின், அரசன், அவரை அந்நிலையில் வடக்கிருத்தலைத் தடுத்து, "புலவீர்! நின்னைவிட்டு நீங்கா நிழல்போல் நின்னை விரும்பி வாழும் நின் மனைவி, புகழ்சால் புதல்வனைப் பெற்றபின் வருக!" எனக் கூறினர்; அரசன் அன்புடன் கூறிய அச்சொல்லை மறுக்கமாட்டாப் புலவர் பொத்தியார், ஊர் நோக்கிச் சென்றார்; ஊருட் புகுந்த அவர், அங்கே, அரசன் வழக்கம் போல் அமர்ந்து ஆட்சிபுரியும் மன்றத்தை நோக்கினர்; அரசனையின்றிக் கண்ட அம்மன்றக் காட்சி புலவர்க்கு மனக்கலக்கத்தை உண்டாக்கிற்று; தன் யானைக்கு வேண்டும் பெருஞ் சோற்றினை நாள்தோறும் பெரும் பாடுபட்டுச் சேர்த்து அதை உண்பித்து, இவ்வாறு பல்லாண்டு புரந்து, அதைப் பெரிதாக்கிக் கண்டு மகிழ்ந்த யானைப்பாகன் ஒருவன், ஒருநாள் தன் யானை இறந்து விட்டதாக, அது கிடந்த இடம்விட்டுச் செல்வோன், இடைவழியில், அவ் யானையைக் கட்டப்பெறும் கூடத்தினையும், அதன்கண், யானை கட்டப்பெறாமையால் வறிதே கிடக்கும் கம்பத்தினையும் கண்டு, கண்கலங்கி நின்று பெருந்துயர் உறுமாறுபோல் பெருந்துயருற்றார் பொத்தியாரும்.

"பெருஞ்சோறு பயந்து, பல்யாண்டு புரந்த,
பெருங்களிறு இழந்த பைதற் பாகன்
அதுசேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை
வெளில் பாழாகக் கண்டு கலுழ்ந்தாங்குக்
கலங்கினேன் அல்லனோ யானே; பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றம் கண்டே." (புறம்: உஉ0)

இவ்வாறு வருந்தி வாழ்ந்தார் சின்னாள்; அவர் மனைவியாரும், மகனைப் பெற்றெடுத்துவிட்டார்; உடனே, அரசன் வடக்கிருந்த இடம் நோக்கி விரைந்தார்; ஆண்டு, அவர் வருகையினை எதிர்நோக்கி, அவர்க்கு என ஓர் இடம் ஒதுக்கியிருக்கக் கண்டார்; அரசன் செயலை அறிந்து பாராட்டினார்; அன்புடையார், உயிரோடு வாழ்ந்தக்கால் உள்ளன எல்லாம் கொடுத்தலேயன்றி, இறந்தபின்னரும் இருநிதி அளிப்பர்; உடம்பும், உயிரும், ஒன்றையின்றி ஒன்று அமையாத ஒருமைப்பாடு கொண்டிருத்தலைப் போன்றே, ஒருவரையின்றி யொருவர் வாழமாட்டாப் பெருநட்புடையாரையே உலகம் போற்றும்; அத்தகைய நட்புடையார் செத்தும் கொடுக்கும் சிறப்புடையராவர்; அத்தகு சிறப்பு அரசன் கோப்பெருஞ்சோழன்பால் உளது. ஆகவே, இறந்தபின்னரும், தம் மனம்மகிழ இடங் கொடுத்து உதவினான் எனப் போற்றினார்.

"நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடம் கொடுத்து அளிப்ப மன்ற; உடம்போடு
இன்னுயிர் விரும்பும் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே."
(புறம்: உஉந)

சோழன் பிரிவால், பொத்தியார் உளத்தே தோன்றிய உணர்ச்சிகள் உருவெடுத்த அவர் பாட்டின் வழியே, புலவர் நட்பின் பெருமையுணர்ந்த நல்லவர்; அவரைப் போற்றுவோமாக!

## ரு. பொன்மணியார்

பொன்னும், மணியும் பெருகக் கொண்டுள்ளமையால், இவர் இப்பெயர் பெற்றார் போலும்; இவரைப் பெண்பாற் புலவருள் வரிசைசெய்வர் சிலர்; அவ்வாறு கொள்வதற்காம் சான்று எதுவும் இல்லை. இவர், மழை மாறிய கோடையின் கொடுமையினையும், மழைவளங் காக்கவரும் மாரிக்கால மாண்பினையும் நன்கு பாடியுள்ளார்.

மழைவளமற்ற மேட்டு நிலத்தே, மானினங்கள் வெம்மையின் கொடுமை ஆற்றாது மயங்கி வீழ்ந்து கிடக்கும்; உழுதொழில் புரியும் எருதுகள், தம் தொழிலை வெறுத்துச் சோம்பிக் கிடக்கும் எனக் கோடையின் கொடுமையும், மழை பெய்யக்கண்டு, மயில் முதலாம் உயிர்கள் எல்லாம் உவகை மிக்கு ஆடிப்பாடும் எனக் கார்காலக் கவினும் கூறப்பட்டுள்ளன; மயில் முதலாம் உயிர்கட்கு உவகைதரும் அம் மாரிக்காலமே, கணவரைப் பிரிந்து தனித்து வாழும் மகளிர்க்கு மனத்துயர் உண்டாக்கும் இயல்பினையும் உணர்த்தியுள்ளார் புலவர்.

"உவரி, ஒருத்தல் உழாது மடியப்,
புகரி புழுங்கிய புயல்நீங்கு புறவில்
கடிதுஇடி உருமின் பாம்பு பைஅவிய
இடியொடு மயங்கி இனிது வீழ்ந்தன்றே;
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலைப்
பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉம் தோழி! பெரும் பேதையவே." (குறுந் : ருகக)

## ௪௰. பொன்னாகனார்

பொன்னாகனார் எனும் இயற்பெயருடையவர் இவர்; இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது; இவர் வரலாறு குறித்து அறியத்தக்கன இத்துணையே; "ஐய! நெய்தல் நிலத்து மணற்பரப்பில் என் பாவையை வளர்த்தி விட்டு, நீ இருக்கும் இடந்தேடி வந்தனென்; இரவு வந்துற்றது; ஆகவே, ஆரல்மீன் அருந்தி நிறைந்த வயிறுடையவாய் ஆண்டுவரும் நாரைகள், என் பாவையின் நெற்றியை மிதித்துப்பாழாக்குதலும் கூடும்; ஆகவே, யாங்கள் விரைந்து வீடு செல்லுதல் வேண்டும்" எனத்தலைவனை நோக்கிக் கூறிய தோழி கூற்றில், என்பாவை எனவும், வந்தேன் எனவும் ஒருமையாற் கூறியவள், யாங்கள் செல்லுதல் வேண்டும் எனப்பின்னர்ப் பன்மையாற் கூறினமையால், தோழியொடு தலைவியும் ஆண்டுவந்துளாள் என்பதைக் குறிப்பான் உணர்வித்தாள் எனப்பாடிய புலமை நலம் பாராட்டற்குரியதாம்.

"நெய்தற் பரப்பில் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல் தேர்க் கொண்க!
செல்கம்; செலவியங் கொண்மோ! அல்கலும்,
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என் மகள் நுதலே."

(குறுந்: ௧௧௪)

## எ. போத்தனர்

பல்லவ அரசர்கள் போத்தரையர் எனவும் வழங்கப் பெறுவர்; ஆதலின் போத்து என்பது பல்லவரைக் குறிக்க வழங்கும் சொல்லாதல் அறிக. இதனுல், போத்தனர் என்ற பெயருடைய இவர், பல்லவர்த் தொடர்புடையவராவர் எனக் கோடலும் பொருந்தும்.

அருள், பொருள் ஆகிய இரண்டனுள், அருளே, சிறப் புடையதாம் ஆதலினுலும், மக்கள்பால் இருக்கவேண்டிய மாண்புடையதாம் ஆதலாலும், "அருளொடும், அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்" என்பதற் கேற்ப, அருள் அழியவரும் பொருள், பொருளாகாது ஆதலாலும், பொருளினும், அருளேயே அறிவுடையோர் விரும்புவர்; அவ்வாறின்றி, அருளேமறந்து, பொருளே விரும்புதல் உண்மை அறிவாகாது. இந்த உண்மையைப் புலவர் போத்தனர் தம்முடைய பாட்டில் வைத்து விளக்கி யுள்ளார்.

"அருளன் ருக, ஆள்வினை ஆடவர்
பொருள் எனவலித்த பொருளல் காட்சி."

(அகம்: எகு)

இளமை கழிந்தால், அது மீண்டு வருதல் இல்லே; அதை மீட்டுக் கொணர்வார் எவரும் இலர்; இளமை கழிந் தால் கழிந்து விட்டதே என்று கலங்குவதல்லது அதை மீளப் பெறுதல் இயலாது என்பதைப் பிரிந்து சென்ற தலைவர், "சென்றுபடு விறற்கவின் உள்ளி, என்றும் இரங்கு நர் அல்லது, பெயர்தந்து யாவரும் தருநரும் உளரோ இவ் வுலகத்தானே" (அகம்: எரு) என்று தலைமகள் கூறினுள் எனக் கூறி விளக்கியுள்ளார்.

## அ. போதனார்

வரலாறு விளங்காப் புலவர்களுள் இவரும் ஒருவர். போதனார் என்பது, தாய்தந்தையர் இட்ட இயற் பெயரா, அல்லது பிற்காலத்தார் இவர் சிறப்பறிந்து இட்டு வழங்கிய காரணப்பெயரா என்பது விளங்கவில்லை; நற்றிணைப் பாக்களைப் பாடிய புலவர்களுள், இவர் பெயரே பூண்டார் மற்றொருவரும் உளர்; மதுரைச் சுள்ளம் போதனார் என்ற பெயரை நோக்குக.

மனைத்தக்க மாண்புடைய மகளிராவார், தாம் பிறந்தகத்துப் பெருவாழ்வு வேண்டாராய், தாம் புகுந் தகத்துப் பொருள் நிலைக்கேற்ப வாழ்வுவேண்டும் பெருந்திருவினராவர்; அத்தகையார் அருகிய இக்காலம் போன்றதன்று பழந்தமிழ்க்காலம்; மனைமாட்சி நிறைந்த மகளிரே மல்கிய காலம் அக்காலம்; அம்மாண்பு நிறை மகளொருத்தியின், மனைவாழ்க்கைக் காட்சியை, அவள் தாய்வழியே காட்டியுள்ளார் புலவர்.

மணவீடு புக்க தன் மகள், ஆண்டு நடாத்தும் இல்லறச் சிறப்பினைக்காணச் சென்றாள் தாய் ஒருத்தி; அத்தலைவன் இல்லமோ, வறுமைநிறைந்த வாழ்வுடையது; ஆனால், தன் மகளோ, தந்தை இல்லத்தே உள்ள வளம் மிக்க செல்வத்தையும் நினைக்கிறாள் இல்லை; முப்பொழுதும் உண்ணுதற்கேற்ற வாய்ப்பு இன்மையால், பொழுதுமாறி உண்ணுகின்றனர்; அந்நிலையிலும், அவன் கூற்றிற்கு மறுத்துரை கூறாமல், அவன் குறிப்பறிந்து நடக்கின்றாள் மகள்; இவற்றையெல்லாம் கண்டாள் தாய்; பண்டை நிகழ்ச்சியொன்று அவள் மனக்கண் முன் தோன்றி நின்றது:

அன்பே உருவாய் அமைந்த செவிலி, ஒருகையில் தேன்கலந்த இனிய சுவைமிக்க பாற் சோறு நிறைந்த ஒளி விடும் பொற்கலத்தையும், மற்றொருகையில், மெல்லிய கோலொன்றையும் ஏந்தி வருகின்றாள்; முத்துப் பரலிட்ட சிலம்பணிந்த தலைவி, அச்சிலம்பொலிக்க ஓடி விளையாடுகின்றாள்; அவளை நெருங்கிய செவிலி, சோற்றை உண்ணு

மாறு வேண்டுகிறாள்; மகள் மறுப்பதுகண்டு அவளைப்பிடித்து உண்பிக்க முயலுகின்றாள்; தாய் பிடிக்க வருவதறிந்து மெல்ல ஓடுகின்றாள் தலைவி; செவிலியும் தொடர்ந்து ஓடுகிறாள்; ஓடியும், பிடிக்க முடியாமல், இறுதியில் இளைத்து நின்றுவிடுகிறாள்; அந்நிலையில், முன்றிற்கண் போடப்பட்டிருக்கும் முல்லைப்பந்தரின் அடியில் ஓடி நின்ற தலைவி "உண்ணேன் காண்" என்று கூறி மறுத்துவிட்டு ஆடத் தொடங்கி விடுகிறாள்; மகள்தன் இளமைப்பருவத்து அச்செயலையும், இன்று அவள் கடாத்தும் இல்லறச்சிறப்பினையும் ஒருங்கு கண்ட தாய், "அன்று, அறுசுவையுண்டியை அமர்ந்து ஊட்டவும், உண்ண மறுத்த இவள், இன்று பொழுது மறுத்துண்ணும் இவ்வாழ்க்கையினைப் பெரிதும் விரும்புகின்றனளே! தலைவனொடு கூடிவாழும் வாழ்க்கையில் அத்துணை இன்பத்தினைக் காண்கின்றனள்போலும்! அன்று 'உண்' என ஏவவும், அவ் ஏவலை மறுத்து உண்ணாது ஓடி ஆடிய இவள், இன்று, தலைவன் சொற்பிழையாது ஒழுகும் ஒழுக்கத்தினையும், அவன் குறிப்பறிந்து பணியாற்றுதற் கேற்ற பேரறிவினையும் யாண்டுப் பெற்றனளோ!" என வியந்து மகிழ்ந்து கூறினாள்.

"பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்,
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
'உண்' என்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,
அரிநரைக் கூந்தல் செம்முதுச் செவிலியர்,
பரீஇ மெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி,
அறிவும், ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே."
(நற்: ௧௧௦)

## ௩௰. மதுரைக் கண்ணனார்

கண்ணனார் என்ற பெயரைப் புலவர்கள் தம் இயற்பெயராகப் பயில வழங்கினர்; கண்ணனார் என்ற பெயருடையார் பலராதலின், இவர் மதுரைக் கண்ணனார் எனப் பெயர் பெற்றார்.

ஒரு தலைவன் பொருள் கருதிப் பிரிந்து பலநாள் கழித்து வீடு திரும்பினான்; அவன் பிரிந்தமையால் வருந்திய அவன் மனைவி, அன்று இரவு அவனோடு மகிழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள்; அன்றைய இரவு அவளுக்குப் பேரின்பம் தரும் இரவாய்த் தோன்றிற்று; அதனால் அவ்விரவு நீண்டு தோன்ற விரும்பிற்று அவள் உள்ளம்; அவ்வாறு அவள் உள்ளம் எண்ணிக்கொண்டிருக்கும் போதே, எங்கிருந்தோ வந்தது சேவல் ஒன்றின் குரல்; பொழுது விடிந்துவிட்டமை யறிந்து வெளியே வந்தாள்; தன் வீட்டுக் கூரைமீது அக் கோழிச்சேவல் நின்று கூவுவதைக் கண்டாள்; அதன் பருத்துச் சிவந்து தோன்றிய கொண்டை, கொத்துக் கொத்தாக மலரும் செங்காந்தள் மலர்போல் தோன்றி அழகு தருவதாயினும், அதன் செயல் துயர் தந்ததை எண்ணினாள்; தலைவனோடு நெடிது நேரம் துயில விரும்பிய வேட்கை உடையளாதலின், தானே புலர்ந்த பொழுது, அச் சேவல் கூவியதால் புலர்ந்ததாகக் கொண்டாள்; உடனே அச் சேவல்மீது அவளுக்கு மாறாச்சினம் பிறந்தது; "என் இனிய துயில் கெடுத்த ஏ சேவலே! நின்னை உயிரோடு இனி விடுவதில்லை; இரவில் என் வீடு வந்து இல்லுறை எலிகளைத் தேடித் திரியும் காட்டுப் பூனைக்கு நீ விரும்பிய உணவாவாய்; இன்று அப்பூனை வரட்டும்; நின்னைப் பற்றி அதன்பால் ஒப்படைத்து விடுகின்றேன்; அதனால் கொல்லப்பெற்று, அதற்கு இனிய உணவாகித் துயர் உறுவாயாக!" என வன்சொல் கூறிநின்றாள்.

தாம் அரிதின்பெற்று நுகரும் இன்பத்திற்கு இடையூறு உண்டாயக்கால், அதனால் உள்ளம் உடைந்து சினம்

பிறந்தவழி, அறிவும் அழிய, அவ் இடையூற்றிற்குக் காரணமாகார் மாட்டும் சினந்து சீறிவிழுவது மக்களின் மனப் பண்பாம்; அவ்வாறு இன்ப இடையூறுற்று தாம் வருந்துங்கால், பிறர் மகிழ்ந்திருப்பக் காணவும் மனம் பொறார்; இம் மனிதப் பண்பினைத் தன் இன்பம் இயல்பாக இடையூறு உற்றதாகவும், எழுந்து நின்றவழி, தன் கண்முன் முதற்கண் நின்ற சேவலை, அது கவின் மிக நின்ற அந்நிலையில் கண்டு பழிக்கும் தலைமகள் ஒருத்தியின் வழியாக உணர்த்தியுள்ளார் புலவர்:

“குவி யிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத்து இல் எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கு இரையாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே! நெடுநீர்
யாணர் ஊரன் தன்னொடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோ யே.” (குறுந் : ௧௦௭)

# ௬0. மருதன் இளநாகனார்

இவர் பெயர், மதுரை மருதன் இளநாகனார் எனவும், மருதன் இளநாகனார் எனவும் ஏடுகளில் காணப்படும். மதுரைப் பூதன் இளநாகனார் என்ற பெயருடையார் ஒருவரும், மதுரைப் பெருமருதன் இளநாகனார் என்ற பெயருடையார் ஒருவரும் உளராதலின், இவர் மதுரை மருதன் இளநாகனார் என அழைக்கப்பெற்றார். இவர் இயற்பெயர் இளநாகனார் என்பது; இவர் பெயர்க்கு முன்வரும் மருதன் என்ற சிறப்பு, இவர் தந்தையார் பெயரைக் குறிக்க வந்ததாம். அது, இவர் மருதத்திணை பாடிய சிறப்புக் குறித்து வழங்கப்பட்டதாம் என்று சிலர் கூறுகின்றனர். அது, இவர் மருதம் பாடிய சிறப்பால் வந்ததாயின், மதுரைப் பெருமருதன், மதுரைப் பெருமருதன் இளநாகனார் ஆகியோரும், முறையே பெருமருதன், மருதன் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளமையால், அச் சிறப்பு, அவர்க்கும் அவர் மருதம் பாடிய சிறப்பால் வந்தது எனக் கூறல்வேண்டும்; ஆனால், அவ்வாறு கூறப்படுவதில்லை ஆதலானும், அஃது, இவர்க்கு மருதம் பாடிய சிறப்பால் வந்ததாகவே கொள்வதாயின், இவர் பெயர், பாலை பாடிய சிறப்புடைய பெருங் கடுங்கோ, பாலைபாடிய பெருங் கடுங்கோ எனவும், வெறிபாடிய சிறப்புடைய காமக் கண்ணியார், வெறிபாடிய காமக்கண்ணியார் எனவும் அழைக்கப் பெறுதலேபோல், மருதம் பாடிய இளநாகனார் என அழைக்கப்பெறுதல் வேண்டும்; அவ்வாறு அழைக்கப் பெறவில்லை ஆதலானும், பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடிய அகத்துறைப் பாக்கள் அறுபத்தேழும், பாலைத் திணையையே தழுவி வந்துள்ளன; ஆதலின், அவர்க்குப் பாலை பாடிய என்ற சிறப்பு ஏற்புடையதாகும். மருதன் இளநாகனார் பாடிய அகத்துறைச் செய்யுட்கள் எழுபத்து நான்கு எனின், அவற்றுள் மூப்பத்தாறு செய்யுட்கள் மருதம் அல்லாத பிற திணைகளைத் தழுவிவந்த செய்யுட்களாம். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய

வற்றுள் இவர் செய்யுட்களாக வந்துள்ளன முப்பத்தொன்பது செய்யுட்கள்; இதில் மூன்றுமட்டுமே மருதத்திணை தழுவி வந்துள்ளன; ஏனைய முப்பத்தாறு பாடல்கள் பிற திணை தழுவி வந்துள்ள பாடல்களாம். இவ்வாறு, தாம் பாடிய பாக்களுள் பாதிக்கும் குறைவான பாடல்களே மருதத்திணை சார்ந்து வந்ததாகவும், அதனால், இவர்க்குப் பெயர் வழங்கினார் எனல் பொருந்தாது ஆதலாலும், மருதத்திணை பாடிய சிறப்புக் குறித்து வழங்கப்பெறும் மருதம் பாடிய என்ற சிறப்பு, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்ற சேர அரசர் வழிவந்த புலவர் ஒருவர்க்குக் கொடுக்கப்பட்டுளது; அவர் பாடிய செய்யுட்கள் அனைத்தும் மருதம் தழுவியே நிற்பதால், அச்சிறப்பு அவர்க்கே பொருத்தமுடைத்தாம் ஆதலாலும், மருதன் இளநாகனார் பெயர்க்கு முன்வரும் மருதன் என்ற சிறப்பு, இவர் மருதத்திணை பாடினார் என்பது குறித்து வந்ததன்று; புலவர்கள் தந்தை பெயரை, அப் புலவர்தம் பெயர்முன் இணைத்தும் வழங்கும் வழக்கத்திற்கு ஏற்ப வந்த, இளநாகனாரின் தந்தை பெயரைக் குறிக்கவந்ததே எனக் கொள்க.

மதுரை மருதன் இளநாகனார், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என்ற இரு பாண்டிவேந்தர்களையும், நாஞ்சில் வள்ளுவன், பிட்டங் கொற்றன், சிறுகுடிவாணன் ஆகிய குறுநிலத் தலைவர்களையும், கழுவுள் என்பானையும், கொங்கர், கோசர், மழவர், வேளிர் ஆய வீரமரபினரையும், மதுரை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் ஆகிய பாண்டிநாட்டுப் பேரூர்களையும், ஊணூர், சாய்க்கானம், செல்லூர், நியமம் போன்ற கோசர்க்குரிய ஊர்களையும், வேளிர்க்குரிய வீரை நகரையும் தம்முடைய பாக்களில் ஆங்காங்கே எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார்.

மதுரை மருதன் இளநாகனார், கற்றறிந்தார் போற்றும் கலித்தொகையில், மருதத்திணை தழுவிய பாடல்கள் முப்பத்தைந்தையும், நற்றிணையில் பன்னிரண்டு பாடல்களையும், குறுந்தொகைக்கண் நான்கு செய்யுட்களையும்,

அகநானூற்றில் இருபத்துமூன்று செய்யுட்களையும், புறநானூற்றில் ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். நக்கீரர் இயற்றியது எனப்படும் களவியல் உரைக்கண், "உருத்திர சன்மனைத் தால் வேண்டுமென்று வேண்டி, கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண் சாந்தணிந்து, கன்மாப் பலகையேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதன் இளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிறுத்து," என்ற தொடர் காணப்படுவதால், இறையனார் களவியலுக்கு இவரும் ஓர் உரை யெழுதியுள்ளார் என்பது புலனாம்.

இனி, மதுரை மருதன் இளநாகனார் வேறு; மருதன் இளநாகனார் வேறு; மதுரை மருதன் இளநாகனார், இறையனார் களவியலுக்கு உரை வகுத்தவர்; புறத்தில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடியவர்; மருதன்இளநாகனார், மருதக்கலியைப் பாடியவர்; பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, நாஞ்சில் வள்ளுவன் ஆகியோரைப் பாடியவர் என்று கொள்வர், புறநானூற்றுப் பதிப்பாசிரியர் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.

அவர் அவ்வாறு கொள்வதற்குக் காரணமாயது, புறநானூற்றுப் பாக்களின் அடியில் காணப்பெறும் கொளுக்களில், மதுரை மருதன் இளநாகனார் எனவும், மருதன் இளநாகனார் எனவும் வேறுபடத் தோன்ற எழுதப் பட்டிருப்பதேயாம்; ஐயரவர்களே, அக் கொளுக்களில், சில, மதுரைச் சித்தலைச் சாத்தனார் எனவும், சில சித்தலைச் சாத்தனார் எனவும் கூறவும், அவ்விரு பெயர்களும் வேறு வேறு இயல்பினராய இருவரைக் குறிக்கும் எனக் கொள்ளாது, இவ்விருபெயர்களும், மதுரைக் கூலவாணிகன் சித்தலைச் சாத்தனார் ஒருவரையே குறிக்கும் எனக் கொண்டுள்ளாராதலாலும், சில புலவர் பிறந்த ஊர்ப் பெயர்களை இணைத்து வழங்க, சில, அவற்றை இணைக்காது வழங்கவருவது, ஏடுகளில் காணப்படும் இயல்பு ஆதலாலும்,

கொளுக்களில் அவவாறு உள்ளன என்பதை மட்டுமே கொண்டு மருதன் இளநாகனார் இருவராவர் எனக் கொள்ளுதல் பொருந்துவதன்றாம்.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், மிக்க பேராண்மையுடையவன்; இவனைப் பாடிய புலவர் பலரும் இவன் ஆண்மையினையே பாராட்டியுள்ளனர்; மக்கள் நலத்தை மாண்புறப் பெற்றவன்; இவ்வாறு படையாலும், புதல்வர்களாலும் பொலிந்து தோன்றினமையால், தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு விரைந்து பரிசளிக்கும் பண்பிலாதானவன். அதனால் இவனைப் பாடிய புலவர்களுள் ஆவூர் மூலங்கிழாரும், வடமவண்ணக்கன் பேரிசாத்தனாரும் பெரிதும் வருந்திப் பாடியுள்ளனர். பேராண்மை மிக்க இவன் பெருங்குணனிலனாதல் அறிந்த புலவர் மதுரை மருதன் இளநாகனார், அவனுக்கு அறமுரைத்து அறிவுடையனாக்க விரும்பினார். அவனை அடைந்து, "சிவபிரானுக்குக் கண்கள் மூன்றாயினும் அவற்றுள் அமரராலும் வணங்கப்படும் சிறப்புடையது, அவர் பகைவரைப் பாழாக்கிய நெற்றிக்கண்ணே; அதைப்போல், தமிழ்நாட்டு வேந்தர் மூவரேயாயினும், அவருட்சிறப்புடையோன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனே எனப்புகழ்ந்தார்; "வேலன்று வென்றி தருவது; மன்னவன் கோல்; அதூஉம் கோடாதெனின்" என்பவாகலின், மறப்படையினும், அறப்படையே அரசர்க்கு வேண்டும் என்பதை எடுத்துக்கூற விரும்பினார்; "வேந்தே! கடுஞ்சினமும், பகைவர் படையைப் பாழாக்கும் பேராண்மையும் உடையது நின் யானைப்படை; விரைந்த செலவினையும், போர் வேட்கையினையும் உடையது நின் குதிரைப்படை; நின்று பறக்கும் கொடியும், நிமிர்ந்த நடையும் உடையது நின் தேர்ப்படை; உள்ளத்தே உரனும், போர் என்றவுடனே பூரிக்கும் தோளும் உடையர் நின்வீரர்; இவ்வாறு மாட்சிமையுற்ற பெரும் படையினை உடையை நீ" என அவன் படைப்பெருமையினைக் கூறிப், பின்னர், "இவ்வாறு, பெரும் படையால் பாடுற்றாய் எனினும், நின் ஆட்சியின் அழியலாகாத் திண்மை, அப்

படையால் உண்டாதல் இல்லை; நின் நாட்டு மக்கள், அல்லற் பட்டு ஆற்றாது அழஅழ ஆளும் கொடுங்கோலனாயின், அவர் அழுது சிந்திய கண்ணீர், நின் படைச்செல்வத்தைப் பாழாக்கும் பெரும் படையாய் மாறும். ஆதலின், நின் ஆட்சியின் அழிவின்மை, அவர் கண்ணீர் காணுவண்ணம் ஆளும் நல்லாட்சியால் ஆம்" என்று அவன் நால்வகைப் படையின் சிறுமையினையும், நல்லாட்சியின் பெருமையினையும் எடுத்துக் கூறினார். நல்லாட்சியின் பெருமை கூறிய அவர், அந்நல்லாட்சியாவது யாது என்பதையும் விளக்குதல் வேண்டும் என விரும்பினார். "இவர் நம்மவர்; ஆகவே, அவர் அறனல்லன செய்யினும் விடுக; இவர் நம் பகைவர்; ஆகவே, அவர் பிழையிலராயினும் ஒறுக்க எனக் கொள்வது செங்கோலன்று; கொடுங்கோல்; அஃது அரசர்பால் இருத்தலாகாது; இவ்வாறு கோல் கொண்டு குடிபுரக்கும் கொற்றவன்பால் ஆண்மையும், அருளும், கொடையும் குன்றாது நின்று நிலைபெறுதல் வேண்டும்; ஆண்மை, எதையும் எரித்து அழிக்கவல்ல ஞாயிற்றின்பால் உளது போன்ற பேராண்மை இருத்தல்வேண்டும்; அருள், தன் தண்ணொளியால் உலகத்து உயிர்கட்கு இன்பமூட்டும் திங்கள்பால் உளதுபோன்ற தண்ணருள் நிலைபெறுதல் வேண்டும்; கொடை, இங்குப் பெய்யலாம், இங்குப் பெய்தல் கூடாது என்ற வேற்றுமை எண்ணமின்றி, எங்கும் ஒரு படித்தாகப் பெய்யும் இயல்பினதான வானமே போல், இவர்க்குக் கொடுக்கலாம்; இவர்க்குக் கொடுத்தலாகாது என்ற வரையறையின்றி வழங்கும் கொடைக்குணம் குன்றாமல் நிற்றல் வேண்டும். ஓர் அரசன், இத்தகைய பண்புடையனாயின், அவன் நாட்டில் பொருள் இன்மை கூறி இரந்து வாழ்வார் இலராவர்" என்ற நல்லாட்சியின் பண்பினை எடுத்தோதி, அத்தகைய ஆட்சியுடையனாய் ஆண்டுபல வாழ்ந்து ஆண்டு உயர்வாயாக! என்று வாழ்த்தி வழி காட்டினார்:

"கறைமிடற் றண்ணல், காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!

கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும்,நெஞ்சுடையபுகன் மறவரும்என
நான்குடன் மாண்டதாயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;
அதனால், நமர் எனக்கோல் கோடாது,
பிறர் எனக் குணங் கொல்லாது,
ஞாயிறு அன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்களன்ன தண்பெரும் சாயலும்,
வானத்தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி, இல்லோர் கையற
நீ நீடுவாழிய! நெடுந்தகை!" (புறம் : ருரு)

அன்று, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே, வழங்கிய இவ் அரசியல் அறிவுரை, இன்று உலகிடை வாழும் உயர்ந்த அரசியல் தலைவர்கள்தம் உள்ளத்தைத் தொடும் நாள் எந்த நாளோ? அவர்க்கு அறிவுரை கூறவல்ல மருதன் இளநாகனாரை இம்மண்ணுலகம் என்று காணுமோ?

மதுரை மருதன் இளநாகனார் காலத்தே, பாண்டி நாட்டின் மற்றோர் பகுதியைக் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என்பான் ஆண்டிருந்தான்; அவனை எதிர்த்தார் எவரும் வாழ்ந்தவரல்லர்; அவன் இத்தமிழகம் எல்லோர்க்கும் பொது என்ற சொல் கேட்கப்பொறா மண்ணாசை மிக்கவன்; ஆசையோடு, அவ்வாசையைக் குறைவற நிறைவேற்றிக்கொள்ளற்கு வேண்டும் ஆற்றலும் உடையவன்; அவன் ஒருகால் வடநாடு நோக்கிப் படையெடுத்துச்செல்ல எண்ணுகின்றான் என அறிந்தார் மதுரை மருதன் இளநாகனார்; அவன் செல்லும் நாட்டின் நில நீர் வளங்களையும், ஆண்டுவாழ் மக்கள் மனநலத்தையும் அறிந்தவர் இளநாகனார். அந்நாடு நெய்தல் வளமும், மருத மாண்பும் ஒருசேரப்பெற்றது; மீன் சுடுகின்ற புகை சுடுவதால் உண்டாய மணத்தினையும் உடன்கொண்டு எழுந்து பரந்து, வயலிடங்களைச் சூழஉள்ள மருதமரக்கிளை களில் படிந்துகிடக்கும் காட்சியினை அந்நாட்டில் உள்ள ஊர்

தோறும் கண்டுகண்டு களித்தவர்; அந்நாடுகள் பாழாம் என்ற எண்ணம் அவர்க்கு இணையிலாத் துயரைத் தந்தது; பகைவர் படையால் பாழான ஊர்களைப் பார்த்து வருந்தியவர் அவர்; பகைவர் படையால் பாழான ஊர்களில் மக்கள் வாழார்; மக்கள் வாழாமையால், ஆண்டுறை கடவுளர்க்குப் பலி கிடைத்தல் இன்றாம்; பலி பெறுதல் இன்றாகவே, அக்கடவுளரும் தாம் உறைந்த கம்பங்களை விட்டு வெளியேறுவர்; இவ்வாறு கடவுளர் போன கம்பங்கள் அவ்வூர் மன்றங்களில் பொலிவிழந்து நிற்கும்; வளம் பெற்று வாழ்ந்த காலத்தே அவ்வூர் மன்றங்களில் ஆண்டு முதிர்வால் தொழில் பெறாத பெரியோர்கள் அமர்ந்து ஆடிய சூதாட்டிடங்களில், காட்டுக்கோழிகள் முட்டையிட்டு வாழும். இவ்வாறு பாழான ஊர்களைக் கண்டு கலங்கிக் கண்ணீர்விட்டவர் புலவர். ஆதலின், பாண்டியன் படையெடுப்பால், பாழாகும் அவன் பகைவர் நாட்டு வளத்தினை எண்ணி எண்ணி உருகினார்; இப்படையெடுப்பினைத் தடுத்தல் தம்மால் இயலுமா என்று எண்ணினார்; முயன்று பார்க்க முனைந்தார்; அவனை அடைந்தார்; "வேந்தே! இப் படையெடுப்பு யாரை நோக்கி? நீ நினைத்தால், நின்னால் அழிவுறாதவரும் உளரோ? எங்கு, எப்போது எவரை அழிக்க எண்ணினும் அஃது எளிதில் இயலும் நினக்கு; அத்தகையானாய நின்னால் அழிவுறத் தக்கார் யாவர்? அவர் நாட்டு அழிவினை எண்ணி வருந்துகின்றேன்; அந்தோ! அவர் மிகவும் வருந்தத்தக்காராவர்! அவர்தம் நாட்டுவளம் இத்துணைச் சிறப்புடைத்து! அவர் நாடு நின்படையால் உறப்போகும் கேடு இத்துணைப் பெரிதாம்! வாழ்க நின் கொற்றம்; வருந்துக நின் பகைவர்;" என்று கூறி, அவன் வெற்றியை வியந்து பாராட்டுவார்போல், அவன் பகைவர் நாட்டுப் பாழ்படுநிலை அவன் கண்முன் தோன்றி, அவன் உள்ளத்தே அருள்நோக்கம் உண்டாகப் பாடினார்.

அவ்வாறு பாடிய பாட்டில், மாறன் வழுதி, போரெண்ணம் இன்றி மடங்கி இருத்தலொழிந்து, போர் வேட்டு

எழுவனாயின் காலமோ, இடமோ கருதவேண்டியதிலனாய்த் தான் வேண்டும் காலத்தே, வேண்டிய இடத்தே விரும்பிய பகைவரைப் பாழாக்கும் இயல்புடையான் என்பதை விளக்க, முறையில் உறங்குவதினின்றும் விழித்தெழுந்த புலி, இரைவேட்டுப் புறப்படின், அது தான் விரும்பிய இடத்தே விரும்பிய அப்போதே, விரும்பிய இரையினைப் பெற்றுப் பசியாறும் செயலை உவமை கூறிய திறம் உணர்ந்து மகிழ்தற்காம்.

இவ்வாறு பாண்டியனைப் புலியொடு உவமைகூறி உயர்த்திப் பாராட்டுவார்போல், "வேந்தே! நின் உள்ளத்தே அருள்நோக்கமற்று, மறநோக்கம் கொண்டனை ஆதலின், தக்க இன்ன; தகாதன இன்ன என்று ஒக்க உணரும் உணர்வினை இழந்த விலங்கினைப் போன்றனை" என்று இழித்துக்கூறிப் பழித்துள்ள புலமை பாராட்டி மகிழ்தற்குரியதாதல் காண்க.

"அணங்குடை நெடுங்கோட்டு அளையகம் முனைஇ
முணங்குநிமிர் வயமான் முழுவலி ஒருத்தல்
ஊன்நசை உள்ளம் துரப்ப, இரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு,
வடபுல மன்னர் வாட, அடல்குறித்து
இன்னா வெம்போர், இயல்தேர் வழுதி!
இதுநீ கண்ணியதாயின், இருநிலத்து
யார்கொல் அளியர்? தாமே? ஊர்தொறும்
மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி
வயலுழை மருதின், வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரின் ஒரீஇ, இனியே,
கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரைமூதாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் நிறையப், பல்பொறிக்
கானவாரணம் ஈனும்
காடாகி விளியும் நாடுடை யோரே." (புறம்: ௫௨)

இவ்வாறு பாண்டியர் இருவரைப் பாராட்டிய புலவர் மதுரை மருதன் இளநாகனார், பகைவர் அரண்மிக்க மதிற்புறத்தே போந்தாராகவும், அவரைத் தாக்கி, அவர் முரசுகளையும் கைக்கொண்டதோடு அமையானாய், அவரை, அவர் நாடுவரை துரத்திச்சென்று, ஆங்கு அவரையும் அழித்து, அவர் அரண்களையும் கைக்கொண்ட செழியன் ஒருவனையும்,

> " நண்ணார்
> அரண்தலை மதிலராகவும், முரசுகொண்டு
> ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்." (நற் : ௩௯)

பகைவர் புறங்கொடுத்து ஓடக்கண்ட பேராண்மையினையும், முழந்தாள் அளவும் தாழ்ந்து தொங்கும் நீண்ட கைகளையும் உடையவன்; வெல்லும் போர்பல கண்டவன்; பகைவரைப் பாழ்செய்து வென்ற புகழ் நிறைந்த வேலேந்தியவன் என ஒரு வழுதியையும்,

> " ஒன்னார்
> ஓடுபுறங் கண்ட, தாள்தோய் தடக்கை
> வெல்போர் வழுதி, செல்சமத் துயர்த்த
> அடுபுகழ் எஃகம்." (அகம் : ௩௧௨)

வேம்பின் மலர்மாலை அணிந்தவன்; பொதியமலை உடையவன்; அவன் பொருத போர்க்களத்தே பகைவர் படையும், அரணும் பாழாகும் என ஒரு பாண்டியனையும் பாடிப் பாராட்டியுள்ளார் :

> " சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
> முனையரண் போல உடைந்தன்று." (மருத. கலி : உ௭)

பாண்டியர்களைப் பாராட்டிய மதுரை மருதன் இளநாகனார், தம் பாண்டிநாட்டுப் பற்று அவ்வளவோடு அமைதி உறாமையான், அப்பாண்டியர்க்குப் படைத்துணை வழங்கும் வீரனும், ஔவையார் போன்ற அருந்தமிழ்ப் புலவர்களால் பாராட்டப்பெறும் பெருங்கொடையாளியும் ஆய நாஞ்சில் வள்ளுவனைப் பாடியுள்ளார். பேரரசர் இருவரை ஒவ்வொரு பாட்டால் பாராட்டிய புலவர், நாஞ்சில்

வள்ளுவனைப் பாராட்ட இரு பாக்கள் பாடியுள்ளார் எனின், இவன் அவ்விருவரினும் சிறந்தான் என்பதில் ஐயமுண்டோ?

நாஞ்சில் வள்ளுவனைக் காணவேண்டின் நாடுபல நடந்து செல்லுதல் வேண்டும்; புலவர், நெடுவழிகண்டு மருளாது தம் சுற்றம் சூழப் போந்து பாடினார்; தாம் கடந்து வந்த வழியின் நெடுமையினையும், கொடுமை யினையும், அவர் அவன்பால் கூறும் திறம் வியத்தற்குரி யது; நெடுந்தூரம் என்பதைக் குறிக்க இடைக்கால எழுத் தாளர், காடு, மலை, வனம், வனாந்தரங்களைக் கடந்து சென் றார் என்று எழுதுவர்; அதைப் போல் புலவரும், நாடும், காடும், மலையும், மடுவும் நிறைந்த நெடுவழி நடந்து வந் ததை, "நாஞ்சில் வள்ளுவ! யான் ஆனினம் வாழும் அரும் வழி பலவற்றை நடந்து கடந்தும் மானினம் மகிழ்ந்து ஆடும் மலைபல ஏறி இறங்கியும், மீன்பல நிறைந்த நீர் நிலை களை நீந்தியும் வந்து சேர்ந்தேன்; என்னுடன் வரும் சிறு வர், உடன் கொணர்ந்த பொதிமூட்டையால் வருந்தி இளைத் தனர்; என் பின்வரும் விறலி, தன் அடிவருந்த ஏறி இறங் கிய மலை பலவாதலின் இடைவருந்தி இளைத்தாள்" என்று கூறினார்.

"ஆனினம் கலித்த அதர்பல கடந்தும்,
மானினம் கலித்த மலையின் ஒழிய,
மீனினம் கலித்த துறை பல நீந்தி!'

"சுவல் அழுந்தப் பலகாய
சில் ஓதிப் பல் இளைஞருமே;
அடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே." (புறம்: கநஅ, க)

நாஞ்சில் வள்ளுவனைக் கண்ட புலவர், அவன், பகைவர் படைகண்டு பயந்து பணிவதோ, புறங்காட்டி ஓடுவதோ புரியானைப் பாய்ந்து அழிக்கும் பேராண்மை உடையனா தலையும், அவன் நாஞ்சிற் பொருப்பின் உயர்ந்த நிலையினை யும் பாராட்டினார்; பின்னர், நாஞ்சிற் பொருநனுக்கும் அவன் வேந்தனாய பாண்டியனுக்கும் உள்ளம் நெருங்கிய

நட்புடைமையினை விளக்குவார், "பொருந! நீ வேண்டுவன, வற்றை விரும்பி அளிக்க மறுக்கான் நின் வேந்தன்; நீயும், அவன் பொருட்டு உயிர் விடற்கும் அஞ்சாய்" என்று கூறினார். இவ்வாறு அவன் பெருமையினைப் பாராட்டிய புலவர், தம்வறுமையின் கொடுமையினையும், அவன் போர் வேட்கையினையும் ஒருங்கே விளக்குவார், "நாஞ்சில் வள்ளுவ! கனி பழுக்கட்டும்; இருந்து உண்ணலாம் என்று காத்திருந்து பொருள்பெறும் செல்வவளம் உடையவன் அல்லன் யானும்; நீயும், ஒருநாள் திடும் எனப் போர் ஒன்று தோன்றக் கண்டு, விரைந்து போதலும் உண்டாம்; அதனால், யானும் என் சுற்றமும் வருந்துதலும் உண்டாம்; ஆகவே இன்னே அளித்து அருளுதல் வேண்டும்," என்று வேண்டினார். இறுதியாக, விரைந்து பொருள் பெறுதல் வேண்டும் என்பதற்காகவே, புலவர், இவ்வாறு தாம் மிக மிக வறுமையுடையார் போலவும் கூறுகிறார்; வள்ளுவன் பால் இல்லாத பண்புகளை இருப்பதாகக் கூறியும் பாராட்டுகிறார் என்று எங்கே இவ்வுலகம் கூறிவிடுகிறதோ என்ற அச்சம் புலவர்க்கு உண்டாகி விட்டது; தாம் அவ்வியல்புடையாரல்லர்; தம் பால் அப்பண்பு எப்பொழுதும் இருந்ததில்லை; வாழ்தல் வேண்டிப் பொய் கூறும் புல்லன் அல்லன்; எத்தகைய இடர் உற்ற காலத்தும் மெய் கூறுவதே தம் பண்பாம் என்று எடுத்தோதியும் அமைந்தார்;

"வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன்; மெய் கூறுவல்;
ஓடாப் பூட்கை உரவோர் மருக!
உயர்சிமைய, உழாஅ நாஞ்சிற் பொருந!
மாயா உள்ளமொடு பரிசில் உன்னிக்
கனிபதம் பார்க்கும் காலை யன்றே;
ஈதல் ஆனான் வேந்தே; வேந்தற்குச்
சாதல் அஞ்சாய் நீயே; ஆயிடை
இருநிலம் மிளிர்ந்திசி னாஅங்கு, ஒருநாள்
அருஞ்சமம் வருகுவ தாயின்,
வருந்தலும் உண்டென் பைதலங் கடும்பே."

(புறம்: ௧௩௯)

நாஞ்சில் வள்ளுவன் கொடைப்புகழை இத்துணையும் புகழ்ந்தும் அமையாத புலவர் அவன் தன்பால் வந்து இரந்து நிற்பாரை இன்றுபோய் நாளைவருக எனக் கூறும் இயல்புடையானல்லன்; "மாறிவாவென மொழியலன்" என்றும், தாம் வாழும் மரப்பொந்தின்கண் பெரியபெரிய தினைக்கதிர்களை வைக்கப்பெற்ற கிளிகள், அவற்றை உண்ணப் பிறரைக் கேட்கவோ, அவரைக் கண்டு அஞ்சவோ வேண்டியதின்றி, தாமே வேண்டியாங்கு விரும்பி யுண் பதைப் போல், புலவர்களும், பிறஇரவலர்களும், இவன் பால் உள்ள பொருளை இவனைக் கேட்டுப் பெறுதல் வேண் டும் என்ற நிலையிலராய்த் தாம் வேண்டிய போது, வேண் டிய பொருளை எடுத்துச்செல்லலாம். கொடை வளம் உடை யன் "கிளிமரீஇய வியன்புனத்து, மரன் அணி பெருங் குரல் அனையன்" என்றும் பாராட்டி மகிழ்வாராயினர்.

உழாத நாஞ்சிலுக்கு உரியோனும், பாண்டியர் படைத் தலைவனுமாய நாஞ்சில் வள்ளுவனைப் பாராட்டிய புலவர், ஊராக் குதிரைக்கு உரியோனும், சேரர்படைத் தலைவனும், வள்ளலும் ஆகிய பிட்டன் என்பானைப் பாராட்ட எண்ணி, அவன் சேரர்படைத் தலைவன்; விற்போர்வல்ல வன்; மதுவுண்டு தானும் மகிழ்ந்து, பிறர்க்கும் அம்மதுவினை அளித்து மகிழ்விப்பன்; அவன் ஏந்திய வேல், அவன் பகை மன்னர்க்கு உள்ளம் வேம் பெருந்துயர் அளிக்கும்" என்று கூறிப் பாராட்டினர்:

> "வானவன் மறவன்: வணங்குவில் தடக்கை
> ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்,
> பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த
> திருந்திலை எஃகம் போல
> அருந்துயர் தரும்." (அகம்: எஎ)

இருபெரும் வேந்தர்க்குப் படைத்துணை போகும் பெருமை வாய்ந்த இரண்டு பெரிய படைத்தலைவர்களைப் பாராட்டிய புலவர், தம் காலத்தே வாழ்ந்த மற்று இரண்டு தலைவர்களையும் தாம் பாடிய அகநானூற்றுப் பாடல்களில் வைத்துப் பாராட்டியுள்ளார். அவ்விருவர், வாணனும்,

கழுவுளும் ஆவர்; வாணன், புலவர் பலரும் போற்றும் பெருவளம் நிறைந்த நாடுடையன்; அவன் நாட்டை ஏனைப் புலவர்களைப் போலவே, மதுரை மருதன் இளநாகனூரும் பாராட்டியுள்ளார். மகளிர் தாம் விளையாடக் கொணர்ந்த பாவையை, உண்ணுநீர்த்துறையில் வைத்துவிட்டுக் குரவை ஆடி மகிழும் கடற்கரைச் சோலைகளால் சூழப்பெற்றது வாணன் சிறுகுடி; முற்றி வளைந்த கதிர்களைக் கொண்டு நெல்விளையும் நன்செய்கள் சூழ்ந்தது வாணன் சிறுகுடி என அவன் சிறுகுடி வளத்தை வாழ்த்துவது காண்க.

"வண்டற் பாவை உண்துறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை
வாணன் சிறுகுடி, வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணை." (அகம்: உசக)

கழுவுள் என்பான், இடையர் தலைவனாவன்; தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறையால் வென்று அடக்கப்பட்டோன்; இவனுக்குரிய காமூரை வேளிர் பதினல்வர் ஒருங்கு கூடி அழித்தனர். இவனைப் பாராட்டிய புலவர் மதுரை மருதன் இளநாகனூர், கழுவுள் வெல்லும் வேற்படையுடையவன்; சிறந்த வண்மையினையும் உடையவன்; அவன் காமூர், பூதம் ஒன்று கொண்டுவந்து பேணி வளர்த்த வேங்கை மரத்தை உடையது என்று பாராட்டுகிறார்:

"வென்வேல்
மாவண் கழுவுள் காமூர் ஆங்கண்
பூதம் தந்த பொரியரை வேங்கை." (அகம்: நசுகு)

தமிழகம், பெரும் பொருளால் பெட்டக்கதாகி, பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கும் இயல்பினதாதல் அறிந்த பிறநாட்டு மக்கள் வரிசை வரிசையாக, ஒருவர்பின் ஒருவராக அந்நாட்டுள் புகுந்து வாழலாயினர்; அவ்வாறு வந்தாருள் கொங்கர், கோசர், மழவர், வேளிர் போன்றாரைப் பற்றியும், அவர் வாழ்ந்த ஊர்கள் சில பற்றியும் புலவர் தம்முடைய பாக்களில் ஆங்காங்கே குறிப்பிட்

டுச் செல்லுகின்றார். பிற நாட்டினின்றும் வந்து கொங்கு நாட்டில் வாழ்ந்து கொங்கர் என்ற பெயருடைய இனத்தார், அக்காலப் பெரு விழாக்களுள் ஒன்றாகிய உள்ளி விழாவின்போது, தம் அரைகளில் மணிகளை அணிந்து தெருவில் நின்று ஆடிக்காட்டி மகிழ்வூட்டும் நிகழ்ச்சியைக் குறித்துள்ளார்; அத்தகைய உள்ளி விழாக்களுள், கருவூர் உள்ளிவிழா மிகவும் சிறப்புடையதாம் என்று களவியல் உரை கூறும்:

> "கொங்கர்
> மணிஅரை யாத்து மறுகின் ஆடும்
> உள்ளி விழவு." (அகம்: ௩௬௮)

வடநாட்டினின்றும் போந்து, தொடக்கத்தில் துளு நாட்டில் வாழ்ந்தவராய கோசர் என்பார், வீரத்திற்கும், வாய்மைக்கும் சிறந்தாராவர்; அவருடைய ஆண்மை, அவர் வாழ்ந்த நியமம் ஆகியவற்றைப் புலவர் கூறியுள்ளார்; செல்லூர்க்குக் கிழக்கே கடற்கரையைச் சார்ந்துள்ள நியமம் செல்வத்தாற் சிறந்தது; அதை ஆண்டிருந்த கோசர், இரும்பான் இயன்ற படைக்கலங்கள் பல முறை தாக்கி உண்டாக்கிய புண்வடு நிறைந்த முகத்தினராவர்; அவர் கூறுவன இவை:

> "செல்லூர்க் குணஅது
> பெருங் கடல் முழக்கிற் றாகி, யாணர்
> இரும் பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
> கடுங்கண் கோசர் நியமம்.' (அகம்: ௯0)

மழவராவார் சிறந்த வீர மரபினராவர்; இவரைத் தம் படையில் பணியாற்ற விரும்பிய வேந்தர் பலராவர். இவர்கள் நாடுகளுட் புகுந்து ஆனிரைகளை, நாட்டார் அறியாவண்ணம் ஓட்டிச் செல்வதும், செல்லும் வழியில் வில்லேந்தி நின்று வருவாரைக் கொன்று வாழ்வதும் ஆய கொடுந் தொழிலுடையராவர். இவர்கள், வீளைபோலும் ஒலியோடு விரைந்து செல்லும் அம்புடையார்; ஆறலைத்து வாழும் வாழ்வுடையார்; ஆனிரைகளைக் கொண்டு அருஞ் சுரத்தே ஒளியும் இயல்புடையார் என்றெல்லாம் கூறுகிறார் நம் புலவர்:

"வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாளா உய்த்த நாம வெஞ்சுரம்"
"உறுகண் மழவர் உருள்கீண் டிட்ட ஆறு."
(அகம்: கந௲க, ௨௨க)

வெளி நாட்டினின்றும் வந்தாருள், வேளிர், தமிழர் என்றே மதிக்கத்தக்க மாண்புடையராவர்; வள்ளல் பலரும் பிறந்தது இவ் வேளிர் குடியிலேயே; இவர் வரலாறுகள் சங்க இலக்கியங்களுள் விளங்க உரைக்கப்பட்டுள்ளன; இவ் வேளிரையும், அவர்க் குரியதும், கடலைச் சார்ந்துள்ளதும், உப்பு விளையும் உப்பளங்களை உடையதும் ஆய வீரை நகரையும், புலவர் தம்முடைய செய்யுளொன்றில் குறிப்பிட்டுள்ளார்:

"அடு போர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் உப்பின் நிரம்பாக் குப்பை." (அகம்: ௨0௬)

முருகன் உறையும் சிறப்புடையது; நல்லந்துவனார் பாடிய பெருமை யுடையது எனப் பரங்குன்றையும், "சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து, அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை." (அகம்: ருக), அலை மோதும் கரைகளை உடையது; நெடுவேள் நிற்கும் சிறப்புடையது; அதன் அழகிய கடற்றுறை, காற்றுச் சுழன்று வீசுவதால் உண்டாய மணல் மேட்டினை உடையது எனத் திருச்செந்தூரையும், "தாழ்நீர் வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில், நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக், கடுவளி தொகுப்ப ஈண்டிய வடுவாழ் எக்கர்" (புறம்: ருரு), என்றும் அழியாத வேள்வித்தீ யுடைமையால் அழகு மிக்கது; களத்தே யானை பல அழியுமாறு அரசர் பலரை அவர் குடி முதல் அழிய அழித்த பரசுராமன் இருந்து வேள்வி பல முடித்த விழுச் சிறப்புடையது எனச் செல்லூரையும், "கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க், கடாஅ யானைக் குழூஉச் சமம் ததைய, மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன், முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி." (அகம்: ௨௨0), முழங்கும் கடலின் அலை அலைக்கும் கரை

உடையது; நெல் வளம் நிறைந்தது என ஊணூரையும், "முழங்கு கடல் ஓதம் காலைக் கொட்கும், பழம்பல் நெல்லின் ஊணூர்," (அகம்: உ௨0), மீன் வளமும் செந்நெல் வளமும் மிக்கது எனத் திருச் சாய்க்கானத்தையும், "முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும், நெடுங்கதிர்க் கழனித் தண் சாய்க்கானம்," (அகம்: உ௨0) அறிந்து பாராட்டியுள்ளார் புலவர்; அவர் பாராட்டிய பிற ஊர்களை அவர் பாட்டில் ஆங்காங்கே அறிந்து கொள்க.

மதுரை மருதன் இளநாகனார், இவ்வாறு தம் காலத்தே வாழ்ந்த பேரரசர்களையும், குறுநிலத் தலைவர்களையும், தாம் பார்த்து மகிழ்ந்த பேரூர்களையும் பாராட்டும் பண்பினராதலோடு, தாம் அறிந்த சில நிகழ்ச்சிகளையும் ஆங்காங்கே குறித்துச் செல்லும் இயல்பும் உடையராவர். அவர், மதுரை மாநகரை எரியூட்டிய மாபெரும் பத்தினிக் கடவுளாம் கண்ணகியின் வரலாற்றினை உணர்ந்தவராவர் என்று கொள்ளத்தக்க நிலையில் ஒரு பாட்டுளது; குருகுகள் ஆரவாரிக்கும் கழனியின் அருகிலே நின்ற, கடவுள் காக்கும் பெருமையும், எரிபோலும் மலரும் உடைய வேங்கை மரத்தின்மீது கட்டிய பரண் அருகிலே, அயலான் ஒருவன் செய்த செய்கையால் கவலையுற்றுத் தன் ஒரு கொங்கையை அறுத்து நின்றாள் திருமாவுண்ணி என்பாளொருத்தி என அவர் கூறும் இச் செய்தி, கண்ணகி வரலாற்றினை ஒத்துக் காணப்படுதல் காண்க.

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி." (நற்: உகசு)

பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட பெருந்தொழில் உழவு ஒன்றே ஆதலின், அவ் வுழவிற்கு உறுதுணை புரியும் ஆனிரைகளை, அவர்கள் தம் பொருளெனப் போற்றிக் காத்தனர். அவர்கள் பொருள் எனப் போற்றிய அவ் ஆனிரைகளையே, அக்காலக் கள்வரும் கவர்ந்து செல்லலாயினர்; இதனால் அந் நிரைகளைக் கவர்வதும், அவற்றை

மீட்பதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன; இத்தகைய நிகழ்ச்சிகளில் உண்டாம் போரில், இரு திறத்தாரிலும் பலர் இறப்பர்; அவ்வாறு இறந்தாருள் மீட்கச் சென்று இறந்தார் மாண்புடையராதலின் அவர்க்குக் கல் நாட்டிச் சிறப்புச் செய்தனர் அக்கால மக்கள். இந் நடுகற் சிறப்பினைப் புலவர் பலவாறு விளக்கிப் பாராட்டுகின்றார்; இறந்த வீரர்களை, மறவர்கள் விடியற்காலத்தே ஆக்களைக் கவர்ந்து சென்றுவிட்டாராகத் தம் தாய்மார்களை நினைந்து, அவை சென்ற அரிய சுரவழியில் ஓடி இளைத்து, மேலும் ஓடமாட்டாமல் வருந்திநின்று கண்ணீர் வாரக் கதறிக் கதறி அழும் கன்றுகளின் துயரைப் போக்குவான் வேண்டிச்சென்று அம் மறவரை மடக்கிப் போரிட்டு ஆனிரைகளை மீட்டுத் தந்து, அம் மீட்சிப்போரில் தம் உயிர் கொடுத்த ஆண்மையாளர் என்று பாராட்டுகிறார்.

"வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாள்ஆ வுய்த்த நாமவெஞ் சுரத்து
நடைமெலிந்து ஒழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்." (அகம்: ௧௩௧)

அவ்வாறு இறந்தார்க்கு நடுகல் நடுங்கால், அவர் பெயரும், அவர் பெருமையும் பொறிக்கப்பெற்ற கற்களை அவர் இறந்த அவ்விடங்களில் நடுவர்; இவ்வாறு வேறே கல் கொணர்ந்து நடுவதே அன்றி, அவர் இறந்த இடங்களில் உள்ள பாறைகளில் அவர் பெயரையும், பெருமையையும் பொறிப்பதும் உண்டு. அவ்வாறு எழுப்பிய நடுகற்கு, மஞ்சள் தெளித்து, மயிற்பீலிசூட்டி, மாலை அணிவித்து வழிபாடு செய்து வணங்கிய பின்னரே உடன் சென்ற வீரர் ஊர் திரும்புவர்; அவ்வாறு எழுப்பிய அக்கற்கள் அவ்வழிச்செல்லும் வணிகர்தம் பொதிஏறிய வண்டியின் உருள்களால் பலகாலும் தாக்குறுவதால், அக்கற்களில் பொறிக்கப்பெற்ற எழுத்துக்கள் சிதைந்து படிக்க இயலாவாறும், வேறு பொருள்படுமாறும் சிதைந்து பாழாவதும் உண்டு. நடுகற்பற்றி இந் நிகழ்ச்சிகளையும் புலவர் விடாது குறித்துச் சென்றுளார்:

"பெயரும், பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம்: கூகூ)

"குறும்பொறை மருங்கின்
நட்டபோலும் நடாஅ நெடுங்கல்
அகலிடம் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண் டறுத்த ஆர்நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டார்ப்பச் சூட்டிக் கழற்கால்
இளையர் பதிப் பெயரும்." (அகம்: உகூக)

"மரங்கோள் உமண்மகன் பெயரும் பருதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணா மருங்குல்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்து அவ்
ஆறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்."
(அகம்: நசந)

இன்று தமிழகத்தில் நிலவும் இந்து மதம், கடைச் சங்க காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே, இந் நாட்டில் காலூன்றிவிட்டது. சமயத்திலும், சமுதாயத் திலும் காணப்படும் பழக்க வழக்கங்கள் பலவும் அன்றே நிலைபெற்றிருக்கக் காண்கிறோம். சிவன் மலையை வில்லா கவும், பாம்பை நாணாகவும் கொண்டு ஓர் அம்பு ஏவி, அரக்கர்தம் மூவெயிலை அழித்தான்; நஞ்சுண்டு கறை யேறியது அவன் கண்டம்; பிறையால் விளக்கம்பெறுவது அவன் சென்னி; மூன்று கண் உடையான் அவன் எனச் சிவனையும் (புறம்: டுடு), கண்ணன், யமுனை ஆற்றங்கரையில் நீராடி மகிழும் ஆயர் மகளிரின் ஆடைகளை ஒளித்து வைத்து ஆடிமகிழ்ந்தான் எனத் திருமாலையும் (அகம்: டுகூ), சூரபன்மா வினையும், அவன் சுற்றத்தினையும் தொலைத்த வேலுடையான்; தண்பரங்குன்றத்தே தங்கி உறைவான் என முருகனையும் (அகம்: டுகூ), கள்ளை ஒழித்த கடவு ளர்க்கும், அதை ஒழிக்கா அரக்கர்க்கும் ஆசிரியராவர்; அவர்க்கு வேண்டும் அரசியல் நூல் ஆக்கித்தந்தவர் என

வியாழனையும் வெள்ளியையும் (மரு. கலி : நஉ), அறிந்து கூறுவதோடு, மணம் செய்வார், அம் மணவினைக்காம் நன்னாள் வேண்ட, அஃதறிந்து அறிவிப்பார் அந்தணர்; அந்தணர் ஓத்து அறிந்தவர்; அவர் ஓம்பிய எரியினை மண மக்கள் சூழவந்து மணங்கொள்வர் என அந்தணரையும், அவ் அந்தணர் துணைபெற்று நடந்த அக்காலத் திருமணங் களையும் (மரு. கலி : உஅ, ச) நமக்கு உரைத்துள்ளார்.

தம் காலத்தே நிலவிய சமயநிலைகளை விளக்கிய புலவர் மதுரை மருதன்இளநாகனார், தம் கால மக்கள் இயல்புகள் சிலவற்றையும் எடுத்துக் கூறியுள்ளார்; அரசன் அவைக்களத்தே வாழும் ஆன்றோர் தாம் எழுதிப்போக்கும் ஓலைகளைப் பிறர் பிரித்துக் காணாவாறு கட்டி அக்கட்டின் மீது முத்திரை பொறித்து விடுதல் வழக்கமாம். பழங் காலத்தே, ஊராண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேருங்கால், அவ்வூரார் தாம் விரும்புவார் பெயரைத் தனித்தனி ஓலைகளில் எழுதி ஆன்றோர் கூடியுள்ள அவை யிடை வைத்த குடத்தினுள் இடுவர்; அக்குடத்தினை ஆங் குள்ளார் பலரும் காணத் திறந்து அவ்வோலைகளை எடுத்து ஆராய்வதற்குமுன், அக்குடத்தின்மீது இடப்பெற்ற அரச இலச்சினையைப் பழுதாகாதிருப்பதுகண்டு போக்கிக் குடத் தினைப் பிரிப்பர். இந்நிகழ்ச்சிகளைப் புலவர் இருவேறு இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார் (அகம் : எஎ ; மரு. கலி : உக).

வணிகர்கள், தம் பண்டப் பொதிகளை வண்டிகளி லேயே அன்றிக் கழுதைகள்மீதும் ஏற்றிக்கொண்டு செல்வர் என்றும், அவ்வாறு செல்லும் வணிகர்க்கு ஆறலை கள்வரால் உண்டாம் ஆக்கக்கேட்டினை அழித்துத் துணை புரிவான் வேண்டி வீரர் பலர் அவ்வணிகர் குழுவோடு செல்வர் என்றும் கூறுகிறார் (அகம் : நசந).

பழந்தமிழர், கடல் கடந்து சென்றும் வணிகம் புரிந் தவராவர்; அவர்கள் பெருங்கடலைக் கடந்து செல்வதற்கு வேண்டும் பெரிய பெரிய கப்பல்களைக் கொண்டிருந்தனர்; அத்தகைய கப்பல்கள் ஓர் ஊரே எனத் தோன்றுமாறு

பெருமையுடையனவாம்; அக்கப்பல்கள், கடல் அலைக ளாலும், காற்றாலும் அசைவுறாமல், காற்று ஓடும் திசை அறிந்து ஓட்டவல்ல மாலுமிகளைப் பெற்றிருந்தன; அம் மாலுமிகள் இரவில் திசையறிந்து செலுத்துவதற்குத் துணைபுரியும் கலங்கரை விளக்கங்கள் தமிழ்நாட்டின் கடற் கரை நகர்தோறும் நின்றுவிளங்கும். பழந்தமிழர் தம் இக்கடல் வாணிபச் சிறப்பினையும் புலவர் கூறியுள்ளார் (அகம் : உருரு).

நிலத்திலும், நீரிலும் நெடுந்தொலைவு கடந்து சென்று வாணிகம் புரியும் வணிகர்க்கு அவர் செல்லும் வழியில் துயர் விளைக்கும் ஆறலை கள்வர்களையும் கொண்டிருந்தது தமிழகம்; அக்கள்வரின் இயல்பு கூறுவார், அவர்கள் தம் வாழ்வு நன்கு நடைபெற மழையை எதிர்நோக்கி நில்லார்; அவர்க்கு வேண்டுவது மழையன்று; பாலை வழிகளில் தாம் மறைந்துநின்று அவ்வழி வருவாரை அலைத்துப் பொருள் கவர்தற்கு ஏற்ற, வருவார்க்குக் கவலைதரும் இடங்களே அவர்க்கு வேண்டுவன என்று கூறுகிறார் (அக : கசுரு).

மதுரை மருதன் இளநாகனார், இவ்வாறு தம்காலத்தே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், நிலவிய வழக்காறுகளையும் அறிந்த அறிவினராதலோடு, தம்மைச் சூழவாழ்ந்த உயிர்ப் பன்மைகளின் இயல்புகளையும் உணர்ந்த உணர்வினராவர் என்பதை அவர் பாடல்கள் உணர்த்துகின்றன. கொக்கு தான் கொணர்ந்த மீனைக் குடைந்து உண்டலால் எழுந்த நாற்றம் பொறாது குரங்கு தும்மும் (நற் : ருஉ௧), களிறு நீர் தேடிச்சென்று கண்ட கலங்கல் நீரால், தன் பிடியையும் கன்றையும் கழுவிவிட்டு, எஞ்சிய சேற்றினைத் தன் தலையில் வாரி இறைத்துக்கொள்ளும் (அகம் : கஉக); பருந்து, தன் குஞ்சுக்கு ஊட்டிய ஊன், தவறிக் கீழேவிழ, அதை ஆங்குக் காத்துக்கிடந்த நரி எடுத்து ஓடும் (அகம் : கசுரு) என்று அவர் கூறுவனவற்றைக் கூர்ந்து உணர்க.

தாமரை மலர்ந்த பொய்கையுட் புகுந்து ஆடும் அன்னங்களுள் சேவலன்னம், அத்தாமரை இலைகளிடையே

மறைப்புண்டதாக, அதைக் காணப்பெறாத பெடை அன்னம், அதை அப்பொய்கையெல்லாம் தேடிவருங்கால், வானத்துமதி நீருட் தோன்றியதாக, அதுவே தன் சேவலாம் எனக்கொண்டு, அதன்பால் விரைந்து போங் கால், எதிரே தன் சேவல் வரக்கண்டு, தன் அறியாமைக்கு நாணிப் பூக்களிடையே புகுந்து மறைந்துகொள்ளும் எனவும், மணமக்கள், மணப்பந்தலில் அந்தணர் ஓம்பிய செந்தீயை வலம்வருதலேபோல், சேவலும் பெடையுமாகிய அன்னங்கள், பொய்கையில் மலர்ந்து கிடக்கும் செந் தாமரை மலர்களைச் சூழவரும் எனவும் புலவர் காட்டும் அன்னப்புள் வாழும் குளக் காட்சிகள் கண்முன் தோன்றிக் கவினளித்தல் காண்க.

“ மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம், தன்
அணிமிகு சேவலை, அகலடை மறைத்தெனக்,
கதுமெனக் காணாது, கலங்கி, அம்மடப் பெடை
மதிநிழல் நீருட்கண்டு, அதுவென உவந்தோடித்,
துன்னத் தன்எதிர்வரூஉம் துணைகண்டு மிகநாணிப்
பன்மலர் இடைப்பு கூஉம்.”

“ தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு,
காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மான்நோக்கின் மடந்தை தன் துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்
ஆய்தூவி அன்னம்தன் அணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரும்.” (மருதக்கலி : ரு, ௬)

மதுரை மருதன் இளநாகனார், அழகிய உவமைகளை ஆங்காங்கே எடுத்தாளும் திறம், எழுத்தறிந்தார் அனை வரானும் அறிந்து போற்றத்தக்க அழகு வாய்ந்தனவாம். எருமைமீது ஏறிச்செல்லும் சிறார்க்குக் கற்பாறைமீது அமர்ந்திருக்கும் குரங்கையும் (அகம் : உ0௬), மகனைக் கண்ட தந்தை, அம்மகனுழை மகிழ்ந்து விரைதற்குக், கட்டிய கன்றை நோக்கி விரைந்தோடும் பசுவின்செயலையும், (மரு. கலி : க௬) நனவே கனவாம் என்பதை விளக்க, உள்ளம் உருவாக்கும் பண்ணே, பறையில் ஒலித்துப்

புலனுந்தலையும் (மரு. கலி : உஎ), உலகத்து உயிர்க்கு உற்ற துயர் நோக்கிப் பெய்யும் மழைக்குக் குழந்தையின் முகம் நோக்கிப் பால்சுரக்கும் தாயையும், (மரு. கலி நஉச) ஓர் ஊரிற் பிறந்தாள் ஒருத்தி, அவள் தந்தை, அவளை விரும்பிய வேந்தர்க்கு அளிக்க மறுப்பதால், அவரால் அவ்வூர் அழிதலின், அவ்வூர் அழிவிற்கு அவளே காரண மாதலை விளக்க, விறகில் தோன்றிய தீ, அவ்விறகையே அழிப்பதையும், (புற : நஉசக) தன் கணவன் விரைந்து வாராமையால் உற்ற துன்பத்தால் அவள் தோள் மெலிதற்கு, மழையால் கரையும் உப்புக் குவியலையும் (அகம் : உ௦சு), தலைவிக்கு உண்டாம் துயரைத் தலைவன் முன்னின்று போக்குவதற்குக், கண்ணில் விழும் நுண்ணிய துகளைத் தடுத்துக் காக்கும் கைகளின் செயலையும் (நற் : உககு), நாட்டில் அல்லன கடிந்து, நல்லன ஓம்பும் நல்லறி வுடையனுய தலைவன், தலைவிக்குற்ற துயர் அறியாதைதற்கு, மிகச் சேய்மைக்கண் உள்ள பொருள்களையும் காணவல்ல கண்கள், தம்பால் உள்ள வடுவைப் பிறர் உணர்த்தவும் உணரமாட்டாமையினையும் (மரு. கலி : நஉச) உவமை காட்டியுள்ளார்; அவர் காட்டிய பிறவுமைகளையும் ஈண்டு எடுத்துக்காட்டின் ஏடு விரியும் எனினும், ஒன்றை மட்டும் உரைத்து மேற் செல்கின்றேன்.

அமைதி நிலவிய ஒரு நாட்டில், மக்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்; ஒருநாள் பகைவர் படையொன்று அந் நாட்டுட் புகுந்து பாழ்செய்யத் தொடங்கிவிட்டது; அதனுல், ஆண்டு வாழ்தல் இனி இயலாது என அறிந்த அந்நாட்டுக் குடிகள், அந்நாட்டை விட்டகன்று, நல்லாட்சி நிலவும் பிறிதொரு நாட்டைத்தேடி உழல்வாராயினர்; அவர் ஆண்டு வாழினும், அவர் உள்ளமெல்லாம் தாம் பிறந்து வாழ்ந்த தம் நாட்டை மறவாது எண்ணியிருந்தது; சின்னுட்களுக்குள், அழிந்த நாட்டிற்குரிய அரசன், தன் படைத்துணையால் பகைவரை அழித்துப் போக்கினுன்; நாட்டில் பண்டைநிலை நிலவிற்று; அஃதறிந்த அக்குடிகள், மீண்டும் தம் நாடு புகுந்து மகிழ்ந்து உறைவாராயினர்.

ஒரு பொய்கைக்கண் மலர்ந்திருந்த தாமரைமலர் ஒன்றில் தும்பி ஒன்று தன் பெடையோடு தேனுண்டு வாழ்ந்திருந்தது; ஒருநாள் அப் பொய்கையின் கரை, திடும் என உடைத்துக்கொள்ளவே, அவ்வுடைப்பின் வழியே வெள்ளம் உட்புகுந்துவிட்டது; தாமரை மலர்கள் நீருள் ஆழ்ந்துவிட்டன; தான் வாழ்ந்த மலர் நீருட் புகுந்து விட்டமையால், இனி அதில் வாழ்தல் இயலாது என அறிந்த அத்தும்பி, அக்குளத்தைவிட்டு நீங்கிக் காவல் நிறைந்த கரையமைந்த பிறிதொரு பொய்கைதேடி உழன்றது; பின்னர்ப் பண்டைப் பொய்கைக்குரியார், உடைந்த அவ்வுடைப்பினை அடைத்துப் புகுந்த புதுப் புனலைப் போக்கிவிடவே, தாமரை மலர்கள் பண்டே போல் தலைதூக்கி நிற்கலாயின; அஃதறிந்த அத்தும்பி, மீண்டுவந்து தன் மலருட் புகுந்து மகிழ்ந்து உறங்கிற்று.

இவ்விரு காட்சிகளையும் கண்ட நம் புலவர், இவ்விரண்டையும் உவமையும் பொருளுமாக்கிக் கூறி அறிவிக்கும் திறம் அறிந்து அகம் மகிழ்வோமாக:

"பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
இன்மலர் இமிர்பூதும் துணைபுணர் இருந்தும்பி,
உண்துறை உடைந்தபூப் புனல் சாய்ப்பப், புலந்து ஊடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென,
அதுகை விட்டகன்று ஒரீஇக், காக்கிற்பான் குடைநீழல்
பதிபடர்ந்து இறைகொள்ளும் குடிபோலப் பிறிதுமொரு
பொய்கை தேர்ந்து அலமரும் பொழுதினான் மொய்தப
இறைபகை தணிப்ப அக்குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுனல் நீங்கவந்து அத்தும்பி அம்மலர்ப்
பறைதவிர் பசைவிடூஉம் பாய்புனல் நல்லூர்."

(மருதக் கலி : கரு)

மதுரை மருதன் இளநாகனார் பாடிய அகத்துறைப் பாடல்கள் ஒவ்வொன்றும், அக்கால மக்கள்தம் உயரிய உள்ளத்தை உலகறிய உணர்த்தும் இயல்பினவாம்; அவை யனைத்தையும் ஈண்டு எடுத்துரைப்பது இயலாது ஆதலின், அவற்றுள், தலைவன், தலைவி, தோழி ஆக இவர்கள் ஒவ்

வொருவர் உள்ளத்தையும், ஒவ்வொரு செய்யுளான் உணர்வோமாக.

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்று கூறுவர் பெரியோர்; இதனால், உயிரினும் புகழே சிறந்ததாதல் அவர் கருத்தாம். அப்புகழ் ஈதலால் உண்டாம்; ஈதலும், இசைபட வாழ்தலும் பொருள் உடையார்க்கன்றி இயலாது; ஆகவே, உயிரினும் சிறந்தது பொருளாம். அப்பொருள் அரிதின் முயல்வார்க்கே ஆகும்; ஆகவே அப்பொருள் தேடிப்போதல் அறிவுடைமையாம். ஒரு தலைவன் இவ் வறிவுடையனாயினான்; பொருள்தேடிப் போக எண்ணினான்; ஆனால், அவன் மனைவிபால் அவன் கொண்டுள்ள அன்பு அவனைப் பிரியவிடாமல் தடுத்து நிறுத்தலாயிற்று; அவன் பிரியின் அவள் வாழாள்; அவள் இன்றி அவன் வாழான்; ஆக ஒருவழியில் அவன் உயிரினும் அவள் சிறந்தாளா யினாள்; இந்நிலையில் அவளைத் தேற்றாது பிரிந்து சென்று பொருள் கொணர்ந்தும் பயனின்றாய் முடியும்; ஆகவே, அவள், தான் போதல் அறிவுடைமையாம் என உணர்ந்து, அவ்வுணர்வு வரப்பெற்றமையால், பிரிவைத் தாங்கும் ஆற்ற லுடையளாயினள் என அறிந்து செல்வதே அறிவுடைமை யாம் என எண்ணினான். இவ்வாறு காதல், கடமை ஆகிய இரண்டையும் கைவிடாது நின்றே உயர்ந்த வாழ்வு வாழ எண்ணும் அவ் ஆண் மகன் உள்ளத்தை உணர்ந்து உயர் வடைவோமாக!

"உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்று புரி காட்சியர் சென்றனர் அவர் என
மனைவலித்து ஒழியும் மதுகையளாதல்
நீ நன்கறிந்தனை யாயின் நீங்கி
..............................................
சென்மோ நெஞ்சம்!" (அகம்: உசுரு)

சிறுவர்களைப் பேணி வளர்ப்பவர் பெண்டிர்; அவர்க்கே அப்பண்பு உண்டு; இளைஞர்க்கு இன்சொல் கலந்த அறி வுரை வழங்கிவளர்க்கும் பெண்டிர்பால் தாயன்பும் கலந்து

விடின், அவர் வளர்க்க வளர்ந்தார் வளமார் பண்புற்று வாழ்வர்; தம் வயிற்றுதித்த சிறுவர்களை அத்தகையார் பால் ஒப்படைப்பதினும், அவரைப் பேணிவளர்க்கும் அப் பணியைத் தாமே மேற் கொள்ளின், அம் மக்கள் மாண் பினராதலில் சிறிதும் ஐயம் இராதன்றோ? தமிழகத்தே, தம் மக்களை அறிவூட்டி வளர்க்கும் அப்பணியினைத் தாய் மாரே மேற் கொண்டனர் என்பதைப் புலவர் ஒரு செய்யு ளிடத்தே கூறியுள்ளார். ஒரு தாய், அறிவன அறிந்த அறிவுடையளாய்த் திகழ்ந்தாள்; தவறு செய்வான் தன் கணவனாயினும், அதை எடுத்துக் காட்டித் திருத்தத் தயங் காள். அவள் கணவன், அவளையும், அவள் மகனையும் பிரிந்து பரத்தை வீடு சென்று பழியுடையனாயினான்; அவ் வாறு வாழ்ந்த அவன் பின்னர்த் தவறு உணர்ந்து தன் வீடு வந்து சேர்ந்தான்; அவன் வந்ததை அறிந்தாள் அவள்; அவன் பால் காணலாம் நற்பண்பு கண்டு பாராட்டும் தான், அவன் பரத்தையர் ஒழுக்கத்தினைப் பழிப்பதை அவன் உணர உணர்த்த விரும்பினாள்; உடனே, அவள் அவனைக் காணாள் போன்று, தன் மகனை அருகழைத்து அவனுக்கு அறிவுரை கூறுவாள் போல், தன் கணவனுக்கு அறிவுரை கூறினாள், மகனை அணைத்துக் கொண்டவாறே, "என் அருமை மகனே! நீ நின் தந்தையின் வடிவும், வனப்புமே, நின் வடிவும், வனப்புமாய்க் கொண்டு விளங்கு கின்றனை எனினும், நின் தந்தை பால் காணலாம் பண்புகளில் எவற் றைக் கொள்ளலாம்? எவற்றைக் கொள்ளலாகாது என் பதை யான் கூற அறிந்து மேற்கொள்வாயாக! தன்னோடு பகைத்த பகைவரைப் பாய்ந்து வென்று களங்கொள்ளும் ஆற்றல் அவர் பால் உண்டு; அதை நீ பெற்றுக்கொள்; இவர் நம்மவர்; ஆகவே பிழைபுரியினும் விடுக; இவர் பகைவர்; ஆகவே பழியிலராயினும் ஒறுக்க என எண்ணும் இயல்பின்றி எவர்க்கும் ஒருபடித்தா அறங்கூறும் செம் மைப்பண்பு நின் தந்தை பால் உண்டு; அதையும் நீ பெற் றுக் கொள்; தம் பால் பொருள் வேண்டி வந்து இரந்தார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மை அவர் பால் உண்டு; அதையும் நீ பெற்றுக்கொள்; ஆனால் தம்மோடு ஒருமனப்

பட்டு ஒன்றி வாழ்ந்த மகளிரையும் பிரிந்து துயர் உறுத்தும் பழிக்குணமும் அவர் பால் உண்டு; அதை நீ கொள்ளற்க!" என்று தன் மகன் கொள்ளலாம் குணம் இவை; தள்ளலாம் குற்றம் இவை என எடுத்தோதினாள். இத் தாயின் நல்லறிவும், நற்பண்பும் தமிழகத்துத் தாய்மார்க்குத் துணை புரியுமாக!

"செம்மால்! வனப்பெலாம் நுந்தையை ஒப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்தகுறி என்வாய்க்கேட்டு ஒத்தி;
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
ஒன்றினேம் யாம் என்று உணர்ந்தாரை நுந்தைபோல்
மென்தோள் நெகிழவிடல்;
பால் கொளல் இன்றிப் பகல்போல் முறைக்கு ஒல்கா
கோல் செம்மை ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
கால் பெரு பூவின் கவின் வாட, நுந்தைபோல்
சால் பாய்ந்தார் சாயவிடல்;
வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல் மாட்டொத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
மாதர் மென் நோக்கின் மகளிரை நுந்தை போல்
நோய்கூர நோக்காய் விடல்." (மருதக் கலி: உக)

தலைவிபெறும் இன்பம் தான்பெறும் இன்பமாம் எனவும், அவளுக்குற்ற துயர், தனக்குற்ற துயராகவும் எண்ணும் இயல்புடையாள் தோழி. தோழியும், தலைவியும் ஈருடலும் ஒருயிருமாய் வாழும் இயல்பினராவர் என்பதைப் புலவர், ஒருபாட்டில் எடுத்துக் காட்டியுள்ளார். தமர், தாம் விரும்பிய தலைமகனுக்குத் தலைவியை மணம் செய்து தாரார் என்பதறிந்தாள் தோழி; அந்நிலையில் தலைவியின் கற்பு கெடாமை வேண்டுமாயின், அவள் அத்தலைவனோடு அவனூர் சென்று ஆண்டு அவனை மணந்து வாழ்வதே தக்கது எனத்துணிந்தாள்; இதுகாறும் பிரிந்தறியா அவளைப் பிரிதல் தனக்குப் பெருந்துயர் தருவதாயின், அப்பிரிவில் அவள் கற்பு உளது என்ற உள்ளத்தால், ஒருவாறு உறுதி பெற்றாள்; இருவரும் போதற்கு ஆவன புரிந்து நின்றாள்;

அவர்கள் போகும் வழியின் கொடுமையினையும், அவ்வழியில் நடந்து வருந்தும் தன் தோழியின் துயர் உறு நிலையினையும் எண்ணினாள்; ஆறாத்துயர் உற்றாள்; அவ்வழி, அவள் போகுமாறு இனிமை உடையதாக மாறாதா! வெயிலால் வாடிவற்றிய மரங்கள், தளிர் ஈன்று தழைக்கவும், வெப்பம் நீங்கவும், விசும்பெலாம் இருண்டு வேண்டும் அளவு பெய்ய மேகம் வரிசைவரிசையாக எழாதா! மழை பெய்த நிலத்தே பசும் புல் தோன்றிப் படராதா! அப்பசும் புல் இடையிடையே செந்நிறக் கோபம் சிதறிக்கிடந்து கவினுறு காட்சியதாகாதா! என்றெல்லாம் ஏங்கினாள்; என்னே அவள் அன்பு! என்னே அவள் உள்ளத் தூய்மை!

"செலவுதலைக் கொண்ட பெருவிதுப்புறவி
.....................................
போகுநர் புலம்பும் ஆறே ஏகுதற்கு
அரிய வாகும் என்னாமைக் கரிமரங்
கண்ணகை இளங்குழை கான்முதற் கவினி,
விசும்புடன் இருண்டு, வெம்மை நீங்கப்
பசுங்கண் வானம் பாய்தளி பொழிந்தெனப்
புல் நுகும்பு எடுத்த நன்னெடுங் கானத்து
ஊட்டுபஞ்சிப் பிசிர் பரந்தன்ன
வண்ண மூதாய் தண்ணிலம் வரிப்ப
இயை வாருக தணிந்தே
இன்னா நீப்பின் நீன்றொடு செலற்கே." (அகம்: உஅ௩)

இறுதியாக, மதுரை மருதன் இளநாகனார்பால் மண்டிக்கிடந்த மாண்பு ஒன்றைக் கூறுவோமாக. மதுரை மருதன் இளநாகனார் புலவர் பலர் வாழ்ந்த மதுரையில் வாழ்ந்தவர்; அப்புலவர்களின் பெருமையை உணர்ந்தவர்; அப்புலவரோடு பழகிய பண்புடையவர். அதனால் அப்புலவர்தம் பெருமையறிந்து போற்றும் பெருங்குணமுடையராயினர்; பரங்குன்றைப் பாராட்ட எண்ணிய புலவர், அது அந்துவன் பாடியதால் பெருமையுற்றது என்று கூறிய ஒன்றே அவர்க்குப் புலவர்பால் உள்ள பெருமதிப்பை உணர்த்தவல்லதாம்; அவர் அவ்வளவோடு

அமைதியுறுது புலவர்தம் பண்புகளைப் போற்றிப் புகழ்கின்றார்; ஆசிரியராவார் உரைத்த இன்சொல் அன்றி இன்னாசொல் கேட்டறியாச் செவியே நிலமாகவும் முன்னோர் கூறிய அறவுரைகளே நீராகவும், அறிவினை உடைய நாவே ஏராகவும் கொண்டு உழுது புதுப்பொருள் கண்டு மகிழும் மாண்புடையார் புலவர் என்று பாராட்டும் பண்பினராவர் நம் மதுரை மருதன் இளநாகனார் என்பதறிந்து, "பொறுமை புலவர்க்கு அணிகலம்" என வழங்கும் புல்லுரை பொன்றுமாக!

"வல்லவர்
செதுமொழி சீத்த செவி செறுவாக:
முதுமொழி நீராப், புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்."
(மருதக்கலி : ௩)

# கக. மாதிரத்தனுர்

மாதிரம் எனும் சொல், திசைகள் எனும் பொருள் உடையது; இவர்க்கு இப்பெயர் வழங்குதற்காம் காரணம் இஃது எனப் புலப்படவில்லை; இவர் பெயர், மாதீரத்தன் என்றும், மாதீர்த்தன் என்றும் ஏடுகளில் காணப்படு கின்றன.

"ஐய! எம் ஊர்க்கு அணித்தேயுளது, ஊரார் நீர் உண்ணும் பொய்கை; அப்பொய்கை அடுத்து ஓடுகிறது ஒரு சிறிய காட்டாறு; அக்காட்டாற்றினை அடுத்துளது ஒரு பொழில்; அப்பொழிற்கண் ஆற்றிலும், பொய்கையிலும் மீன் தேடியுண்ணும் பறவைகள் ஒழிய, பிறர் எவரும் அணுகார்; யாங்கள் எம் கூந்தலுக்கு இட்டுப் பிசைய உதவும் எருமண் கொணர்வான் வேண்டி, ஆங்கு வருவேம்; எம்மோடு எந்தலைவியும் வருவள்" என்று கூறி, ஊர்க்கு அணித்தே உள்ள பொய்கையை யடுத்துளது ஆகவே, பொழிற்கண் வருதல் எமக்கு எளிது என்றும், ஆங்குள்ள அப்பொழில், பறவையன்றிப் பிறர் நுழையாத் தனிமையுடையது ஆகவே, அப்பொழிற்கண் தலைவியைத் தனித்துக் காணலும் இயலும் என்றும், ஆங்குத் தலைவியொடு வரும் யாங்கள், மண்கொணரும் நோக்குடையேம் ஆதலின், யாங்கள் ஆற்றங்கரையில் நிற்பதன்றி, பொழிலிடையே புகேம்; ஆகவே, யாங்கள் வருவதால் நும் கூட்டத்திற்கு ஊறு இன்றும் என்றும் கூறி, ஆகவே "ஐய! தலைவியைக் காணவிரும்பும் நீ ஆண்டு வருக" எனத் தோழி பகற்குறியிடம் நேரும் துறையமையப் பாடிய புலவர் பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

இச்செய்யுற்கண் ஊரும், ஊரைச்சார்ந்த ஊருணியும், அவ்வூருணியைச் சார்ந்து ஓடும் ஆறும், அவ்விரு நீர்நிலைகட்கும் இடையே அழகிய ஒரு சோலையும் அமைந்து அழகுதர விளங்கிய தமிழகத்துச் சிற்றூர்க் காட்சிகளை

நன்கு தீட்டிக் காட்டியுள்ளார் புலவர்; கூந்தலில் உள்ள எண்ணெய்ப்பசை, அழுக்கு முதலாயினவற்றைப் போக்குதற் பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக்கொண்டு மகளிர் நீராடும் வழக்கம், இன்றேபோல் அன்றும் தமிழகத்துச் சிற்றூர்களில் நிகழ்ந்ததையும் புலவர் எடுத்துக் காட்டியுள்ளார்; ஒரு சிறு பாட்டிலேயே பழந்தமிழகத்துச் சிற்றூர்க் காட்சிகளையும், அச் சிற்றூர்வாழ் மக்கள் வாழ்வியலையும் வகுத்துக்காட்டிய திறம் வியத்தற்குரியதாமன்றோ?

“ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே;
இரைதேர் வெண்குருகல்லது யாவதும்
துன்னல் போகின்றால் பொழிலே; யாம், எம்
கூழைக்கு எருமண் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே.” (குறுந்: ககங)

# ௧௨. மாமூலனார்

கபிலர், பரணர், நக்கீரர் போன்ற பெரும்புலவர் வரிசையுள் வைத்து மதிக்கத்தக்க மாண்புடைப் புலவராவார் மாமூலனார்; சிவனடியார்களுள் ஒருவராய்த் திருமூலம் பாடிய திருமூலர் வேறு; மாமூலர் வேறு; மாமூலனார் அந்தணர் குலத்தவர்; தவத்திற் சிறந்தவர்; இது, "அறு வகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற தொல்காப்பியம் புறத்திணையியற் சூத்திரத்திற்கு (௨௦) உரை வகுத்த ஆசிரியர் நச்சினார்க்கினியர், "யோகிகளாய், உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேயத்து அனைநிலை வகையோராவர்" என எழுதியிருப்பதால் இனிது விளங்கும். மாவடியில் மகிழ்ந்துறையும் காஞ்சி ஏகம்பத்துறை இறைவனே மாமூலன் என வழங்கப்படுவன் எனக்கொள்ளின், மாமூலனார் சைவராவர் என்றும் கொள்ளலாம்; இலக்கண உரையாசிரியர்கள் கபில பரணர் என்ற தொகையினை எடுத்தாளுதல் போன்றே, கல்லாட மாமூலனார் என்ற தொகையினையும் ஓரோவழி எடுத்தாளுப; இதனால், கல்லாடர்க்கும், மாமூலர்க்கும் யாதோ ஒருவகையான் தொடர்புண்டாதல் தெளிவாம்.

மாமூலனார் பாடிய பாக்களாக முப்பது பாக்கள் கிடைத்துள்ளன; அவற்றுள், புறத்திணை தழுவிவந்த பாட்டு ஒன்றுகூட இல்லை; அனைத்தும் அகப்பொருள் தழுவ வந்துள்ளனவே; மாமூலனார் பாடிய பாக்கள் அனைத்தும் அகத்திணைப் பொருளுடையவேயாயினும், அவரால் உணர்த்தப்படும் புறப்பொருள் பலவாம். தமிழகத்தின் வரலாறு அறியத் துணைபுரிந்தார் மாமூலனாரினும் சிறந்தாரிலர்; வரலாறு உரைக்காது வந்த பாட்டு ஒன்று கூட இல்லை எனலாம்; அவர் பாக்கள் ஒவ்வொன்றும் வரலாற்றுக் குறிப்புக்களுள் ஒன்றோ பலவோ அமையவே பாடப்பட்டுள்ளன. பேரரசரும், சிற்றரசருமாய்த் தமிழ

நாடாண்ட அரசர்கள் தம் வரலாற்றையேயன்றித் தமிழகத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளை ஆண்ட அரசர்கள் வரலாற்றையும் மாமூலனூர் அறிந்து அறிவித்துள்ளார்; அவர்தம் காலத்தே நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையே அல்லாமல், தம் காலத்திற்கு முற்பட்ட காலத்தே நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையும், அறிந்தார் வாய்க்கேட்டு அறிவித்துள்ளார்; அவர் பாக்களால் அறியத்தக்க அரசியல் நிகழ்ச்சிகளை முதற்கண் அறிவோமாக!

மாமூலனூர் காலத்தே, தமிழ் வேந்தர் தம் ஆட்சிப் பரப்பு, தமிழகத்திற்கு அப்பாற்பட்டு, பிறமொழி வழங்கும் நாடுகளிலும் பரவியிருந்தது; விற்போரிட்டுப் பகைவரை அழித்து, அவ் வெற்றியால் பெற்ற திறைப்பொருள் உண்ணும் வல்லாண்மை மிக்க வாழ்வினராய தமிழரசர் மூவரும் காக்கும், வேற்றுமொழி வழங்கும் நாடு என்ற தொடரால் அது வெளியாதல் காண்க.

"வென்றியொடு
வில்லலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேயம்." (அகம் : ௩௧)

வரலாறு விளங்க வாழ்ந்த சேர அரசர்களுள் முன்னிலையில் நிற்போன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனவன்; இவன் மனைவி, வெளியன் வேண்மான் மகள் நல்லினி என்பவள் என்றும், இவன் மகனே இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் என்றும் பதிற்றுப்பத்துப் பதிகத்தால் அறிகிறோம்; பாரதப் போர் நிகழும் காலத்தே, இருதிறப் படைகளுக்கும், போர் முடியுங்காறும் உணவளித்துப் புரந்தான் இவன் என முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற முதற் சங்கப் புலவர் மொழிவர். இவனைப் பாடிய புலவர், உதியன் சேரலாதன், பகைவர் நாடுகளை வென்று தன்னாட்டோடு சேர்த்துச் சேரநாட்டெல்லையை விரியக் கண்ட வீறுடையான் என்றும், அவனைப் பாடிச் செல்லும் பரிசிலர், பொருள்பெற்று மகிழ்வர் என்றும், உதியன் சேரலாதன் வீரத்திற் சிறந்த குதிரைப்படை உடையவன்;

பின்னேக்காப் பேராண்மை உடையவன்; இறந்து துறக்கம் எய்திய முன்னோர்க்காக, ஆண்டுதோறும் விழா வெடுக்கும் வழக்கமுடையவன்; அவ் விழாக் காலத்தே வருவார் எவர்க்கும் சோறு அளித்துப் புரக்கும் பேருள்ளம் உடையவன்; அச் சோறு உண்ணும் எண்ணத்தால், மக்களே அல்லாமல் கூளிகளும் அவண்வந்து குவியும் என்றும் கூறுகிறார். உதியன் பெருஞ்சோறு குறித்துப் புலவர் மாமூலனார் கூறுவனவே உண்மையாம்; வரலாற்று நெறியொடு பட்டதும் அதுவே என்பதைப் பிற புலவர் பாக்களும் உறுதி செய்கின்றன.

"நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவ வினி வாழி." (அகம்: கூ௬)

"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு." (அகம்: உ௩௩)

மாமூலனார், சேரலாதன் எனும் பெயருடையானொரு சேர அரசன், கரிகால் வளவனொடு, வெண்ணி எனும் இடத்தே நடத்திய போரில் புறப்புண் பெற்றான்; அது கண்டு உளம் வெட்கி உயிர்விடத் துணிந்து வடக்கிருந்தான்; இறந்து போகின்றான் என்பதனால் இன்னாமையும், புறப்புண் நாணி உயிர் விடுகின்றான் என்பதனால் இனிமையும் உடைய அச் செய்தி கேட்ட, அவன்பால் அன்புடைய சான்றோர் பலரும் அவனோடு வடக்கிருந்து உயிர்விட்டுத் துறக்கம் புக்கனர் என்ற செய்தியை ஓரிடத்தே கூறியுள்ளார். சேரர், சோழர் ஆகிய இரு குலத்தார் வரலாறுகளையும் ஒருங்கு வைத்து ஊன்றி நோக்குவார்க்குக் கரிகாலனோடு போரிட்டுப் புறப்புண் பெற்று உயிர்நீத்த சேரலாதன், பெருஞ் சோற்றுதியன் சேரலாதனே என்பது நன்கு புலனாம்.

"ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக்கு இருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பிறிது ஆகி யாங்கு." (அகம் : 55)

பெருஞ் சோற்றுதியன் சேரலாதனைப் பாராட்டிய புலவர் மாமூலனார், அவன் மகன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனையும் பாராட்டியுள்ளார்; நெடுஞ்சேரலாதன், சேரருட் சிறந்தோனாகிய செங்குட்டுவனை ஈன்றெடுத்த ஈடிலாப் பெருமை யுடையவன்; இவனுக்கு மனைவியர் இருவர்; சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை ஒருத்தி; வேளாவிக் கோமான் பதுமன் என்பான் மகள் மற்றொருத்தி; முன்னவள் வழியாகச் செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆய இருவரையும், பின்னவள் வழியாக, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆய இருவரையும் மக்களாய்ப் பெற்று மாண்புற்றான்; நெடுஞ் சேரலாதன் இமயம் வரை படையெடுத்துச் சென்று அம் மலைமேல் தன் இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தான்; ஆரிய அரசரை வென்று அடிபணியச் செய்தான்; கடலிடைத் தீவொன்றில் வாழ்ந்த பகைவர்மீது கப்பற் படையுடன் சென்று அவர்தம் காவல் மரமான கடம்பை வெட்டி யெறிந்தான்; இத்துணைப் பெருமை யுடையானாகிய நெடுஞ் சேரலாதனைப் பாராட்டிய புலவர், சேரலாதன் பெரும் படையும், வீர முரசும் உடையவன்; அவன் கடற் பகைவரை அழித்து அவர் காவல் மரமாம் கடம்பை வீழ்த்தி, அம் மரத்தால் முரசமைத்து வாழ்ந்தான்; தம் முன்னோரைப்போன்றே, இமயத்துச்சியில் தன் இலாஞ்சனையாம் விற்பொறித்தான்; அவன் பகைவர் பணிந்து போந்து, அவன் மாந்தைநகர் மனைமுற்றத்தே திறையாகக் குவித்த, பொற்பாவையும், வயிரமும் போலும் பொருள்களின் எண்ணிக்கை, ஆம்பல் எனும்

பேரெண்ணும் சிறிதாம் எனுமாறு மிக்கதாம் என்றெல்லாம் கூறிப் பாராட்டியுள்ளார் :

"சால் பெருந்தானைச் சேரலாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு"

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவண்
நிலந் தினத் துறந்த நிதியம்." (அகம்: ௩௪௭, ௧௨௭)

குட்டுவன் என்பான் ஒரு சேர அரசன்; அவன் ஆட்சிக் கீழ்வந்த சிறப்பால், ஒடுவங் காட்டிற்கு அப்பாற்பட்ட குடநாடு, பசியறியாப் பெருவளம் உடையதாயிற்று; அந் நாட்டு எருமை, தாமரையை மேய்ந்து, மிகுதியாக மேய்ந்துவிட்டமையால் அதை வெறுத்து பலாவின் நிழலில் தங்குதலை விரும்பும்; அக் குட்டுவனுக்குரிய அரண் மதிலை முற்றவும் அழித்ததோடு, அற்றைப் பகலே அவன் ஊரையும் தீயிட்டு அழித்தான் ஒரு சோழ அரசன் என்ற வரலாறுகளையும் குறித்துச் சென்றுளார் புலவர்;

"ஒடுங்காட் டும்பர்
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென அறியாப் பணைபயில் இருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு." (அகம்: ௯௧)

"குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பு." (நற்: ௧௪)

வானவரம்பன் என அழைக்கப்பெறும் சேரன் ஒருவனுக்குரியது வெளியம் எனும் பேரூர்; அது செல்வத்தாற் சிறந்த நலம்பல உடையது என்றும் கூறியுள்ளார். "வானவரம்பன் வெளியத்தன்ன நம்மாணலம்" (அகம் : கூருக) எனத் தோழி ஒருத்தி கூறினாளாகப் பாடியுள்ளமை காண்க.

தன்னைப் பகைத்த சேரலாதன், புறப்புண் பெற்று வடக்கிருந்து உயிர் துறக்குமாறு வெண்ணியில் செய்த கன்னிப் போரில் வெற்றிபெற்றான் கரிகாலன் எனப் பாராட்டிய புலவர், அக்கரிகாற் பெருவளத்தானால், வெண்ணெல் விளைந்து விழுச்சிறப்புற்ற சோணாட்டோர்களையும் உளமுவந்து பாராட்டியுள்ளார்:

"சோழர்
வெண்ணெல் வைப்பின் நன்னாடு." (அகம் : உ0க)

சேரரையும், சோழரையும் போற்றிப் புகழ்ந்த புலவர் மாமூலனார், பாண்டியர், பேரொளி வீசும் பொன்னாலாய அழகிய நெற்றிப்பட்டம் அணிந்த யானைகளையும், போரில், வெற்றியல்லது தோல்வி காணா விறலையும் உடையர்; அவர்க்கு உரியது உலகப் புகழ்பெற்ற கொற்கைத்துறை; அத்துறைவாழ் பரதவர் மகளிர், ஒளிவீசும் முத்துக்களுடன் வலம்புரிச் சங்குகளையும் சொரிந்து, கடற்றெய்வத்தைப் பேணி வாழ்வர் எனப் பாண்டியரையும், அப் பாண்டி நாட்டு முத்துவளத்தையும் முறையே பாராட்டிப் பரவுவர்:

"பொன்னின்
அவிர்எழில் நுடங்கும் அணிகிளர் ஓடை
வினைநவில் யானை, விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணிப் பொலிந்த கோடேந்தல்குல்
பழையர் மகளிர் பனித்துறை பரவ." (அகம் : உ0க)

மாமூலனார், சேர, சோழ, பாண்டியர்களாய பேரரசர்களைப் பாராட்டி அவருள் ஒருசிலர் வரலாறு விளங்கத்

துணை புரிந்ததோடு அமைதியுற்றாரல்லர்; அவர் காலத்தும், அக்காலத்திற்கு முன்னும், தமிழகத்தும், பிறநாட்டகத்தும் வாழ்ந்திருந்த சிற்றரசர் பலருடைய வரலாறுகளையும் விளக்கியுள்ளார்.

இன்று தர்மபுரி என வழங்கும் தகடூரை ஆண்டிருந்தான் அதியமான் நெடுமானஞ்சி என்பானொரு குறுநிலத் தலைவன்; ஔவைக்கு அரிய நெல்லிக்கனி தந்த அருள் உள்ளம் உடையான் அவன்; அத்தகையான், தன் நாட்டை அடுத்துள்ள பகைவர் நாடுகளுட் புகுந்து அந்நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்து வருவதை வழக்கமாக உடையவன்; இவனைப் பாராட்ட முன்வந்த புலவர் மாமூலனார், பிறை போல் வளைந்த வெண் கோடுகளையுடைய யானைப்படையும், சினம் மிக்கனவும், வலிமை உடையனவும், காற்றெனத் தாவிச் செல்வனவுமாய குதிரைப்படையும் உடையான் அஞ்சி; அவன் பகைவர் ஆனிரைகளைக் கவர்ந்து கொணர்ந்து மறைத்து வைப்பன் என ஆனிரை கவரும் அவன் ஆற்றலையே எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார்:

"பிறைமருள் வான்கோட்டு அண்ணல் யானைச்
சினமிகு முன்பின் வாமான் அஞ்சி
இனங்கொண்டு ஒளிக்கும் அஞ்சுவரு கவலை."
(அகம்: ககரு)

அதியன் எனும் குறுநில மன்னன் ஒருவனின் குண நலத்தைப், புலவர் மாமூலனார் போற்றிப் புகழ்ந்துள்ளார்; பாணரும், பொருநரும் பாடிப் பரவ வாழ்ந்திருந்தான் அதியன்; அவனுக்கு ஒரு நண்பன், அள்ளன் எனும் பெயர்பூண்டு வாழ்ந்திருந்தான்; அதியனுக்குப் படைத் துணைபோகும் பேராண்மையுடையவன் அவன்; அவன் துணையால் பெரு வெற்றிபெற்ற அதியன், அவன்பால் பேரன்புகொண்டு, பரிசிலாகத் தன் நாட்டின் ஒரு பகுதியையே அளித்துப் பெருமை செய்தான்; அத்தகையான் இறந்தபின்னர், அவன் அவையிடை வாழ்ந்த, பாணர், பொருநர் முதலாம் இரவலரை ஆதரிப்பாரின்மையால், அவர்தம் கிணைப்பறைபோலும் இசைக்கருவிகள் இயங்குதல்

ஒழிந்து அழிந்தன. இவ் அதியனையும், அள்ளனையும் தம் பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார் புலவர்:

"ஆடுநடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு."
(அகம் : ௩௨௫)

பொதினி எனப்படும் பழனிமலைக்கு உரியனாய் நெடுவேளாவி என்பானொரு வீரன் இருந்தான்; வையாவிக் கோப்பெரும்பேகன் பிறந்த ஆவியர் குடியில் வந்தவன் அவன்; அவனைப் பாராட்டும் புலவர் மாமூலனார், ஆவி, வண்டுகள் ஒலிக்கச் சூடிய தலைமாலையும், ஒளிவீசும் வீரக் கழலும் உடையவன்; அவன், அஞ்சத்தக்க குதிரை வீரர்களாய மழவர் என்பாரை வென்று ஓட்டிய வீரம் செறிந்தவன்; முருகனைப் போலும் பேராண்மை வாய்ந்தவன்; அவனுக்குரிய பொதினிமலை யானைகள் வாழ்வால் வளமுற்றது; பொன்னால் பொலிவுற்றது என்றெல்லாம் கூறிப் பாராட்டியுள்ளார்:

"வண்டுபடத் ததைந்த கண்ணி, ஒண்கழல்,
உருவக் குதிரை, மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி."

"முனாஅது
முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி." (அகம் : ௧; ௬௧)

வடுகர் தலைவனும், குடநாட்டின் ஒரு பகுதியை ஆள்வோனும் ஆய எருமை என்பானையும், அவன் குடநாட்டு நலத்தினையும், ஒரு பாட்டில் குறிப்பிட்டுள்ளார் புலவர்:

"நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்
ஆய் நலம்." (அகம் : ௧௧௫)

நீடூரில் வாழ்ந்தவனும், பாணரைப் புரப்போனும், பசும்பூண் பாண்டியனொடு பகைத்துப் பணியாது பெரு

மிதம் தோன்ற வாழ்ந்தமையால், அவனால் அழிவுற்றோனு மாய எவ்வி என்பானைப் பாராட்டும் புலவர், அவன் பாணரைப் புரக்கும் பெருமைவிளங்கப் பாராட்டியுள்ளார்; எவ்வியைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்த பாணர், அவன் இறந்தான் என அறிந்து, அவன் இறந்துகிடக்கும் போர்க் களம் சென்று அவனைக் கண்டு கண்ணீர்விட்டுக் கலங்கி, அவனை இழந்தபின்னர், அவனைப் பாராட்டப் பயன்பெற்ற தம் கையாழ், அத்தொழிற்கு இனிப் பயன்படாமை அறிந்து, வணங்கி வாழ்த்தவேண்டிய அதை முறித்து ஆண்டே எறிந்து அகன்றனர் எனக்கூறி, அவரை அவன் புரந்த அருமையும், அவன்பால் அவர் கொண்டிருந்த அன்பும் ஒருங்கே புலப்படப் பாடினார் :

" வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவில், பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர் மருப்பு." (அகம் : ககரு)

சோழ வேந்தர்க்கு அடங்கிப் பணிபுரியும் சிற்றரசாய் வாழ்ந்தாருள் எழினி என்பானும் ஒருவன் ; ஒருகால் சோழவேந்தன் குழிகளை வெட்டி, அதில் விழும் யானை களைப் பிணித்துவரும் யானை வேட்டைக்குச் சென்றி ருந்தான் ; அக்காலை அவனுக்குத் துணையாகச் செல்ல வேண்டிய எழினி சென்றானல்லன்; அதனால் சினங் கொண்ட சோழன், தன் படைத்தலைவருள் சிறந்தோனும், கழார்த்துறைக்கு உரியோனுமாய மத்தியை அனுப்பி, அவனை ஒறுக்கப் பணித்தனன்; சோழன் ஏவச் சென்ற மத்தி, எழினியைப் போரில் வென்று, அவ்வெற்றிக்கு அறிகுறியாக அவன் பல்லைப் பறித்துவந்து வெண்மணி எனும் ஊரின் வாயிற் கதவிற் பதித்து வைத்தான். எழினி, மத்தி இருவர்க்கிடையே நிலவிய உறவினை விளக்கும் இந்நிகழ்ச்சியைத் தம் பாட்டொன்றில் குறித்து, அக்காலப் பேரரசர் தம் ஆட்சிக்கீழ்ப் பணிபுரியும் படைத் தலைவர்பால் கொண்டுள்ள மதிப்பின் தன்மையினை விளக்கி யுள்ளார் புலவர் மாமூலனார் :

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ் சேணாட்டில் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந்து அழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை." (அகம்: உகக)

சேரர் படைத்தலைவர்களுள் கட்டி என்பவனும் ஒருவன்; பாணன் எனும் வடநாட்டு மற்போர் வல்லானை நண்பனாகக் கொண்டவன்; ஒருகால், உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த தித்தன் வெளியன் என்பானொடு போர்புரிய எண்ணிப் பாணனையும் துணையாகக் கொண்டுவந்தான். வந்தவன், தித்தன் நாளவைக்கண் ஒலிக்கும் கிணையோசை கேட்டே அவன் பெருமையுணர்ந்து, அஞ்சி அகன்றுவிட்டான்; இத்தகையான், தமிழகத்தின் எல்லையிலே வாழ்ந்து, வடுகர் போலும் பிறமொழியாளர் தமிழகத்துட் புகாவாறு பேரரணாய் விளங்கிவந்தான்; வடுகநாட்டிற்கும், தமிழகத்திற்கும் இடைப்பட்ட இவன் நல்ல நாட்டைக் குறிப்பிட்டுப் பெருமைசெய்துள்ளார் புலவர் மாமூலனார்:

"வடுகர் முனையது
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழி பெயர் தேஎம்." (குறுந்: கக)

பகைத்துப் போரிட வந்தாரை வென்று ஓட்டும் வெற்றித்திருவுடையானும், அதற்கேற்ற வீரம் செறிந்த படைத்துணையுடையானுமாய கண்ணன் எழினி என்பானையும், அவனுக்குரிய தேன்வளம் மிக்க முதுகுன்றம் எனும் மலையையும் பாராட்டும் மாமூலனார், அம்மலை தமிழகத்திற்குச் சேய்மைக்கண் உளது என்பதுபடக் கூறியுள்ளார்.

"முன்னுவர் ஓட்டிய முரண்மிகு திருவின்
மறமிகு தானைக் கண்ணன் எழினி
தேமுது குன்றம் இறந்தன ராயினும்." (அகம்: கசுள)

தமிழ் நாடாண்ட குறுநில மன்னர்களுள் திதியன் எனும் பெயருடையார் பலராவர்; அவருள் ஒரு திதியன், தன் நாளோலக்கக் காலத்தே, ஏழிசைத்துறையில் வல்லராய், யாழிசைத்துப் பாடிப் பரவும் பாணர், பெருமகிழ்ச்சி கொண்டு ஆரவாரிக்குமாறு அவர்க்கு அரிய அணிகலன் பல அளிக்கும் அருள்நெறி அறிந்தவனாவன்; வள்ளலாய அவன், வாட்போர் வல்ல வீரனுமாவன்; ஒருகால் அவன் தன்னை எதிர்த்த வேளிரொடு பெரும்போர் புரிந்து வெற்றிபெற்றான். இச் செய்தியும் மாமூலர் செய்யுட்டுணை கொண்டே அறியப்படுவதாயிற்று:

"அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாணர் ஆர்ப்பப் பலகலம் உதவி,
நாளவை இருந்த நனைமகிழ் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்வாய்" (அகம்: ௩௩௧)

வேள் மரபில் வந்தோருள், நன்னன் என்பான் நனி சிறந்தவனாவன்; அவன் கொண்கான நாட்டகத்ததாய ஏழில்மலை, பாழி, பாரம் முதலாய ஊர்கட்கு உரிமையுடையான்; பாழி, பகைவரான் கைப்பற்றற்கரிய காவலையுடையது; வேளிர் பலரும், தம் அரும்பொருளை வைத்துக் காக்கும் அத்துணைச் சிறப்புடையது; தன் தோட்டத்து நறுமாவின் காயொன்றைத் தின்றாள் என்பதற்காக, அவள் தந்தை அத் தப்பிற்குத் தண்டமாக எண்பத்தோர் யானைகளும், அவள் நிறை பொன்னாலாய பாவையும் தர முன் வந்தும் ஏற்றுக்கோடாது, அவளைக் கொன்ற அறக்கொடியோனாயவன் இந்நன்னனே. இந்நன்னனுக்குரிய பாழியின் சிறப்பையும், நீதி வழங்குவதில் நடுநிலை பிறழாமையுடையனாய அவன் தன்னைப் பாடிவரும் பரிசிலர்தம் வறுமையைப் போக்க, பகைவர்தம் பேரரண்களை ஆற்றல் கொண்டு அழித்து ஆங்குத் தான் பற்றிக்கொணர்ந்த பெரும்பொருளை வரையாது வழங்கும் வள்ளன்மைச் சிறப்பையும் எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார் புலவர்.

"சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடை வியனகர்ச்
செறிந்த காப்பு."

"ஒருமன்ன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலந்த ஒக்கல் பாடுநர் செலினே
உரன்மலி உள்ளமொடு முனைபா ழாக
அருங்குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம்." (அகம் : கரு ; நடசக)

சேரன் செங்குட்டுவனால் அழிக்கப்பெற்ற வியலூர்க்கு உரிமையுடையனாய் வாழ்ந்த நன்னன் வேண்மான் என்பானையும், அவன் பாணரைப் புரக்கும் பேரன்பினையும், வீரக் கழலையும், விளங்கப் பாடிய மாமூலனார் பாட்டும் ஒன்று உளது; ஈண்டுப் பாராட்டப்பெற்ற நன்னன் வேண்மான் என்பான் முன்னர்க் கூறிய நன்னனே ஆவன் :

"அகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்." (அகம் : கள)

வடநாட்டினின்றும் போந்து, தமிழகத்தே வாழ்ந்து, தமிழ்ப் புலவர் போற்றுதலைப் பெற்றானுள் பாணன் என்பானும் ஒருவன்; இவன், முன்னர்க் கூறிய கட்டி என்பானின் நண்பனாவன்; மற்போரில் வல்லனாய இவன், ஒருகால், தன்னைப்போன்றே தமிழகம் புகுந்து வாழும் ஆரியப் பொருநன் எனும் மற்றொரு வடநாட்டு மற்போர் வல்லானொடு பொருது வெற்றிபெற்றான்; இவனையும், இவனுக்குரிய வேற்படைச் சிறப்பையும், வடநாட்டின் கண்ணதாய இவன் நாட்டின் நன்மையையும் பாராட்டியுள்ளார் ஒரு பாட்டில் :

"வடாஅது
நல்வேல் பாணன் நன்னாடு." (அகம் : நஉரு)

தமிழகத்தின் வடக்கெல்லையாக விளங்கும் வேங்கட மலையையும், அதைச் சூழ உள்ள சிறு நாட்டையும் ஆண்டு வந்தான் புல்லி எனும் வீரன் ஒருவன்; புல்லி சிறந்த வீரர் பலர் சூழ வாழ்ந்தவன்; மழவர் எனும் குதிரை வீரரை வென்றவன்; வீரர் சூழ வேட்டைமேற் சென்று களிறு பல கைப்பற்றிக் கொணர்வன்; கள் விற்றுப் பெற்ற நெல்லால் ஆக்கிய சோற்றுணவை, தன் நாளோலக்கம் காண வருவார்க்கு அளித்து மகிழ்வன்; அவன் வேங்கடம் விழாக்கள் பல நடைபெறுவதால் பெற்ற பெரும் புகழுடையது; அவ் வேங்கடம், தமிழகத்திற்கே அல்லாமல், அப் புல்லியின் நாட்டிற்கும் வடவெல்லையாம்; வேங்கடத்தைக் கடந்தால் தமிழ்மொழி வழங்காது; வேங்கடத்திற்கு வடக்கே வடுகர் நாடு உண்டு; புல்லி, பொய்யா நாவுடையன்; புல்லி, கள்வர்குலத் தலைவன்; என்ப; இக் கள்வர் என்பார், சங்க காலத்தை அடுத்து நிலவிய தமிழகத்து அரசியல் இருள் நிலைக்குக் காரணமாய களப்பிரரே எனக் கொள்வாரும் உளர். இப் புல்லியையும், அவனுக்குரிய வேங்கட நாட்டுச் சிறப்பையும் புலவர் மாமூலனார், பல பாக்களில் வைத்துப் பாராட்டியுள்ளார்:

"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவு நொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்."

"புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழி பெயர் தேஎம்."

"புல்லி நன்னாட்டு உம்பர்ச் செல்லரும் சுரம்"

"பொய்யா நல்லிசை மாவண் புல்லி"

"நிரைபலகுழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம்."

(அகம்: ௬௧, ௨௬௫, ௩௧௧, ௩௯௩, ௩௯௩)

"கடுமான் புல்லி காடு" (நற்: ௧௪)

புலவர் மாமூலனார், தமிழகத்து வரலாற்று நிகழ்ச்சிகளையே யல்லாமல், தமிழகத்திற்கு மிகமிகச் சேய்மைக் கண்ணதாய வடநாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளையும் விளங்க அறிந்தவராவர்; அவர் கூறும் அந்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் பல. வடநாட்டில், கங்கைக்கரையில் பாடலிபுத்திரத்தைத் தலைநகராக்கொண்டு வாழ்ந்தபேரரசுகள் பலவாம்; அவ்வரசுகளுள் நந்தர்குலப் பேரரசும் ஒன்றும்; அந் நந்தர் பொருளாசை மிக்கவராவர்; அவ்வரசர்களுள் ஒருவன் மகாபதுமம் எனும் பேரெண் அளவு பெரும பொருள் படைத்து மகாபதும நந்தன் எனப் பெயர்பூண்டு வாழ்ந்தான் என்றும்; அவ்வாறு ஈட்டப்பெற்ற அப்பெரும் பொருள் மாற்றார் படையெடுப்பால் அழிவுறு வண்ணம், கங்கையாற்றின் அடியில் சுருங்கை அமைத்து, ஆங்கு அப்பொருளை வைத்துக் காத்தனர் என்றும், பின்னர், கங்கையின், மாறிய போக்கால், அச்செல்வம் காணப்பெறாது அழிந்து விட்டது என்றும் வடநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறும் இவ் விளக்கங்களைப் புலவர் மாமூலனாரும் அறிந்து கூறியுள்ளார்.

"புல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம்."

"நந்தன் வெறுக்கை எய்தினும்."

(அகம்: ௨௬௫, ௨௫௧)

தமிழ்ச் சங்க காலத்தே தளரா வளம் பெற்று விளங்கிய தமிழகம், பிறநாட்டு வீரர்கள் உளத்தே பேராசைத் தீயைத்தூண்ட அதனால், தமிழகத்தின் மீது தண்டொடு வந்தோர் பலராவர்; அவ்வாறு வந்தாருள், தமிழகத்தின்

அரசியல் அமைதி குலையுமாறு பெரும்படையுடன் வந்து புகுந்தவர்கள், கோசர், மழவர், மோரியர், வடுகர் என் போராவர். இவருள் கோசர் எனப்படுவார், மங்களூரை நடுவிடமாகக் கொண்ட துளுமொழி வழங்கும் நாட்டை வாழ்விடமாகக் கொண்டவர்; அசோகனால் சத்யபுத்ரர் என அழைக்கப் பெறுவார் இவரே என்ப; கோசர் வாய்மொழி வழுவாதவர்; அவர்கள், தமிழகத்துட் புகுந்து, சோணாட்டில் குடியேறி உழுதொழில் மேற்கொண்டு வாழ்ந்தனர்; ஆதன் எழினி என்பானுக்குரிய செல்லூர்க்குக் கிழக்கே உள்ள நியமம் என்ற ஊர் அவர்க்கு உரியதாய் இருந்தது; நன்னன் நறுமாவைக் கொன்று, அவன் பகைவன் அகுதைக்கு அடைக்கலம் தந்து காத்தனர்; தாம் விளைத்த பயிரை மேய்ந்தது பசு என்பதற்காக, அப்பசுவுக்குரியோன் கண்களைப் போக்கியதனால், அழுந்தூர்த் திதியனால் அழிக்கப் பெற்றனர். தமக்குப் பணியாத மோகூர் மன்னனை மோரியர் துணைகொண்டு தாக்கினர்; இறுதியில் பாண்டியன் படைவீரராகத் தொழிலாற்றினர். இதுவே தமிழ்நூல் அறிந்த கோசர் வரலாறு. மாமூலனார், கோசர் மெய்ம்மையிற் சிறந்தவர்; அவர்க்குரியது துளு நாடு; அந்நாட்டுச் சோலைகள் மயில்கள் நிறைந்தன; அந்நாட்டுப் பேரூர்வாழ் மக்கள், தம்மூர்நோக்கி வரும் வறியவரைப் புரக்கும் வள்ளன்மையுடையவர் என்றும், வெற்றிக்கொடியும், விரைந்த செலவும் உடைய தேர்ப்படை உடையராய அக்கோசர், தம் பகைவராயினரெல்லாரையும் அழித்து வருங்கால், தமக்குப் பணியாது நின்ற மோகூர் மன்னன் பழையன் என்பானை மோரியர் துணைகொண்டு தாக்கினர் என்றும் கூறி, அவர் வரலாற்றின் ஒருபகுதி விளங்கத் துணைபுரிந்துள்ளார்:

"மெய்ம்மலி பெரும்பூண் செம்மல் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகலார்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட்டன்ன
வறுங்கை வம்பலர் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்."

" துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன் மூதாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்." (அகம்: ௨௫; ௨௫௧.)

மழவர் வரலாறாக மாமூலனார் அறிவிப்பன இவை;
மழவர் தமிழகத்திற்குப் புறம்பான மொழிபெயர் நாட்டவராவர்; கல்வியறிவு வாய்க்கப்பெறாத அவ்வீரர், வில்லை இடப்பக்கத்தே தழுவிநின்றவாறே, வழிப்போவாரை எதிர் நோக்கி, அஞ்சத்தக்க வழிகளில் காத்துக்கிடப்பர் :

" கல்லா மழவர் வில்லிடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழி பெயர் தேஎம்." (அகம் : ௬௭)

களவாடி உண்ணும் கொடிய வாழ்வுடையராய அம் மழவர் வாழிடம், குடநாட்டை அடுத்துள்ள ஒடுவங்காடு எனும் இடமாம் :

" கடுங்கண் மழவர் களவுழ எழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டும்பர்
.................................................
குடநாடு." (அகம் : ௧௫)

மழவர் சுருண்டு விரிந்த தலைமயிர் உடையர்; சிவந்த கண்ணினராய அவர், வாயினின்றும் எழும் இருமலை அடக்குதற்குப் புற்றுமண்ணை வாயில் அடக்கிவைப்பர்; தீப்போல் கொடிய அம்பும், வில்லும் உடையராய், காற் செருப்புத் தேயக் கடிதுசென்று, காத்துநிற்கும் பகைவரை ஓட்டிவிட்டு, அவர்தம் ஆனிரைகளை ஓட்டிவருவர் :

" தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுப் புரிந்த
சுவல்மாய் பித்தைச் செங்கண் மழவர்,
வாய்ப்பகை கடியும் மண்ணொடு, கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி

துரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து
அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்
இனந்தலைப் பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காடு."
(அகம் : கUக)

தம்மைப் பகைப்பார்தம் நாட்டைப் பாழ்செய்யும் பேராற்றல் வாய்ந்த அம் மழவர், தம் மரபினர்தம் வீரம் குன்றாது விளங்கித் தோன்றுதல் வேண்டும் எனும் வேட்கை யுடையராய்த் தம் இளைஞர்க்குப் போர்ப்பயிற்சி அளித்து, அரங்கேற்றம் செய்து அகமகிழ்வர்; அவ்வரங்கேற்ற நாளன்று, ஊரையும், வீட்டையும் அணிசெய்து காண்பர்:

"தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்." (அகம் : கஅஎ)

மழவர், தமக்கு ஆகாதார் நாடுகளுட் புகுந்து நிரைகளைக் கவர்ந்து வருவதையே தொழிலாகக்கொண்டுவிட்டமையால், அவரை அழிக்க எண்ணிய அரசர் பலராவர்; அவ்வாறு அவர்களை வென்று துரத்தி வீறுகொண்டோருள், பொதினியை ஆண்ட நெடுவேள் ஆவியும், வேங்கடத்தை ஆண்ட புல்லியும் சிறந்தோராவர் எனக் கூறுகிறார் மாமூலனார்.

"மழவர் ஓட்டிய ..
முருகன் நற்போர் நெடுவேளாவி."
"மழபுலம் வணக்கிய மாவண் புல்லி." (அகம் : க, சுக)

மௌரியப் பேரரசர்களுள், அசோகனுக்கு முன்னோனாய பிந்துசாரன் தென்னாட்டின்மீது படையெடுத்து, அந்நாட்டின் பெரும் பகுதியை வென்று கைக்கொண்டான் என வரலாற்று நூல்கள் உரைக்கின்றன; அவ்வாறு தென்னாடு நோக்கி வந்த அவன், தமிழ்நாட்டில் தன் ஆற்றலைக் காட்டமாட்டாது மீண்டான்; மௌரியர் தென்னாடுபோந்த இச் செயலைத் தமிழ்ப்புலவர் சிலரும்

தாம் பாடிய பாக்களில் குறிப்பிட்டுள்ளனர்; வடநாட்டு நிகழ்ச்சிகளை விளங்க உணர்ந்தவராய மாமூலர், மோரியர் படையெடுப்பினை இரண்டிடத்தே எழுதிக் காட்டியுள்ளார். தமிழகத்தின் வடக்கெல்லையை ஒட்டிய நாட்டினராய வடுகரை வழிகாட்டும் தூசிப் படையினராக் கொண்டுவந்த மோரியர், தம் தேர்ப்படை தடையின்றித் தென்னாட்டில் புகும்வண்ணம், வழியிடை யிருந்த மலைகளை வெட்டி வழி யமைத்தனர் என்றும், அவ்வாறு வந்த அம் மோரியர், மோகூர் மன்னனைப் பணியவைப்பான் வேண்டிப் பெரும் போர் புரிந்துகொண்டிருந்த கோசர்க்குத் துணைபுரிந்து அவர் துணையையும் பெற்றனர் என்றும் மாமூலனார் கூறி யுள்ளமை காண்க:

"வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை."

"கோசர்..................
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய அறை."

(அகம்: உ௮௧, உ௫௧)

கோசர், மழவர்களைப் போன்றே தமிழரசர்கட்குத் தீராத் தொல்லை தந்து வந்தவர் வடுகராவர்; இவரை வென்று அடக்க வீறுகொண்டெழுந்த வேந்தர் பலராவர்; அத்துணை ஆற்றல் வாய்ந்தவராய இவ்வடுகர், புல்லிக்குரிய வேங்கட மலைக்கும், கட்டி என்பானுக்குரிய நாட்டிற்கும் வடக்கின் கண் உள்ள நாட்டில் வாழ்பவர்; தமிழ்மொழிக்கு அய லான ஒரு மொழியை வழங்குபவர்; விற்போரில் வல்லவர் என்றெல்லாம் கூறி இவர் வரலாற்றின் ஒருபகுதியைவிளக்கி யுள்ளார் புலவர் மாமூலனார்.

"புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம்." (அகம்: உகடு)

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல் வேற்கட்டி நன்னாட்டும்பர்
மொழிபெயர் தேஎம்." (குறுந்: கக)

வானுற உயர்ந்து, படரும் புகைபோல் பனிதவழும் செந்தீப் பிழம்பெனத் தோன்றும் இமயம் என மாமூலர் காட்டும் இமயக்காட்சி, கண்ணிற்கு விருந்தளிக்கும் காட்சியாதல் காண்க.

"புகையிற் பொங்கி, வியல் விசும்பு உகந்து
பனியூர் அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செவ்வரை." (அகம்: உகடு)

மாமூலனார் உரைத்த அரசியல் உண்மைகளைக் கண்ட நாம், இனி அவர்காட்டும் அகத்துறைக்காட்சிகள் சிலவற்றைக் கண்டு களிப்போமாக.

தலைவன் ஒருவன், தன்பால் அன்புடையாளொரு தலைவியைக் காதலித்தான்; அவர்களிருவர்க்கிடையே உண்டாய அக்காதல் வாழ்வைத் தலைவியின் தமர் உணர்ந்தாரல்லர்; மணப்பருவம் வந்துற்ற மகள் இனி, புறத்தே போதல் நன்றன்று என உணர்ந்த நற்றாய், அவளை வீட்டை விட்டுப் போகாவண்ணம் இற்செறித்து விட்டாள்; இதனால், தலைமகளைக் காணல் தலைவனுக்கு அரிதாயிற்று; அவன், அவள்பால் கொண்ட அன்பு, அவளை எவ்வாற்றானும் காணுமாறு தூரத்திற்று; தலைவியின் ஊரோ, புறத்தார் எவரும் எளிதிற் புகலாகா அரிய காவலையுடையது; அவ்வூர் நடுவே அமைந்துள்ள அவள் வீடும் அரண்பல உடையது; ஆகவே, பகலிற் சேரின், காவலர்க்குப் புலனும் என உணர்ந்த தலைவன், இராக்காலம் வந்துற்றதும், காவலர் அறியாவண்ணம், அவ்வூருட்புகுந்து, அவள் மனையை

அடைந்து விட்டான்; ஆனால், உடனே உட்புகுதல் இயலாததாயிற்று; தாயும், தமரும் உறங்கும் வரை ஆங்கேயே காத்துக்கிடந்தான்; பேயும் கண்ணுறங்கும் நள்ளிரவு வந்துற்றதும், ஒருவாறு எல்லோரும் உறங்கிவிட்டனர் என்பதை உணர்ந்த அவன், இருந்த விடத்தை விட்டு எழுந்து ஓசைஎழாவாறு மெத்தென நடந்து சென்று, அம்மனைவாயிலிடத்து வலிய கதவினைப் பையத்திறந்து உட்புகுந்தான்; பின்னர் அவளைக் காணத் தான் பட்ட துயரெலாம் ஒழியும் வரை, அவளோடு அன்புரை வழங்கி அளவளாவி யிருந்து மீண்டான். களவுக் காலத்தே, காதலியைக் காணத்துடிக்கும் காதலன் செயலைக் கவினுறக் காட்டிய புலவர், அவன் அவள் மனையகத்தே காத்துக்கிடப்பது, வள்ளியோர் கடைத்தலை, வந்து காத்துக்கிடக்கும் இரவலர் செயல் போலும் என உவமையும் கூறியுள்ளார்.

> "இரும்பிடிப் பரிசிலர் போலக் கடை நின்று
> அருங்கடிக் காப்பின் அகனகர் ஒரு சிறை
> எழுதியன்ன திண்ணிலைக் கதவம்
> கழுது வழங்கு அரை நாள் காவலர் மடிந்தெனத்
> திறந்து நப்புணர்ந்து நம்மிற் சிறந்தோர்
> இம்மை உலகத்து இல் எனப் பன்னாள்
> பொம்மல் ஓதி நீவிய காதல்." (அகம்: ௩௧௧)

பண்டைத் தமிழ்மகன் ஒவ்வொருவனும் வீரனாய் விளங்கினான்; அவன், போரில் புண்பெறலைப் புகழ்பெறு செயலாப் போற்றினான்; போர்க்களம் புகுந்தான்; புண் பெறாது கழிந்த நாளைத் தன் வாழ்நாளில் பயனின்றிக் கழிந்த நாள் எனக் கருதினான். "விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து" எனக் கூறுவர் வள்ளுவரும் (௭௭௬). இதற்குக் காரணம், இம்மையில் போரில் புண்பெற்று இறந்தாரே, மறுமையில் மாறாப் பேரின்ப நிலைபெறுவர் என அவர்கள் நம்பியதேயாம். அதனால், போரில் இறவாது, இயல்பாக நோயுற்று இறந்தார் உடலையும், வாளூற்று விளியாமையால் வந்துற்ற அவர் பழிநீங்குமாறு, அவர் உடலைத் தருப்பைப் புல் மீது

கிடத்தி, "நல்லமர் வீழ்ந்த நாணுடை மறவர் பெறும் நன்னிலை இவர்க்கும் வாய்க்குமாக" எனக்கூறி வாளால் வெட்டிப் பின்னர்ப் புதைப்பர். இவ்வாறு வளர்ந்து வாழ்ந்து இறந்தார் உடலையேயன்றி, பிறந்தபோதே இறந்த குழவியின் உடலையும், உருவற்றுப் பிறந்த ஊன் தடியையும் அவ்வாறே வெட்டிப்புதைப்பர்:

"நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்து, அவர் தீது மருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறம் கந்தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்க என
வாள் போழ்ந்து அடக்கல்."

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்."

(புறம்: கூ௩; எ௪)

தமிழர் தம் தன்னேரில்லா இப்பண்புணர்ந்த புலவர் மாமூலனார், நாடுகாவற் பணிகுறித்துப் போர் மேற்கொண்டு பிரிந்து சென்ற தலைவன் ஒருவனைக் கூறுங்கால், கூற்றுவன் கொள்ள வீணே இறவாது, தம் பொருளைப் பிறர்க்கு அளித்துப் புகழ் நிறைந்து போரிடை இறந்தாரே, பெருந்தவம் புரிந்தோராவர் என்பதை வற்புறுத்தி யுணர்த்தி விட்டு, தன் வெற்றிச் சிறப்பை விளக்கிக் காட்டப் பிரிந்தான் எனக் கூறிப் பாராட்டியுள்ளமை காண்க:

"நேற்றோர் மன்ற தாமே, கூற்றம்
கோளுற விளியார், பிறர்கொள விளிந்தோர் எனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்." (அகம்:௬௧)

உடனிருந்து அன்புசெய்ய வேண்டிய தலைவர், தன்னைப் பிரிந்து, காடு மலையும், காட்டாறும் இடையிட்ட சேய்நாட்டிற்குச் சென்றுவிட்டார் என வருந்திய தலைமகள், தன் தோழியை நோக்கி, "தோழி! நம்மைத் தனித்துத் துயருறப் பிரிந்துசென்ற தலைவர் நம்மோடு

உடனுறைந்த காலத்தில் அவர்க்கு இடையறா இன்பம் தந்தோமே யன்றிச் சிறிதும் துயர் தந்தோமில்லை ; இங்ஙனம், நன்றன்றித் தீதொன்றும் செய்தறியேமாகவும், நாம்வருந்த அவர் பிரிந்தது ஏனோ ? உலகத்தார், இம்மையில் நன்மை புரிந்தார்க்குத் தீமை வந்துறுவதில்லை என்று கூறுகின்றனரே ; பண்டுதொட்டு வந்த அப் பழமொழி, இன்று, நம்மளவில் பொய்த்துவிட்டது போலும் !'' எனக்கூறி வருந்தினாள் எனப்பாடி நல்லன புரிந்தார் அல்லன உறுதல் இல் என நம்பும் தம் உள்ளத்தையே காட்டியுள்ளார் புலவர் :

“ அம்ம வாழி தோழி ! இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று கொல் ?
.........................................
பனிபடு பன்மலை இறந்தோர்க்கு
முனிதரு பண்பு யாம்செய்தன் றிலமே.”(அகம் : க0க)

பொருள்கருதிப் பிரிந்து சென்றுளான் தலைவன் ; தலைவனைப் பிரிந்தறியாத் தலைவி, அப்பிரிவினைத் தாங்காது பெரிதும் வருந்தினாள் ; அதனால், அவள் உடல் நலனும் குன்றிற்று ; அவளும் அழகிழந்து தோன்றலாயினள் ; அவ்வூரில் வாழும் பெண்டிர் பிறரைப் பழி கூறுவதில் மகிழ்ச்சிகாணும் மனமுடையவராவர் ; பிறர்பால் பழியில்லையாகவும், பொருந்தாதன சிலவற்றை ஏறிட்டுக் கூறியாவது இன்பம் காண்பது அவர் இயல்பு ; அத்தகையார், நலம் குறைந்து தோன்றும் இவளைப் பழிக்காதுவிடார் ; இதையெல்லாம் உணர்ந்த தோழி, விரைந்து வந்து சேருமாறு தலைவனுக்குத் தூதுவிடவும் எண்ணினாள் ; தோழியின் கருத்தை உணர்ந்தாள் தலைவி ; தன்பால் பேரன்புடைய அவர், தன் துயர்நிலை அறியின், தாம் மேற்கொண்ட வினையை முடியாது விடுத்தே வந்துசேர்வர் என்பதை உணர்வாள் ; அவர் அவ்வாறு வருதல் அறமுமன்று ; தம் ஆக்கமும் தேயும் ; ஆகவே அவர் வினை முடியாமுன்னர் மீண்டு வருதலை விரும்பினாளல்லள் ; தோழிபால், “தோழி ! ஊர்ப்பெண்டிர் உரைப்பன உரைக்க ! என் நலன் கெடினும்

கெடுக! பொருள்கருதிப் பிரிந்துசென்ற நம் தலைவர், அவ் வினை விரைவில் முடிந்திலாமையாலன்றோ இன்னமும் வந் திலர்; அவர் அவ்வினையைக் குறைவற முடித்து வரத்தக்க முழுவலி பெறுவாராக! அதையே யான் வேண்டுகின்றேன்" என்று கூறினாள்; என்னே அத்தலைவியின் உள்ளம்!

" அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்
பழியிலாராயினும் பலர்புறங் கூறும்
அம்பல் ஒழுக்கமும், ஆகிய வெஞ்சொல்
சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக!
நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்
ஆய்நலம் தொலையினும் தொலைக! என்றும்
நோயிலராக நம் காதலர்!.........
.........................................
நன்னர் ஆய்கவின் தொலையச் சேய்நாட்டு
நந்நீத்து உறையும் பொருட்பிணிக்
கூடாமையின் நீடியோரே." (அகம்: கக௫)

தலைவன் பொருள்கருதிப் பிரிந்திருந்த காலத்தே, தனிமை பொறாது வருந்தும் தலைமகள் முன் சென்று, "தோழி! போகம் விரும்புவார் பொருள் உடையராதல் இயலாது என்ப; போகத்தை விரும்பிப் புகழ்தரும் பொருள் தேடிச்செல்லாமல் இருத்தல், ஆண்மகற்கு அழ கன்று; அத்தகையார் நாணற்றவராவர் என நல்லோரால் இழித்திடப்படுவர்; "மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது" என்று பெரியோர் கூறும் பொன்னுரையும் உண்டு; இதை உணர்ந் தவர் நம் தலைவர்; நம் தோள் தனிமையுற்றுத் துயர் உறுவது ஒழிய என்றும் நம்மோடு இருந்து நாள் பல கழித்தல் நாணத்தக்கதாம் என உணர்ந்தே அவர் அரும் பொருள் தேடிச் சேய்நாடு சென்றுளார்; இதை உணர்ந்த நீ, அவர் பிரிவு குறித்து வருந்துவது நன்றன்று" என்று அறிவுரை கூறி ஆற்றினாள். இடனறிந்து ஏற்றன கூறும் அத்தோழியின் அறிவின் பெருமையினைப் பாராட்டியுள் ளார் புலவர்:

"தோள்புலம்பு அகலத் துஞ்சி, நம்மொடு
நாள்பல நீடிய கரந்துறை புணர்ச்சி
நாணுடை மையின் நீங்கிச் சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமோ டேகி
நம்முயர்வு உள்ளினர் காதலர்." (அகம் : கஅஎ)

தாய்மனை வாழ்வே வேண்டின், தான் விரும்பும் காதலனை மணத்தல் இயலாது; தமர்புறத்தார்க்கு வரைவு நேர்தலும் செய்வர் என அறிந்த தலைவி, தமர் அறியா வண்ணம் தலைவனோடு கூடி அவனூர் சென்றுவிட்டாள். இதை அறிந்த அவள் தாய், தன் மகளை அவள் விரும்பும் அன்புடையானுக்கு மணம்செய்துதர மறுத்த தன் தவறு உணராது, அன்புடையானுடன் சென்றுவிட்ட அவளைப் பலவாற்றானும் பழித்துரைக்கும் இக்காலத்தாய்போலன்றி, "யான் அவள்பால் கொண்டுள்ள அன்பு உண்மையாய் அதன் பயன் தருவதாயின், அவள் தோழிமாரும், யானும் வருந்துமாறு எம்மைவிட்டுப் பிரிந்து, தன் மனதிற்கினிய துணைவனுடன் சென்ற என் மகள் செல்லும் வழி தம் ஊர் நோக்கி வரும் வறியரை வரவேற்றுப் பேணும் பெருமையுடைய நம் ஊரில் அவள் அறிந்த மக்களை உடைய தாகுக!" என்றே விரும்பினாள். கடமையறிந்த அத் தாயுள்ளத்தின் கனிவுதான் என்னே!

"எம்வெங் காமம் இயைவ தாயின்,
...... ................................
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அறிந்த மாக்கட்டு ஆகுக தில்ல;
தோழிமாரும் யானும் புலம்ப
..........................................
இன்துணைப் படர்ந்த கொள்கையொடு ஓராங்குக்
குன்ற வேயில் திரண்ட என்
மென்தோள் அஞ்ஞை சென்ற ஆறே." (அகம் : கரு)

மாமூலனார், அழகிய உவமைகளை ஆங்காங்கு அமைத்துப் பாடவல்லவராவர் என்பது அவர் பாக்களை நோக்கினார்க்கு இனிது புலனாம். அவர் காட்டும் உவமைகளுள் சில;

சூல் கொண்ட பிடி யொன்று ஒருபால் படுத்துளது; அப் பிடியைத் தழுவியபடியே அதனை அணைத்துப் படுத் துளது களிறு; அக் களிற்றின் மீது ஏறியும், இறங்கியும் ஆடி மகிழ்கிறது அதன் கன்று; இக் காட்சியைக் கண்டார் மாமூலனார்; அந்தக் காட்சி, நாட்டகத்தே தாம் கண்ட ஒரு காட்சியை அவர் கண்முன் கொணர்ந்து காட்டிற்று: அக் காட்சி: தோள்களிற் படிந்து இருண்டு தொங்கும் கூந்தலையுடைய தன் மனைவியைத் தழுவிக் கொண்டுள்ளான் ஓர் ஆண் தகை; அவன் மார்பில் ஏறியும், இறங்கியும் ஆடி மகிழ்கின்றான் அவன் மகன். இரண்டு காட்சிகளும் கண் ணிற்கு விருந்தளிக்கும் கவின் மிகு காட்சிகளன்றோ?

"தோள் தாழ்பு இருளிய குவையிருங் கூந்தல்
மடவோட் தழீஇய விறலோன் மார்பில்
புன்தலைப் புதல்வன் ஊர்பு இழிந் தாங்குக்
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண் கோட்டு
இனஞ்சால் வேழம் கன்று ஊர்பு இழிதரப்
பள்ளி கொள்ளும்." (அகம்: ககஎ)

கணவனும், மனைவியும், மகனும் கூடிய கவின் மிகு காட்சியைக் காட்டிய புலவர், மற்றொரு பாட்டில், துன்பம் வந்துற்றக்கால், அவர் மூவரும், ஒருவரை யொருவர் அறியாமல் வேறு வேறு திசையில் பிரிந்து சென்று பெருந் துயர் உறும் காட்சியையும் காட்டியுள்ளார். புலி பாயப் பெற்ற களிறு துயர் தாங்கமாட்டாது வருந்தி முழங்கிய ஒலியைக் கேட்டு அஞ்சித் தன் கன்றையும் மறந்து ஓடிய பிடியானைப் பின்னர் அக் கன்றைத் தேடியலையும் காட்சி, மகவு மறைய வருந்திய தாய் ஒருத்தி, தலைமேல் வைத்த கையளாய் அம் மகவைத் தேடிப் போவதுபோலும் என்ற அவர் உவமையின் அழகே அழகு!

ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட்டு யானை முழக்கிசை வெரீஇக்
கன்று ஒழித்து ஓடிய புன்தலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடு மகப் பெண்டிரிற் றேரும்." (அகம்: நஉஎ)

## ௧௩. மாயெண்டனூர்

மாயெண்டனூர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் வந்துளது என்பதல்லது, இவர் வரலாறாக உரைப்பதற்கு வேறு எதுவும் தெரிந்திலது. பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவன், மீண்டு வருங்கால், "வாடையே! நெல்லிக்காயைத் தின்ற மரையினம் மகிழ்ந்தாடும் முன்றிலையும், புல்வேய்ந்த குடிசைகளையும் உடைய நம் தலைவியின் ஊர், தொங்கும் பாம்பின் தோல்உரி போன்ற, தூய வெள்ளிய அருவிகள் விளங்கும் மலையின் உயரத்தே உளது; ஆண்டுள்ள தலைவியை வருத்தாது காப்பாயாக," என வாடையை நோக்கிக் கூறுவான்போல், தலைவி, வாடையால் வருந்துவள்; ஆகவே அவள் வருத்தம் ஒழியும் வகை, ஆண்டு விரைந்து சேரல்வேண்டும்; அவளுறையும் இடம் இது; ஆகவே, பாக, ஆண்டு நின் தேரைவிரைந்துசெலுத்துவாயாகஎனப்,பாகனுக்குஉரைத்தான் தலைமகன் என்ற துறையமைய வந்துளது அவர் பாடிய அக் குறுந்தொகைப் பாட்டு. இப் பாட்டில், மலைக்காட்சியும், மலைநாட்டு ஊர்க்காட்சியும், அந்நாட்டு வாழ் உயிர்கள் இயல்பும், தலைவியின் அன்பும், அவளை விரைந்து அடைய விரும்பும் தலைவன், தன் விருப்பத்தினைப் பாகற்கு உணர்த்தும் பண்பட்ட முறையும் ஒருசேரக் காட்டப்பட்டுள்ளன.

"ஓம்புமதி வாழியோ வாடை! பாம்பின்
தூங்கு தோல் கடுக்கும் தூவெள் அருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே; நெல்லி
மரையினம் ஆடும் முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே." (குறுந் : ௨௩௫)

## ௧௪. மார்க்கண்டேயனார்

மார்க்கண்டேயனார், இறையனார், அகத்தியனார், வான்மீகனார், கவுதமனார் போன்ற அறவோராய்த் தமிழறிந்து வாழ்ந்த பெரியாராவர்; இவர் இயற்றிய நூல், தலையாய நூல் வரிசையுள் வைத்துப் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்ததாம் என்ப; "இனித், தமிழ்ச் செய்யுட்கண்ணும், இறையனாரும், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கவுதமனாரும் போல்வார் செய்தன தலை," என நச்சினார்க்கினியர் கூறுவது நோக்குக (தொல்: புறம்: ௨௦). நிலையாமை யுணர்த்தும் காஞ்சித்திணை பாடிய புலவர்களுள் மார்க்கண்டேயனாரும் ஒருவர். இதை அவர் பாடிய புறநானூற்றுச் செய்யுளே யன்றி, யாப்பருங்கல விருத்தி, காரிகை உரைகளும் உணர்த்துகின்றன.

நாடும் மக்களும் நல்வாழ்வு பெறவேண்டின், அவர் இளமையும் உடைமையும், வாழ்வும், வளமும் நிலைபேறுடையன அல்ல என்ற நிலையாமை யுணர்வுடையராதல் வேண்டும் என, உணர்ந்த தமிழ்ப் பேராசிரியர்கள், வாய்க்கும்போதெல்லாம், நிலையாமை யுணர்வினை நினைப்பூட்டுவதைத் தம் வாழ்வின் கடமையாகக்கொண்டு போற்றினர். அவர் வழிவந்த நம் புலவரும், "வயிரத்தாற் குடம் கடைந்து, மாணிக்கத்தாலாய ஆர்க்கால் செறித்துச் செய்த பொன்னாலாய ஆழிப் படைகொண்டு அரும் போராற்றி, எதிர்ப்பார் எவரையும் காணாது வென்று வீறெய்தி வாழ்ந்த வேந்தர்கள் பலரும், இறந்து விண்ணுலகெய்தியதைக் கண்டும், அவர்க்கு உரிமை பூண்டு, அவரால் ஆளப்பட்டு வந்ததாம், அவரோடு உடன்மடிந்து மறைந்து ஒழியாமல், நின்று நிலைபெற்று வாழும் தம் செயல், தமக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துப் பேணிய காதலர் இறந்து போனாராகவும், அவரோடு உயிர்துறந்து உயர்வடையாமல், இருந்து வாழ்ந்து, நீங்காப் பழிகொள்ளும் விலைமகளிர் செயல் போலாம்," என நிலமகளே நின்று வருந்துவள் என்று பாடி, "இந் நிலவுலகம் தோன்றிய நாள்தொடங்கி,

இந் நிலத்தை உரிமை பூண்டு ஆண்ட அரசர் எண்ணற்றவ ராவர்; அவருள் ஒருவரும் நிலைபெற்று வாழ்ந்தாரல்லர்; அனைவரும் மாண்டே போயினர்; பெற்ற பெருவளம் எல்லாம் பிறர் கொள்ள மறைந்தே போயினர்; ஆகவே உலகீர்! நிலையாமையினை நினைவிற்கொண்டு நிலைபேறுடை யன புரிவீராக!" என அறிவுரை கூறியுள்ளார்; இப்பாட்டில், உலகை மகளாக உருவகம் செய்த புலவர், விசும்பை அவள் முகமாகவும், ஞாயிறு, திங்கள் ஆகிய இரு சுடர்களைக் கண்களாகவும் உருவகம் செய்துள்ளார்:

மயங்கு இருங் கருவிய விசும்பு முகனாக,
இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்,
வயிரக் குறட்டின் ; வயங்குமணி ஆரத்துப்
பொன்னத் திகிரி முன்சமத்து உருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவும் செல்லாது இன்னும்
விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யான் எனப் பன்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டு என உரைப்பரால் உயர்ந்திசினோரே.

(புறம்: ௩௬௫)

# ௬௫. மாலை மாறன்

மாறன் எனும் பெயருடைமையான், புலவர் பாண்டியர் குடியோடு தொடர்புடையராவர் என்பது பெறப்படும்; இவர் பெயர்க்கு முன் வரும் மாலை எனும் சிறப்பு வருதற்காம் காரணம் இஃது எனப் புலப்படவில்லை; இவர் வேந்தர் குடிவழி வந்தவர் என்பதற்கேற்ப, வாளரம் போலும் விளிம்புகளையுடைய தாழைகள் வரிசையாக நிற்பது, வேலியாக நடப்படும் வேல்களைப்போல் தோன்றுகிறது என, அரசர் அறியும் பொருளை உவமை காட்டியுள்ளார்.

தலைவன், விரைந்து வரைந்து கொள்ளாமையால் வருந்தினள் ஒரு தலைவி; அவ்வருத்த மிகுதியால், அவள் உடல் நலமும் ஓரளவு குன்றிவிட்டது; ஆயினும், அவள், தன் நலன் குன்றுவது குறித்தும் கவலைகொண்டாளல்லள்; தன் நலக்குறைவால் தன் வருத்தம் வெளிப்பட, அதனால் அத்தலைவன் செய்யும் கொடுமை புறத்தார்க்குப் புலனாகுமே! தகைசான்ற சொற் காக்கக் கடமைப்பட்டவளாய தன்னாலேயே, அவன் பழிச்சொற்கு உள்ளாவனே! எனத் தலைவன் பெறும் பழிகண்டே கவலை கொள்வாளாயினள்; அதனால், தன் வருத்தம் புறத்தார்க்குப் புலனாகாவண்ணம் மறைத்து ஒழுகவும் முயன்றாள்; இத்தகைய உயர்வுடையாளொரு பெண்ணின் பெருந்தகைமை விளக்கவந்த புலவர் பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது:

"கடலங்கானல் ஆயம் ஆய்ந்த என்
நலம் இழந்ததனினும் நனி இன்னாதே;
வாள்போல் வாய கொழுமடல் தாழை
மாலை வேல் நாட்டு வேலி யாகும்
மெல்லப் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்து வெளிப் படினே."

(குறுந்: ௨௪௫)

## ௬௬. மீளிப் பெரும்பதுமனர்

பெரும்பதுமனார் என்பது இவரது இயற்பெயர் ; மீளி என்பது இவர் பிறந்து வாழ்ந்த பெருமைசால் பேரூர் ; அது யாண்டுளது என்பது இப்போது விளங்கவில்லை ; "ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுக்காவில், மல்லி என்றோர் ஊர் உளது ; மீளி என்பதே, மல்லி என்று திரிந்து வழங்குகிறதோ தெரியவில்லை" என்று கூறுவர், நற்றிணை உரையாசிரியர், திருவாளர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். பெரும்பதுமனார் என்ற பெயருடைய புலவர் மற்றொருவரும் உளர் ; இருவரும் ஒருவரே எனக் கொள்வர் சிலர் ; இவரை மீளிப் பெரும்பதுமனார் எனச் சிறப்பித்தும், அவரைப் பெரும்பதுமனார் எனப் பொதுவாகவும் அழைத்தலின், இருவரும் ஒருவரல்லர் என்பது துணியப்படும் ; இவர் பாடிய பாட்டாக, இப்போது கிடைத்திருப்பது, நற்றிணைக்கண் காணப்படும் பாட்டு ஒன்றே.

வாடை வீசும் மாலைக்காலத்தே தலைவனைப் பிரிந்து, தனித்துத் துயருறும் தலைவியின் நிலைக்குச், சேறு நிறைந்த தொழுவத்தினின்றும் வெளிக்கொணர்ந்து வேறிடத்தில் கட்ட வேண்டிய இருள் செறிந்த இராக் காலத்தே, அவ்வாறு கொண்டு சென்று கட்டாமையோடு, அத்தொழுவத்தினுள்ளும், கீழே படுக்கவும் இயலாமல், நின்ற நிலையிலேயே நிற்குமாறு, தலைக் கயிற்றை இழுத்து உச்சியிலே தூக்கி இறுகப் பிணித்து விடப்பெற்ற பசுவின் துயர் நிலையினை உவமை கூறிய திறம், புலவர் தம் புலமைக்குப் பெருமையளித்து நிற்கிறது.

"விரைக்கும் வாடை இருள்கூர் பொழுதில்
தொளியுடைத் தொழுவில் துணிதல் அற்றத்து
உச்சிக் கட்டிய கூழை ஆவின்
நிலையென ஒருவேனாகி
உலமரக் கழியும் இப்பகல் மடி பொழுதே."

(நற் : ௧0௬)

# ௧௭. முடத்தாமக் கண்ணியார்

முடத்தாமக் கண்ணியார், பத்துப் பாட்டெனும் பெருநூலுள், திருமுருகாற்றுப் படையை அடுத்து வைத்துப் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்த பொருநராற்றுப் படை பாடிய புலவர் பெருந்தகையாவர். இவர் பாடிய பாட்டும் அப்பொருநராற்றுப் படையொன்றே; அவர் பாராட்டிய அரசனும், அப்பாட்டுடைத் தலைவனாய கரிகாற் பெருவளத்தான் ஒருவனே. கரிகாற் பெருவளத்தான் பண்பும், பெருமையுமே பொருளாகக் கொண்டு பாடியுள்ளமையான், அப்பாட்டின் பண்பறிந்து பாராட்டுதலுக்கு முன்னர், அவன் வரலாற்றினைச் சுருங்க அறிதலும் ஈண்டு வேண்டுவதாயிற்று.

“ஊர் எனப்படுவது உறையூர்” எனப் புலவர் புகழ்ந்துரைக்கும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு, உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பான் ஒரு சோழ அரசன், நாடாண்டிருந்தனன்; அவன் அழுந்தூரை வாழிடமாகக் கொண்டு விளங்கிய வேளிர் தலைவன் மகளை மணந்து மாண்புற்றிருந்தான்; இவ்விருவர்க்கும் மகனாய்ப் பிறந்தவனே கரிகாற் பெருவளத்தான்; கரிகாற் பெருவளத்தான் பிறப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னரே, இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான்; அதனால் கரிகாலன், தாய் வயிற்றிருக்கும்போதே, தரணியாளும் உரிமை உடையனாயினான்; இவ்வுண்மை தோன்றவே புலவர் முடத்தாமக் கண்ணியார், “தாய்வயிற்றிருந்து தாயம் எய்தி” எனப் பாராட்டுவாராயினர்; இத்தொடர்க்குப் பொருள் கூறிய நச்சினார்க்கினியர், “கரிகாற் பெருவளத்தான் பிறத்தற்குரிய காலம் வந்துற்றவிடத்து அவண் வந்த அறிஞர் சிலர், ‘பிறக்கும் குழவி, சிறிது பொழுது தாழ்த்துப் பிறப்பின் பேரரசாம் பேறுடையதாகும்’ என்று இயம்ப, அவ்வாறே தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையினாலே அரசவுரிமையைப் பெற்றுப்

பிறந்தான்" என்றவொரு கதையையும் கட்டிவிட்டுளார். நிற்க.

கரிகாலன் தந்தை, உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைக் கொன்ற தாயத்தார், கரிகாலனையும் சிறையிலடைத்து விட்டனர்; கரிகாலனும், கூட்டுள் வளரும் புலிக்குட்டியேபோல், சிறையுள் வளர்ந்து பெரியவனாயினன்; மேலும் சிறையுள் அடைபட்டிருக்க விரும்பாத அவன், ஒருநாள் எவரும் எதிர்பாரா வண்ணம், சிறைக் காவலரைக் கொன்றும், காவலை அழித்தும் வெளியேறினான்: அக்காலை, அவன் வெளியேறாவண்ணம் தடுத்து நிறுத்த, அச்சிறையைச் சூழ அவன் பகைவர் எழுப்பிய தீயால், அவன் கால்களும் கரிந்து போயின; அதனாலேயே அவன் கரிகாலன் என அழைக்கப்பெற்றான்; வெளிப் போந்த கரிகாலன், தன் வாள் துணையால் தன் பகையாய் வந்த தாயத்தார் அனைவரையும் அழித்து, அரசியலைக் கைப்பற்றி ஆளலாயினன்.

சோணாடாளும் அரசனும் சிறுவன்; அந்நாட்டில் அமைதியும் குன்றியுளது; ஆகவே அந்நாட்டைக் கைப்பற்றற்கு ஏற்ற காலம் இதுவே எனக் கருதிய சேரனும், பாண்டியனும், குறுநில மன்னர் பதினொருவரையும் துணையெனக் கொண்டு, கரிகாலனை எதிர்த்தனர்; கரிகாலன் அவர்களை வெண்ணியெனும் ஊரில் எதிர்த்துப் போரிட்டு வென்று பெருமையுற்றான்; வெண்ணியில் பெற்ற வெற்றி, உலகத்தார் உளத்தே உவகைப் பெருக்கை ஊற்றெடுக்கச் செய்த சின்னாட்களுக்குள், வாகை எனும் இடத்தே வந்து எதிர்த்த ஒன்பது பேரரசர்களையும் ஒரே பகலில் அழித்து, அழியாப் புகழ்பெற்றான்; இவ்விரு பெரும் வெற்றிகளோடு, அவன் போர் வேட்கை தணிந்திலது; தொண்டை நாட்டை ஆண்டிருந்த அருவாளரையும், சேரரையும், பாண்டியரையும், ஒளியர், பொதுவர் முதலாயினோரையும் வென்றான்; இவ்வாறு தன் நாட்டைச் சூழ இருந்த அரசர்களை அழித்து ஆட்கொண்ட கரிகாலன், வடநாடு நோக்கிச் சென்றான்; ஆண்டுள்ள, வச்சிரம், மகதம், அவந்தி

முதலாம் அரசுகளை அடிபணியச் செய்து, அவர்கள் அளித்த, முத்துப் பந்தர், பட்டி மண்டபம், வாயில் தோரணம் ஆகிய அரிய பொருள்களைத் திறையாகப் பெற்று மீண்டான்.

வெற்றி வீரனாய் விளங்கிய கரிகாற் பெருவளத்தான், நாங்கூரில் வாழ்ந்த வேளிர் தலைவன் மகளை மணந்து ஆட்சித் தொழில் மேற்கொண்டிருந்தான்; நாடு பகைப் பயம் அற்றிருக்கக் கண்ட அவன், அந்நாடு, செல்வத்தில் சிறந்து விளங்க விரும்பினான்; கரையின்மையால், கொன்னே ஒழிக்கழியும் காவிரியாற்று நீரை, அவ்யாற்றின் இருமருங்கும் கரையும் குறுக்கே அணையும் அமைத்து, நிலவளத்திற்குப் பயன்படுத்தி "சோழவளநாடு சோறுடைத்து" என்ற புகழ்ச்சொல் தோன்றத் துணைநின்றான். ஒரு நாடு நிலவளத்தால் மட்டுமே நீள்புகழ் பெற்று விடாது; அந்நாடு வாணிபத் துறையிலும் வளம்பெறுதல் வேண்டும் என அறிந்த கரிகாலன், காவிரி கடலொடு கலக்குமிடத்தே அமைந்துள்ள புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு, கடல் வாணிபம் வளர்தற்கு ஆவன எல்லாம் புரிந்து அந்நாட்டுச் செல்வவளம் பெருகப் பெருந்துணை புரிந்தான்; இவ்வாறு வளம்படுத்திப் பெருவளத்தான் எனவும், திருமாவளவன் எனவும் பாராட்டப் பெற்ற கரிகாலன், புலவர்மாட்டும் பேரன்புடையனாய், அறிவுச் செல்வம் வளரவும் துணைபுரிந்துள்ளான்; பட்டினப்பாலை பாடித் தன்னைப் பாராட்டிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் போற்றினான். இத்தகைய பேரரசைப் பாராட்டிப் பாடிய பாட்டே பொருநராற்றுப்படையெனின், அதன் பெருமையினை அளவிட்டுக் கூறலும் இயலுமோ!

பொருநராற்றுப் படையாவது, வரையாது வழங்கும் வள்ளலைப் பாடும் புலவன் ஒருவன், அவ்வள்ளலைப் பாடிப் பெருவளம் பெற்று மீளும் பொருநன் ஒருவன், தான் பெற்ற பெருஞ் செல்வத்தைத் தன் எதிர்வரும் வறியோன் ஒருவனுக்குக் காட்டி, "நீயும் அவன்பாற் செல்லின், யான்

பெற்றன போலும் பெரும் பொருள் பெற்று மீள்வை; அவன், இன்னன்; இத்தகையான்; அவன் நாடும், ஊரும் இன்ன; ஆண்டுச் செல்லும் ஆறு இது," எனக் கூறுவ தாகக் கொண்டு, அத்தலைவன் புகழெலாம் தோன்றப் பாடிய பாட்டாகும் என விதி கூறுவர் ஆசிரியர் தொல் காப்பியனார்:

"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்,"
(தொல்: புறம்: ௩௬)

கரிகாலன் புகழ்பாட வந்த புலவர் முடத்தாமக் கண்ணியார், அவன் ஆட்சிமேற் கொண்டிருந்த சோணாட்டு வளத்தினைப் பாராட்டும் பண்பு வியந்து பாராட்டுதற்குரிய தாம்: நிலத்தை நால்வகையாகப் பகுத்துப் பார்த்தனர், நில நூல் அறிவோடு, புலமை நலமும் வாய்ந்த பண்டை யோர்; முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன அந் நல் நிலங்கள்; ஒரு நிலத்தே வாழும் உயிர், ஏனைய நிலத்தே வாழா; ஒரு நிலத்து ஒழுக்கம், ஏனைய நிலத் தார்க்கு ஒவ்வா என்றும் கூறுவர்; சோணாடு, இந்நால் நிலவளமும் வாய்க்கப்பெற்றது; அதையுணர்த்த புலவர் மேற்கொண்ட முறை, அறிவிற்கு இன்பம் ஊட்டும் அருமையுடைத்தாம்.

சோணாட்டு நெய்தல்நிலத்துக் கழிகளில் மீனைத் தேடியுண்டு அக்கழியை அடுத்துள்ள புன்னைமரக் கிளையில் அமரும் நாரைகள், அப்புன்னை மரத்தைமோதி அடங்கும் அலையோசைக்கு அஞ்சின், மருத நிலத்துட்புக்கு ஆங் குள்ள பனை மடலில் தங்கும்; மருத நிலத்துப் பறவை யாகிய மயில், குலைகுலையாகக் காய்களைக்கொண்ட தெங்கும், வாழையும், காந்தளும், புன்னையும் நிறைந்ததும், துடியோசை போலும், ஓசையினையுடைய பேராந்தைகள் வாழ்வதுமாய நெய்தல் நிலத்தே எழும் யாழ் ஓசை போலும் வண்டோசை கேட்டு மயங்கி, ஆண்டுச் சென்று,

ஆண்டுள்ள நிலவொளி போலும் வெண்மணலிடத்தே விறல்பட ஆடி மகிழும்; குறிஞ்சி நிலப் பொருள்களாகிய தேனையும், கிழங்கையும் கொண்டு வந்து விற்றவர், மருத நிலப் பொருள்களாய மீன் எண்ணெயும், கள்ளும் வாங்கிச் செல்வர்; மருதநிலப் பொருள்களாய கரும்பையும், அவலையும் விற்றவர், குறிஞ்சி நிலப் பொருள்களாய மானிறைச்சியும், மதுவும் பெற்றுச் செல்வர்; குறிஞ்சி நிலப் பண்ணை, நெய்தல் நிலத்தார் பாடி மகிழ்வர்; நெய்தல் நில மலர்களால் ஆய கண்ணியைக் குறவர் சூடி மகிழ்வர்; முல்லை நிலத்து ஆயர், மருதப் பண் பாடி மகிழ்கொள்வர்; மருத நிலத்து உழவர், நீல நிறத்தை உடைய முல்லைக் கொடி மணக்கும் முல்லை நிலத்தே சென்று, அந்நிலம் பாடிப் பரவுவர்; முல்லை நிலத்துக் கோழிகள், மருத நிலத்து நெற்கதிரைத் தின்னும்; மருத நிலத்துக் கோழிகள், குறிஞ்சி நிலத்துத் தினைக்கதிரைத் தின்னும்; குறிஞ்சி நிலத்து மலைகளில் வாழும் மந்திகள், நெய்தல் நிலத்துட் புகுந்து கழிநீரில் ஆடி மகிழும்; நெய்தல் நிலத்துக் கழிகளில் வாழும் நாரைகள், குறிஞ்சி நிலத்து மலைகளில் சென்று தங்கும்; இவ்வாறு நானில வளமும் நனி மிகக் கொண்ட நன்னாடு சோணாடு எனப் புலவர் நாவாரப் போற்றும் திறம் அவர் புலமைக்குப் பெருமையளிக்கும் பெருஞ்செயலா மன்றோ!

சுறவழங்கும் இரும் பெளவத்து
இறவருந்திய இனநாரை,
பூம் புன்னைச் சினைச் சேப்பின்
ஓங்குதிரை ஒலிவெரீஇத்
தீம் பெண்ணை மடல் சேப்பவும்;
கோள் தெங்கின், குலை வாழைக்
கொழுங் காந்தள், மலர் நாகத்துத்,
துடிக் குடிஞைக் குடிப் பாக்கத்து
யாழ் வண்டின் கொளைக் கேற்பக்
கலவம் விரித்த மடமஞ்ஞை
நிலவு எக்கர்ப் பலபெயரத்;

தேன்நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்;
தீங்கரும் போடு அவல் வகுத்தோர்;
மான் குறையொடு மது மறுகவும்;
குறிஞ்சி பரதவர் பாட; நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூடக்;
கானவர் மருதம் பாட; அகவர்
நீல்நிற முல்லைப் பல்திணை நுவலக்;
கானக் கோழி கதிர் குத்த;
மனைக் கோழி தினைக்கவர;
வரைமந்தி கழிமூழ்கக்;
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பின் நால்நாடு குழீஇ."

(பொருநர்: உ0௩-உஉ௬)

சோணாட்டின் நானில வளத்தினை இவ்வாறு பாராட்டிய புலவர், அந் நாட்டுப் பெருநிலமாகிய மருத நிலவளத்தினையும், அவ்வளத்திற்குக் காரணமாய காவிரியாற்றின் பெருமையினையும் வாயார வாழ்த்தியுள்ளார்; ஏனைய நாடுகள் எல்லாம், வற்கடமுற்று வறுமையில் உழலும் காலத்திலும், நறை, நரந்தம், அகில், ஆரம் முதலாம் பொருள்களைத் துறைதொறும், துறைதொறும் ஒதுக்கிவிட்டு, நுரைத்தும், ஒலித்தும் ஓடி, மகளிர் மகிழ்ந்து ஆடுமாறு, குளங்களை நிறைத்துப்பாயும் காவிரியாற்றுப் பெருக்கால், விளையுள் பெருக, வளைந்து நின்று, அரிவாளால் அறுத்து அடித்துப் பெற்ற நெல், மலைபோல் அடுக்கிய குதிரின் கண்ணே வெற்றிடம் இல்லையாம்படி நிறைந்து கிடக்குமாறு, ஒருவேலி நிலம் ஆயிரங்கலம் விளைந்து விழுப்பயன் தரும் என அவர் கூறும் அந் நாட்டுவளம், அக்கால நிலையினை அழகுறக் காட்டுதல் அறிக.

"பெருவறன் ஆகிய பண்பில் காலையும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த்து ஒழுகி,
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுந்தொறும்

புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தொறும்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு." (பொருநர்: உ௪௬-௨௪௮)

வரலாறு உரைக்கும் நூல்களை முறையாக வரைந்து வைத்தல் வேண்டும் என்ற எண்ணமற்ற தமிழகத்தே வாழ்ந்த அரசர்கள், அறிஞர்கள் ஆகியோர் வரலாற்றினை அறியத்துணைபுரிவன புலவர்கள் அவ்வப்போது பாடிவைத்துள ஒருசில பாக்களே; அம்முறையில், கரிகாலன் வரலாற்றை அறியும் நிலையில், முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப் படையும் ஓர் அளவு துணைபுரிகின்றது. கரிகாலன் வரலாற்றுள், அவன் பெயர் கரிகாலன் என்பது; அவன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியே; கரிகாலன் தாய் வயிற்றிருந்த போதே தாயவுரிமை உடையனாயினான்; அதனால், பிறந்து மொழிபயின்று ஆடத் தொடங்கிய அக்காலத்திலேயே ஆட்சிப் பொறுப்பு அவன் பால் வந்துற்றது; அவன் ஆற்றலை முன் அறியாதார், அறிந்தபின் பணிந்து போயினர்; அறிந்தும் பணியாத அரசர், அழிந்து மறைந்தனர்; அத்துணை ஆண்மையாளன் அவன்; வெண்ணிப் போரே, அவன் கன்னிப் போர்; அப் போர்க்களத்தே அவன், சேரனும், பாண்டியனுமாய பேரரசர் இருவரையும் ஒருங்கே அழித்து வென்றான், என்பனபோலும் பகுதிகள் பொருநராற்றுப் படையான் விளக்கம் பெற்றுள்ளன.

"வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்;
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்;
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்

செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பல்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி,
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்த நல்
நாடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப,"

"இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."
(பொருநர்: கஉக; கசங-அ.)

கரிகாலன் ஆட்சி நலத்தால், அந் நாட்டு, இளையரும், முதியருமாய மக்கள் தம்முள் முரண் ஒழிந்து, அன்புடை உளத்தராய் ஆடிப்பாடி அளவளாவி வாழ்வர்; அவருள் முதியராயினர் ஒரோவழி முரண்படுவராயினும், அம்முரண் பாடு, அரசன் அவை அடைந்து வழக்குரைக்கும் வரை நிற்றல் அரிதாம்; அவர் அவ் அவைக்கு முன்னரே, தம் முரண்பாடு ஒழித்து, முன்னையினும் பெரு நட்பாளராவர்; அத்தகைய பெருந்தகை உடையார் அந்நாட்டு மக்கள் எனக் கூறு முகத்தான், அந்நாடாளும் அரசன் செங் கோல் திறனைச் சிறக்கப் பாடியுள்ளார்:

"இளையோர் வண்டல் அயரவும், முதியோர்
அவைபுகு பொழுதில் தம்பகை முரண் செலவும்."
(பொருநர்: கஅஎ-அ)

இத்தொடரை அடிப்படையாகக்கொண்டு, திருமாவள வன், வழக்கறிந்து நீதிவழங்கும் வன்மையை விளக்கும் ஒரு கதை கூறுவாரும் உளர். ஒருநாள் கரிகாலன், அரச வையில் அமர்ந்திருந்தான்; அப்போது, தம்முட்பகை கொண்ட முதியோர் இருவர், அவன்பால் முறைவேண்டி வந்தனர்; வந்த அவர்கள், அரசவை அணுகி நோக்கியக் கால், கரிகாலன் நனி இளையனாய் இருப்பக் கண்டனர்;

உடனே, அவர் உளத்தே, "இவ்விளைஞனே, நம் முரண் தீர்த்து முறைவழங்க வல்லான்" எனும் ஐயம் எழுந்தது; அதை அவர் வாய்ச்சொல் வெளியிடவும் செய்து விட்டது; அவர் கருத்தைக் குறிப்பான் அறிந்து கொண்டான் கரிகாலன்; உடனே அண்மையில் இருந்ததோர் அறையுட் சென்று புகுந்துவிட்டான்; சிறிது நாழிகை கழித்து நரை, திரை தோன்றிய முதியான் போல் உருவுதாங்கி வெளிப் போந்து அரசவை அமர்ந்தான்; அந்நிலையில் அவனைக் கண்ட அம்முதியோர் இருவரும், முன்னர் யாம் கண்ட அவ் விளையோன் அரசனல்லன்; இம் முதியோனே அரச னுவன்; நம் முரண்போக்கும் மூதறிவுடையனே இவன் என்று எண்ணித் தம் வழக்கினை அவனுக்கு விளங்க உரைத்தனர்; கரிகாலனும், அவர் கூறியனவற்றை ஆர எண்ணி, அவரும், ஆண்டுள்ளார் எவரும் வியக்குமாறு முறை யளித்தான்; அவன் கூறிய முறை கண்டு, மகிழ்ந்த அம் முதியோர், அவனை வாழ்த்தி வணங்கி நின்ற அப் போதே, தன் முதிய வேடங் களைந்து, உண்மை உருவொடு தோன்றலாயினன்; அந் நிலையில் அவனைக் கண்ட முதி யோர், அவன் பெருமையும், தம் சிறுமையும் உணர்ந்து வியந்து பாராட்டினர்; இதுவே அக்கதை. இக் கதையை உறுதி செய்யவல்ல சான்றுகளாகக் கீழ்வரும் செய்யுட் களைக் கொள்வர் அக் கதை கூறுவார் :

"உரை முடிவு காணன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரை முடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்." (பழமொழி : உக)

"இளமை நாணி முதுமை எய்தி
உரை முடிவு காட்டிய உரவோன்."
(மணி : பளிக்கறை : கo௭–அ)

வளவன் வள்ளன்மையினை வாயார வாழ்த்தும் புலவர், அவன், பாணர் முதலாம் இரவலர்க்கு அளிக்கும், உணவு, உடை ஆகியவற்றின் வகைகளையும், வனப்பையும் விளங்கக் கூறுவதற்குமுன், அவன் அவரை வரவேற்கும்

முறையினை எடுத்துக் கூறி ஏத்திப் போற்றியுள்ளார்; கரிகாற் பெருவளத்தான், தன்னைக் கண்டு பாராட்ட வரும் பரிசிலர்களைத் தன்னோடு முன்பே நட்புக்கொண்டு பழகியவரை விரும்பி வரவேற்பதேபோல் வரவேற்பன்; இரப்பாரைப் புரப்போர் எல்லாம் இவனே போலின், இரந்துண்ணும் வாழ்வே இனிமை யுடைத்தாம் எனும் எண்ணம் அவர் உளத்தே எழுமாறு இன்னுரை பல வழங்குவன்; வந்தாரைத் தன் அரசியல் அலுவல் மிகுதியால் காணாது இராது, அவர் எப்போதும் தன் காட்சிக்குட் பட்டாராகும் அத்துணை நெருங்கிய இடத்திலேயே அவரை இருத்திப் புரப்பன்; அவன், அவர்களைக் கண்ணால் பருகி விடுவான்போல் பரிந்து நோக்குவதால், வந்தவர் எலும்பும் கரைந்துகுமாறு உளங் குளிர்ந்து உறைவர். கரிகாலன்பால் காணலாம் இவ் விருந்தேற்கும் பண்பு, விருந்தினரைச் "செய்மைக்கண்கண்டுழிஇன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன் பட்டவழி நன்றாற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்ற"னோடு மூற்றிலும் ஒத்துநிற்றல் உணர்ந்து பாராட்டற் குரித்தாம்:

"ஒன்றிய
கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி,
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்
பருகு வன்ன அருகா நோக்கமோடு
உருகு பவைபோல் என்பு குளிர் கொளீஇ."

(பொருநர் : எ௬-அ)

சோணாட்டு வளமும், அந் நாடாண்ட கரிகாலன் பெருமையும் விளங்கப் பாடிய புலவர், அக்காலத்து மக்கள் மேற்கொண்ட நனிநாகரிக வாழ்வினை விளக்கும் சிற்சில பகுதிகளையும் இடையிடையே கூறிச்சென்றுளார். தமிழகத்தின் பேரூர்தோறும் திருவிழா நிகழும்; விழாக் காண வருவார் அனைவர்க்கும், பெருஞ் சோறளித்துப் போற்றுவர், அவ்வூர் வாழ்மக்கள்; அம் மக்கள், ஒட்ட

மற்ற, மாத்திரைக் குறையில்லாத பொன்னாலாய கலங்களையும், இழை போனவழி இஃது எனக் கண்ணுற் கண்டறியாவாறு நுண்மையவாய் நெய்யப் பெற்றதும், பூத்தொழில் நிறைந்ததும், பாம்பின் தோல்போலும் மென்மை வாய்ந்ததும் ஆய நூலாடைகளையும், கொட்டைக் கரை அமைய ஆக்கப்பெற்ற பட்டாடைகளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தனர்; அந் நாட்டுப் பொருநர் ஏழிசையின் திறம் தெரிந்தவராவர்; காட்டகத்தே வாழ்ந்து, அவ் வழி வருவாரை அழித்து, அவர் கைப்பொருள் கவர்ந்து உண்ணும் வாழ்வினராய, அருளறியா ஆறலைகள்வரும், இளகிய நெஞ்சுடையராகித், தம் கைப் படைகளை வீசியெறிந்து அருள்நிறை உளத்தராமாறு, அவர் மனத்தினை மாற்றவல்ல பாலைப் பண்போலும், பற்பல பண்களைப் பாட வல்லராவர் அப் பொருநர் எனப் புலவர் கூறும் செய்திகள், அக்காலத் தமிழகத்தின் தன்னேரில்லாத் தனி வாழ்வின் சிறப்பினை அறியத் துணைபுரிதல் காண்க.

"அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாள் சோறு நசை உறாது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந!" (க-௩)

"போக்கில் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர." (அசு-அஎ)

"நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை." (அஉ-அ௩)

"தூய, கொட்டைக் கரைய பட்டுடை." (கடுச-டு)

"ஏழின் கிழவ!" (சு௩)

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை." (உக-உஉ)

பொருநராற்றுப் படை பாடி, வள்ளலும், வீரனுமாய் விளங்கிய கரிகாற் பெருவளத்தானைப் பாராட்டிய புலவர் முடத்தாமக் கண்ணியார், இடையிடையே தம் உள்ளத்தின் உயர்வு உணர்த்தும் சில பல தொடர்களையும் அமைத்துச்

சென்றுளார்; உவமை போலும் செய்யுள் அணி கருதி அவர் காட்டும் சில செய்திகள், அவர் உள்ளத்தை உணரத் துணை புரிந்துள்ளன.

தமிழகம், தன்னேரில்லா அரசுபெற்றுத் தழைத்திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம் என்ற பாராட்டுரைகளுக்கிடையே, தன்னேரில்லா அரசோச்சிய அத் தமிழகம், தாழ்ந்தமைக்கும், அம் மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ்நாட்டின் சிறு சிறு பகுதிகளை ஆங்காங்கே ஆண்டிருந்த குறுநில மன்னர்களுமே காரணமாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையிலேயே அன்றைய அரசியல் அமைந்திருந்தது. மூவேந்தர்கள் ஒற்றுமைகொண்டு ஊராண்டவரல்லர்; அவர் ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமுடையராவர்; ஒரு குடியில் ஒரு காலத்தே ஆற்றல் மிக்க பேரரசன் ஒருவன் பிறந்துவிட்டால், அவன் பிற அரசுகளையெல்லாம் பணியவைத்துப் பேரரசனாய் வாழ வேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும், செல்வமும் கண்டு அழுக்காறுகொண்ட ஏனைய அரசர்கள் அனைவரும் ஒன்றுகூடி அவனை அழிக்க வழி கோலுவதும் அக்கால வழக்கமாம்; ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒரு குடியிற் பிறந்தவர்களே ஒருவரோடொருவர் பகைத்துப் போர் மேற்கொள்வர்; அம்மட்டோ! தந்தை மகனை எதிர்ப்பன்; மகன் தந்தைமேல் போருக்கு எழுவன்; பழைய தமிழகத்தின் அரசியற் பெருநெறி இது; அரசரிடையே நிலவும் இவ் வரசியல் முறையால், தமிழகம் பெற்ற அழிவு அம்மம்ம! கொடிது! கொடிது!

தமிழகம், அத்தாழ்நிலையின் நீங்கித் தன்னேரில்லாப் பேரரசாய் வாழ விரும்பினர் அக்காலப் புலவர் பலரும்; அவருள் முடத்தாமக்கண்ணியாரும் ஒருவர்; தமிழகத்திற்குத் தாழ்வுதரும் இந்நிலை ஒழியவேண்டுமாயின், அந்நாடாள் உரிமையுடையராய தமிழ் அரசர் மூவரும் தம்முள் பகையொழிந்து, ஒற்றுமை யுளத்தராகி ஊராள முன்வரல்

வேண்டும். அவர்கள் அவ்வாறு வாழ மூன்வரும் அந்நாளை எண்ணி ஏங்கினர் புலவர்; அந்நிலை தம் வாழ்நாளில் வாய்க்கப்பெருதாயினும், அம்மூவரும் ஒன்றுகூடி வாழ்வதால் உலகத்தார்க்கு உண்டாம் பேரின்ப வாழ்வை உவமையில் அமைத்துக்கண்டு அகமகிழ எண்ணினர் புலவர். பொருநன் பாடும் பிடற்றுப் பாடலுக்கேற்ப, எழும் அவன் யாழ்ஒலி தரும் இன்பம், அரசர் மூவரும், அன்புடையுளத்தாராய், அரசவை வீற்றிருப்பதால் உண்டாம் பேரின்பம் போன்றதாம் என உவமைகூறி உளமகிழ்ந்தார்; என்னே அவர் உள்ளம்!

> "பீடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்தாள்
> முரசு முழங்கு தானை மூவரும் கூடி
> அரசவை இருந்த தோற்றம் போலப்
> பாடல்பற்றிய பயனுடை எழாஅல்."
>
> (பொருநர்: ருரு – சு)

உலகில் நிகழும் ஒவ்வொரு செயலும் முற்பிறப்பின் வினையின் விளைவாம்; முன்னைப் பிறப்பில் நல்வினை செய்தார், இப்பிறவியில் நன்மையடைவர்; இம்மையில் தவம் செய்தார், மறுமையில் பேரின்பம் பெறுதலோடு இப்பிறவியிலேயே, தவம்செய்த உடலோடு கூடியிருக்கே, அத்தவத்தாலாம் பயனைப் பெறுதலும் உண்டு என்ற கொள்கையுடையவர் நம் புலவர்; வறுமையால் வாடிவரும் பொருநன் ஒருவன், கரிகாலனைக் கண்டு பெரும் பொருள் பெற்று மீளும் மற்றொரு பொருநனை வழியில் கண்டது, அவன் முற்பிறவியில் செய்த தவத்தின் பயனும் என்றும், கரிகாலனைக் கண்டு பாராட்டிய அவ்வளவிலேயே பொருநன் பெரும் பொருள் பெறுதல், தவம் செய்த பெரியோர், அத்தவம் செய்த தம் உடலோடு கூடியிருந்தே அத்தவத்தாலாம் பயன்பெற்றுப் பேரின்பம் பெறுதல்போலாம் என்றும் அவர் கூறும் கூற்றுன் அவர் உள்ளத்துணர்வு வெளிப்போதரல் காண்க:

> "அறியாமையின் நெறிதிரிந்து ஒராஅது
> ஆற்றெதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே." (ருஅ–கூ)

“ தவம்செய் மாக்கள் தம்முடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான.” (கக-உ)

பெண்களுக்குரிய நலன்களுள், தனிசிறந்தது நாணுடைமையே; நாணுடை மகளிர் நிமிர்ந்த தலையும், வீசிய கைகளும் உடையராய் நடத்தலறியார்; அவர் கவிழ்ந்த தலையினராய்க், கால்விரல் நோக்கும் கண்ணினராய்ச் செல்லவே விரும்புவர்; அந்நிலையே அவர்க்கு அழகு தருவதாம்; பெண்களைப் பற்றிய இவ்வுண்மை, நம் புலவர்க்கும் உடன்பாடாம் என்பது, பொருநனைப் பின்தொடர்ந்து வரும் விறலியின் பல்வேறு உறுப்புக்களைப் பாராட்டி வருங்கால், அவள் கழுத்து, நாணத்தால் கவிழ்ந்து நலம் பெறும் கழுத்தாம் எனப் பாராட்டுவதால் புலனும்:

“ நாண் அடச் சாய்ந்த நலம்கிளர் எருத்து.” (௩க)

உழவுத்தொழில் பற்றிய உணர்வு உடையவர் நம் புலவர்; உழுகலப்பை இருவகைப்படும்; உழவர் நன்செய் நிலத்தை உழும் கலப்பையைப் புன்செய் நிலத்தை உழ மேற்கொள்ளார்; அவ்வாறே புன்செய் நிலத்தை உழும் கலப்பை, நன்செய் நிலத்தை உழப் பயன்படாது; நன்செய் நிலம் சேறுடையது ஆகலின், அதை உழும் கலப்பை விரைவில் தேய்ந்து பயனற்றுப்போதல் இல்லை; மாறாக, புன்செய் நிலம், நீரற்றும், கற்கள் நிறைந்தும் காணப்படுவதால், அதை உழும் கலப்பை விரைவில் தேய்ந்து பயனற்றுப்போகும். இதை நன்கு உணர்ந்த புலவர், கரிகாலனை அடைந்து வாழும் பொருநன், இரவும் பகலும் இறைச்சி கலந்த உணவே உண்டமையால் அவன் பற்கள் இறைச்சியை மென்று மென்று தேய்ந்துபோதற்குக் கொல்லையை உழுது கலப்பை தேய்ந்து போவதை உவமை காட்டியுள்ளார்:

“ கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன் தின்று மழுங்க.” (ககஎ-அ)

முடத்தாமக் கண்ணியார் தம் புலமை நலத்திற்கு, அவர் எடுத்தாளும் உவமைகளும் சான்று பகர்ந்து

நிற்கின்றன ; பொருநன் யாழின் பல்வேறு உறுப்புக்களுக்கும், விறலியின் பல்வேறு உறுப்புக்களுக்கும் அவர் காட்டும் பல்வேறு உவமைகள் அழகுற அமைந்துள்ளன ; அவையனைத்தையும் ஈண்டு எடுத்துக்காட்டின் ஏடு விரியுமாதலின், அதைச் செய்யாது, அவர் காட்டும் வேறுசில உவமைகள் சிலவற்றைக் காட்டி இக்கட்டுரையினை முடிக்கின்றேன்.

கரிகாலன் பிறந்தபோதே அரசாளும் உரிமை உடையனாயினான் ஆகவே, அவன் தவழ்ந்து விளையாடத் தொடங்கிய அக்காலத்திலேயே ஆட்சிப் பொறுப்பினைத் தாங்கி நின்றான் ; இதை விளக்கவந்த புலவர், தன் ஒளியால் உலகை விளக்கமுறச் செய்யவரும் ஞாயிறு, இளஞாயிறாகிய அக்காலத்திலேயே, தான் தோன்றும் இடமாகிய கடலிடையே தன் பொன்னிறக் கதிர்களைப் பரப்பி ஆண்டு ஒளிசெய்து எழுதலை உவமை காட்டியுள்ளார் :

"பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
செவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்து தவழ் கற்றதன் தொட்டுச் சிறந்தநன்
நாடுசெகின் கொண்டு நாடொறும் வளர்ப்ப."

(கஙௌ-அ)

கரிகாலன் அரியணை அமர்ந்து பெற்ற முதல் வெற்றி, அவன் வெண்ணி நகரில் பெற்ற வெற்றியாம் ; வெண்ணிப் போரில், கரிகாலன், சேரன், பாண்டியன் ஆய பேரரசர் இருவரையும், அவர்க்குத் துணையாக வந்த சிற்றரசர் பதினொருவரையும் வென்று வீறுகொண்டான் ; நனிஇளையனாய கரிகாலன், தான் மேற்கொண்ட கன்னிப்போரிலேயே அத்துணைப் பெரிய வெற்றிபெற்ற பெருஞ்செயல் கண்டு வியந்த புலவர், கரிகாலன் செயல், பாலுண்ணலை மறந்தறியாத புலிக்குட்டி யொன்று, கூற்றுவன்போல் ஆற்றல் மேற்கொண்டு சென்ற முதல் வேட்டையிலேயே, களிற்றுயானையினைக் கொன்ற அருஞ்செயல்போலும் எனக் கூறிப் பாராட்டி மகிழ்கிறார் :

"ஆனி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாஅங்கு,
இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன் தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" (கங்க - சஅ)

# கக. முதுவெங்கண்ணனார்

பொதும்பில் கிழார் ஒருவர் வெங்கண்ணனார் என்ற இயற்பெயர் கொண்டிருந்தலான், அவரின் வேறு அறிதற்கு இவர் முது வெங்கண்ணனார் என அழைக்கப் பெற்றுள்ளார். அறிவானும், ஆண்டானும் முதுமையுற்றாராய இவர், அருள் ஒழுகும் கண்ணுடையராதலின், முது வெங்கண்ணனார் என அழைத்துப் பாராட்டப் பெற்றுள்ளார். குறிஞ்சித்திணை தழுவிய இவர் பாட்டொன்று நற்றிணைக் கண் இடம் பெற்றுளது.

தன் ஆருயிர்த் தோழியாய தலைமகளைக் கூடிய தலைமகன், களவொழுக்கத்தைக் கைவிட்டு, ஊரார் கூறும் அலருரை ஒழியுமாறு அவளை மணந்து, மாண்புடைய இல்லறவாழ்க்கையினை ஏற்றுக் கோடல் வேண்டும் என்று விரும்பிய தோழி, அதைத் தலைமகன்பால் வெளிப்படக் கூறாது, "தலைவ! களிறும், பிடியுமாகிய இருயானைகளும், சுனையின் கரையிலே கூடி மலைவாழையை வெறுத்து, சிறுகுடிவாழ்வார் அலறுமாறு ஆண்டுள்ள பலாப்பழத்தினைத் தின்று மகிழும் நாடு நின்னுடு என்று அவன் நாட்டின் நிலைகூறுவாள் போல் கூறி, நின்னுட்டு யானைகளைப் போன்ற, நீயும் என் தலைவியும், இக்களவொழுக்கத்தினை வெறுத்து, ஊரில் உள்ளார் இக்களவொழுக்கம் கருதிக் கூறும் பழியுரை போமாறு, வரைந்து கொண்டு இல்லறப் பயனைப் பெறுவீராக எனத்" தான் கருதியது வெளிப்படக் கூறினாள். தோழியின் இக்கூற்று அமைய வந்துளது புலவர் பாடிய பாட்டு.

"சிறுகண் யானைப் பெருங்கை ஈரினம்,
குளவித் தண்கயம் குழையத் தீண்டிச்
சோலை வாழை முணைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலறச்
செங்காற் பலவின் தீம்பழம் மிசையும்
மாமலை நாட!" (நற்: உஉஉ)

## ௧௮. மூலங்கீரனார்

கீரனார் என்ற இயற்பெயருடைய இவர் மூலத்திரு நாளில் பிறந்தமையால் மூலங்கீரனார் என அழைக்கப் பெற்றுள்ளார் போலும். இவர் தஞ்சை மாவட்டம், சாயா வனமாய திருச்சாய்க் காட்டைப் புனைந்து பாடியுள்ளமையால் சோழ நாட்டைச் சேர்ந்தவராவர் எனக் கோடல் பொருந்தும்.

சாய்க்காடு, செந்நெல் விளைந்து சாய்ந்துகிடக்கும் கழனிகளில் அன்னப்பறவை துஞ்சும் வளமுடையது எனக் கூறுவது, தென்னாட்டு நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம் என்ற கூற்றினை மெய்ப்பித்துநிற்றல் காண்க.

> "மயிர்க்கிரைத் தன்ன வார்கோல் வாங்குகதிர்
> செந்நெலம் செறுவின் அன்னம் துஞ்சும்
> பூக்கெழு படப்பைச் சாய்க்காடு." (நற்: ௭௩)

பேயின் விரல்கள், செம்முருக்க மரத்தின் காய்கள், பழுத்து முற்றிய நெற்றுக்களைப் போலும்; பேய், ஊரார் இடும் பலி உண்ண வேண்டி, மாலைக்காலத்தே ஊர் மன்றம் சென்று அடையும் எனவும் கூறுவது, அக்கால மக்களின் மன இயல்பை உணர்த்துவதாம்.

> "வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
> மாணு விரல வல்வாய்ப் பேஎய்
> மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய
> மன்றம் போழும் புன்கண் மாலை." (நற்: ௭௩)

மூலங்கீரனார் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்தது இந் நற்றிணைப் பாட்டு ஒன்றே.

# ௨௦. மேலைக்கடைக் கண்ணம் புகுத்தாராயத்தனார்

கடையம் என்பது பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று; அது மேற்கடையம், கீழ்க்கடையம் என இரு கூற்றினதாம்; அது, "கோனாட்டுக்கடையம்" எனவும், "கோனாட்டு விக்கிரம பாண்டிய நல்லூரான கடையம்" எனவும் வழங்கப் பெறும். மேற்கடையத்திலிருந்து மதுரை வந்து வாழ்ந்தார் பலர்; அவர்கள், மதுரை மேலைக்கடையத்தார் என அழைக்கப் பெறுவர்; அவர்களுள் கண்ணம்புகுத்தாராயத்தனார் ஒருவர். இவர் பெயரைக் கண்ணம் புகுத்தார், ஆயத்தனார் எனப் பிரித்து, ஆயத்தனார் என்பது இவர் இயற்பெயர்; கண்ணம்புகுத்தார் என்பது, துயருறுவார் நிலை கண்டு தம் கண்கள் நீரொழுக நின்று வருந்தினமையாலோ, அவ்வாறு வருந்தியவரைக் கண்ணம்பு உகுத்தார் எனப் பாராட்டிச் சிறப்பித்தமையாலோ வந்த சிறப்புப் பெயராம் என்று கூறுவர் சிலர். இனி, இவர் பெயர்க்கு முன்வரும் மேலைக்கடை என்பதை ஓலைக்கடை எனக் கொண்டு, இவர், தாழை முதலியவற்றின் ஓலையால் இயற்றப்பட்ட குடைகளை விற்கும் குடைவாணிபம் மேற்கொண்டு வாழ்ந்தவர் வழிவந்தவராவர் என்று கூறுவாரும் உளர்.

இவர் பாடிய மகட்பாற் காஞ்சி மகிழ்தற்குரியது; ஓர் ஊர்த்தலைவன் மகள், மணத்தற்குரிய பருவம் உற்றாள்; பேரழகு கொண்டு விளங்கினாள்; அவளை மணந்து கொள்ள விரும்பிய மன்னர் பலராவர்; ஆனால், அவள் அண்ணன்மாரும், அவர் தந்தையும், அவளைத் தகுதியுடையானுக் கன்றித் தாரோம் எனக் கூறித் தக்கானைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்; அவளை மணக்க விரும்பிய மன்னர் அது பொறாது, அவரை வென்றாவது அவளைப்பெறத் துணிகின்றனர்; இதனால், அவ்வூரில் நடந்த போர்கள் பலவாம்; போர் பல நடந்தமையால், ஊரும், அவ்வூரைச்சூழ உள்ள

அரணும் பாழாயினவேயன்றி, அவளை வென்று அவளைப் பெற முடியவில்லை அரசரால்; மதிலைச்சூழ உள்ள அகழி தூர்ந்து விட்டது; மதில் உறுப்புக்கள் எல்லாம் இடிந்து தளர்ந்து விட்டன; மதிலும் இடிந்து விட்டது; இவ்வாறு பாழ்பட்டுக் கிடக்கிறது அவ்வூர்; அந்நிலையில் அவளை மணக்க மனம் கொண்ட மன்னன் ஒருவன், படையுடன் வந்து புறத்தே காத்துக்கிடக்கின்றான்; இவ்வாறு பாழான ஊரினைக்கண்டும், அவள் அண்ணன்மார் தம் முடிவினை மாற்றிக்கொள்ளாது, அப்போது வந்து நிற்கும் அம்மன்னனோடும் போரிடத்துணிந்து நிற்கின்றனர்; ஊரின் நிலையினையும், இருதிறத்தார் உள்ளத்தையும் உணர்ந்த ஒருவர், இவ்வூரின் நிலை என்னாமோ? என்று எண்ணி வருந்துகிறார். பழங்கால மக்கள் தம் மறவுணர்வினை விளக்கும் இக்காட்சியை இனிய செய்யுள் ஒன்றில் அமைத்துக் காட்டுகிறார் புலவர்:

“தூர்ந்த கிடங்கின், சோர்ந்த ஞாயில்,
சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்,
யாங்காவதுகொல் தானே! தாங்காது;
படுமழை உருமின் இரங்கு முரசின்
கடுமான் வேந்தர் காலை வந்து எம்
நெடுநிலை வாயில் கொட்டுவர் மாதோ;
பொருதாது அமைகுவர் அல்லர், போருழந்து
அடுமுரண் முன்பின் தன்னையர்.”

(புறம்: ௩௫௦)

## உக. மேலைக் கடையத்தார் நல்வெள்ளையார்

நல்வெள்ளையார் என்ற இயற்பெயரினராய இவர், மேலைக் கடையம் என்ற பாண்டி நாட்டு ஊரினின்றும் போந்து மதுரையில் வாழ்பவர்; வழி வழி வந்த புலவர் குடியினர்; பெயர் நோக்கி, இவரைப் பெண்பாலர் எனக் கொள்வாரும் உளர். இவர் பாடியனவாக உள்ள பாடல்கள் இரண்டு. அவ்விரண்டும் நற்றிணைக்கண் உள.

வெள்ளம் பெருகி ஓடுங்கால், அதைத்தடுத்து நிறுத்த வல்ல ஆற்றல் அணைக்கு உண்டாவதில்லை; அவ்வெள்ளத்தால், அவ் அணை அழியும்; அதைப் போலவே, ஒருவர்க்குக் காமம் மிக்கவழி, அதைத் தவறு என எடுத்துக் காட்டி அடக்கவல்ல ஆற்றல் அறிவிற்கு உண்டாவதில்லை; அக்காமத்தால் அவ்வறிவு அழியும். இஃது எல்லாரும் கண்டது; இதனால், அளவற்ற காமத்திற்கு ஆற்று வெள்ளத்தையும், அக்காமத்தை அளவறிந்து ஆள வேண்டிய அறிவிற்கு, அவ் ஆற்று வெள்ளத்தை அளவறிந்து போக்கும் அணையையும் உவமையாகக் கொள்வர் புலவர்கள். இதை நம் புலவர் பாட்டிலும் காணலாம்: "சிறையடு கடும்புனல் அன்ன, என் நிறையடு காமம்" என்ற தொடரைக் காண்க.

புலவர் தாம் பிறந்த காலத்தே, மக்கள் வடகோடியில் விளங்கிய இமயமலையினையும், அவ் இமயத்தினின்றும் தோன்றிப்பாயும் கங்கைப் பேராற்றினையும் உணர்ந்து பாராட்டினர் என்பதை உணர்ந்தவர் ஆவர்; அவற்றை அக்கால மக்கள் பயில உணர்ந்திருந்தனர்; ஒரு பொருளை உவமை கூறி விளக்குங்கால், அறிந்த பொருள்களையே உவமை கூறுதல் வேண்டும். நிறை அழித்துப் பெருகும் காமத்தை விளக்க, இமயத்தினின்றும் தோன்றி, இரு கரைகளையும், பெரு அணைகளையும் அழித்துப் பாயும் கங்கைப் பேராற்றினை உவமை கூறியுள்ளனர் எனின், அக்கால மக்கள் அவற்றைத் தீரத் தெரிந்திருந்தனர் என்பது தெளிவாமன்றோ?

"ஞெமை யோங்கு உயர்வரை இமயத்து உச்சி
வாஅன் இழிதரும் வயங்கு வெள் அருவிக்
கங்கை அம் பேர் யாற்றுக் கரையிறந்து இழிதரும்
சிறையடு கடும்புனல் அன்ன என்
நிறையடு காமம்." (நற்: நஉஉ)

தமிழகத்தின் தெருவுகளில், தமிழ் இளஞ்சிறுவர்கள், தம் கால்களில் கட்டிய கிண்கிணி ஒலிக்க, நடை தேர் உருட்டி நடை பயிலும் நல்ல காட்சிகளையும், பொருளொடு படா அவர்தம் வாய்ச் சொற்களைக் குழலினும், யாழினும் இனிமையுடையதாக் கேட்டு மகிழ்ந்து, அவர் தம் மலர் போலும் வாயினின்றும் வடியும் நீரால், தம் மார்பிற் பூசிய சந்தனம் சிதையுமாறு அன்பொழுக எடுத்தணைக்கும் அவர்தம் தந்தைமார் அன்பின்பெருக்கையும் புலவர் அழகொழுகக் காட்டியுள்ள காட்சியினை அவர் பாட்டொன்றில் கண்டு களிக்கலாம்;

"அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத், தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தம்."

(நற்: உ௫0)

# உஉ. மையோடக் கோவனார்

பரிபாடல் பாடிய புலவர் பெருமக்களுள் மையோடக் கோவனாரும் ஒருவர்; புனல் விளையாட்டிற்குத் துணை புரியும் ஓடத்தைப் புனைந்து கூறியதுபற்றி இப்பெயர் பெற்றார் போலும் எனக் கருதுவாரும் உளர். தலைமகன், தலைமகளோடு புனலாடி மகிழ்ந்தான் எனக் கேட்டு இன்புற்ற செவிலித்தாய், தோழியை நீவிர் ஆடிய புனலணி இன்பங்களை எடுத்துக் கூறுக என்றாட்கு, அப்புனலணி இன்பமும், தலைமகன் காதற் சிறப்பும் கூறி என்றும் இவ் வின்பமே நிறையுமாக என்று வாழ்த்தி வேண்டினாள் எனத் துறையமைய வந்த அப்பரிபாடற் பாட்டு, வையைப் பெருக்கினை வனப்புத் தோன்ற விரித்துக் கூறுகிறது.

புலவர், மையோடக் கோவனார், வையையின் வெள் ளப் பெருக்கினையும், அவ்வையைக்குரிய பாண்டி வேந்தர் தம் படையின் சிறப்பினையும் பல்லாற்றானும் பாராட்டிக் கூறியிருத்தலின், இவர் பாண்டி நாட்டவர், அப்பாண்டிய அரசர்பால் பேரீடுபாடு உடையவர் என்பன புலனாம்.

வையையாற்று வெள்ளம், புக அரிய இடம் என எதையும் ஒதுக்காமல் எங்கும் பரந்து பாய்ந்தோடும் காட்சி, பாண்டியர் பெரும்படை, தம்மால் கொள்ளற் கரிய நாடு இது என எந்நாட்டையும் வரைந்து ஒதுக்காது, கொள்ளக் கருதிய நாடுகள் அனைத்தினும் உட்புக்குப் பாழ் செய்யும் நிகழ்ச்சியோடு ஒத்துளது என்றும், வையைப் புனல் தன்னகத்தே புகுந்து ஆடும் ஆடவர், மகளிர் ஆய இருவரும் அணிந்திருக்கும் தலைமாலை, கைவளை, விரல் மோதிரம், தலைக்கோலம், இடை ஆடை, இருவட மணிமேகலை, எண் வடக் காஞ்சி, வாகு வலையம் ஆய ஆடை, அணி அனைத்தையும் கவர்ந்தோடும் காட்சி, பகைவர் நாட்டுட் புக்குப் பாழ்செய்யும் பாண்டியர் பெரும் படை அந்நாட்டுச் செல்வம் எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு வரும் நிகழ்ச்சியோடு ஒக்கும் என்றும், வையைக்

கும், அதன் வேந்தர்க்கும் ஒற்றுமை காட்டிப் பாடியுள்ள புலமை பாராட்டற்குரியது.

> "இரவிருள் பகலாக, இடமரிது செலவென்றாது
> வலன் இரங்கு முரசின் தென்னவர் உள்ளிய
> நிலனுற நிமிர்தானை நெடுநிரை நிவப்பன்ன
> ..............................................
> வந்தன்று வையைப் புனல்."
>
> 'துனைந்தாடுவார் ஆய் கோதையர்
> அலர் தண்டார் அவர் காதில்
> தளிர் செரீஇக், கண்ணி பறித்துக்
> கைவளை, ஆழி, தொய்யகம், புனை துகில்,
> மேகலை, காஞ்சி, வாகு வலயம்
> எல்லாம் கவரும் இயல்பிற்றாய்த் தென்னவன்
> ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் மாறட்ட
> தானையான் வையை வனப்பு."
>
> (பரிபாடல் எ : ரு-கO ; சஙு-ருO)

ஆடல் மகளிர், தம் ஆட்டத்திற்கு அமைத்த அரங்கிடமன்றி, வேறிடம் புகுந்து ஆடல், ஆடல் மரபிற்கு முரண்பட்டதாம் என்ற ஆடல் அறிவையும், "ஊடுதல் காமத்திற்கு இன்பம்" எனினும், அவ்வூடற்கு இன்பம், அவ் வூடற்குப் பின் கூடி முயங்கப்பெற்ற வழியே உண்டாம்; அவ்வாறின்றி, ஊடலே மேலும் நிற்றல் இன்பத்திற்கு இடையூறாம்; ஆதலின் அன்றோ, "உப்பு அமைந்தற்றால் புலவி, அது சிறிது மிக்கற்றால் நீளவிடல்" என்று கூறினர் வள்ளுவப் பெருந்தகையாரும்; ஊடலின் இவ் வுயர்வையும் உணர்ந்தவர் நம்புலவர் மையோடக் கோவனார்; வையைப் புனல், அதற்கு என அமைந்த ஆற்றுப் படுகையின்கண் மட்டுமன்றி, அதையும் கடந்து எங்கும் பரந்துபோம் நிகழ்ச்சி, ஆடல் மரபறியா மகள் ஒருத்தி, தனக்கு அமைத்த அரங்கையும் கடந்து ஆடுவது போலும் எனவும், ஊடற் பண்பறியாப் பேதை ஒருத்தி, கழிபெரும் ஊடலால் தன் கணவனையும் கடந்து செல்வதே போலும், வையை, தன் வெள்ளப் பெருக்கின் வேகம் மிக்கு விடா

மல் தடுத்து நிறுத்தத் தன்னிடையே அமைந்த அணைகளை அழித்துச் செல்லும் நிகழ்ச்சி எனவும் அவர் கூறுவனவற்றை அறிந்து மகிழ்க.

"ஆடல் அறியா அரிவை போலவும்,
ஊடல் அறியா உவகையள் போலவும்,
வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது."
(பரிபாடல் எ : கஎ-கக)

வெள்ளம், ஊரையும், சேரியையும் ஒருங்கே அழித்தும், விளை நிலங்களை வெறுக்கிப் பாழ் செய்தும் பெருகி ஓடுவதைக் கண்ட உழவர், அதன் போக்கை மாற்றி அமைக்க வேண்டும் எனும் ஆர்வத்தால் விரைந்து தொழிலாற்றத் தொடங்கும் அவர் வேட்கைக்கு, ஊடலைப் பல காலும் உணர்த்தவும் உணராது ஊடி நிற்கும் மகளிரை, ஊடல் தீர்க்க விரும்பும், அவர் கணவர்தம் ஆசைப் பெருக்கினை உவமை காட்டிய சிறப்பு, உயர்ந்தோர் பாராட்டும் பண்புடையதாம்:

"வித்திடு புலம் மேடாயிற்று என,
உணர்த்த உணரா ஒள்ளிழை மாதரைப்
புணர்த்திய விச்சத்துப் பெருக்கத்தில் துனைந்து
சினைவளர் வாளையிற் கிளையொடு கெழீஇப்
பழன உழவர் பாய் புனல் பரந்தந்து"
(பரி : எ, நடு-நக)

# உங. மோதாசனுர்

இவர் பெயரால், குறுந்தொகைக்கண் ஒரு செய்யுள் இடம் பெற்றுளது என்பதல்லது, இவர் வரலாறு குறித்து வேறு ஏதுவும் அறிதற்கில்லை.

ஒரு தலைவனும், ஒரு தலைவியும் தாம் இருவரும் மணத்தற்குத் தம் ஊர் வாழ்க்கை இடையூறுதல் அறிந்து, அயலூர் சென்று மணந்து வாழத்துணிந்து தம் ஊரை விட்டுச் செல்லலாயினர்; அவர்களை இடைவழியில் கண்டார் சிலர்; அவர்கள், அவர்களை முன்னரே அறிந்திருந்தனர்; இளமையில், ஐம்பாலாகப் பின்னிவிடப்பட்டிருந்த அவள் கூந்தலை அவன் பற்றி இழுப்பன்; அவன் தலைமயிரை அவள் கைப்பற்றி வளைத்து வலிப்பள்; அவர் இருவர்க்கிடையே உண்டாம் இச்சிறு பூசல்களை, இருவர் செவிலித்தாயரும் இடையிட்டுப் போக்குவர்; அவ்வாறு அன்று பலகாலும் போர்புரிந்து வாழ்ந்த அவ்விருவரும், இரு மலர்கள் ஒருங்கே பிணைப்புண்டாற்போல், ஒருவரை ஒருவர் இன்றியமையாராயினர்; அன்று அவர்கள் மேற்கொண்ட சிறுபூசல்களை இடையிட்டுப் போக்கிய செவிலித்தாயர், இன்று அவர்கள் மணவினைக்கு இசையாராயினர்; அவர்கள் இசையாராகவும் இவர்கள்மனம்ஒத்து மணக்கத் துணிந்துவிட்டனர்; இளமையில் இருவர் உள்ளத்திருந்த பகையையும், இன்று இருவர்தம் பெற்றோர்க்கிடையே நிலவும் ஒற்றுமை இன்மையையும் ஒருங்கே போக்கி, இருவரும் உளம் கலந்து உறவாடத் துணைபுரிந்தது ஊழ்வினை; இவ்வாறு உறுதுணை புரிந்த ஊழ்வினை வாழ்க பல்லாண்டு என அவ்வூழ்வினையை வாழ்த்தினர். வழிச்செல்வார் வாழ்த்திய வாழ்த்துரையினை வகுத்துக்காட்டுகிறது புலவர் மோதாசனுர் பாடிய அப்பாட்டு.

இதில் அடுத்தடுத்த வீடுகளில் வாழும் இளைஞர்கள், காரணம் இன்றியே பலகாலும் ஒருவரோடொருவர் போர் புரிவதையும், அப்போரை அவர்தம் பெற்றோர் இடை

யிட்டுப் போக்குவதையும் புலவர் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட வாழ்க்கைக்கு, இணைமலர்ப் பிணையலை உவமைகாட்டிய சிறப்புப் பாராட்டற்குரியதாம்.

“இவன், இவள் ஐம்பால் பற்றவும், இவள், இவன்
புன்தலைஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ!
நல்லை மன்றம்ம ! பாலே ; மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.” (குறுந் : உஉக)

## உச. வடநெடுந்தத்தனார்

இவர், வடநாட்டினின்றும் தமிழ்நாட்டிற் குடிபுகுந்து வாழ்ந்த பழங்குடிகள் ஒன்றிற் றோன்றியவர்; தத்தனார் என்ற இயற்பெயருடையவர்; இவர் புலமைநலம் அறிந்த அக்கால மக்கள், இவரை நெடுந்தத்தனார் என அழைத்துப் பாராட்டினர்; இவர் பெயர், வடமநெடுநத்தனார் என்றும், வடமநெடுந்தச்சனார் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது. இவர், நாலைகிழவன் நாகன் என்பானைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

பாண்டிநாட்டில், அருப்புக்கோட்டையை அடுத்துள்ள நாலூர் என்பதே நாலை என மரீஇ வழங்கியுளது; அவ்வூர்க்கு உரிமைபூண்டு வாழ்ந்தமையால் நாகன், நாலை கிழவன் நாகன் என அழைக்கப்பெற்றுளான்; நாகன், பாண்டியர் படைத்தலைவருள் சிறந்தவன்; பாண்டி வேந்தர்க்குப் படைத்துணை வேண்டிய காலத்தே அஃது அளித்துத் துணைபுரிதலோடு, அப்பாண்டிநாட்டு அரசியல் நன்கு நடைபெறுதற்காம் நல்லறிவும் நல்கும் நற்பண்புடையவன்; கெடாத புகழ் உடையவன்; போர்க்களத்தே பகைவர் பலரைக் கொன்று, பருந்துகளின் பசி போக்கும் பேராண்மையாளன்; இவன் துணைபெற்று, பாண்டி நாடாண்ட அரசன், மண்பல தந்த பாண்டியன் என அழைக்கப்படுதலால், அப்பாண்டியன், நிலந்தரு திருவிற் பாண்டியனாவன் எனக் கொள்வாரும் உளர்.

நாலைகிழவன் நாகனைப் பாராட்டிய நல்லிசைப் புலவராய நெடுந்தத்தனார், உலகில், உயர்ந்த கொடையாளர் ஒருவரும் இலராக எல்லோரும் மாய்ந்தாராக, பாணர், பொருநர், கூத்தர் முதலாம் இரவலர் தமக்குப் பொருள் அளித்துப் பேணுவாரை இழந்து வருந்திய காலத்தே, இவர்தம் வறுமைபோக வழங்கவல்லோன் யாவன் என வேண்டி நின்றார்க்கு, அவ்வாறு வழங்கவல்ல வள்ளியோன், நாலைகிழவன் நாகனாவன் எனப் பலர் கூறினர் என்று

பாடிப் பாராட்டியுள்ளார். இதில் அவன் படைப்பெருமையினையே முழுதும் பாராட்டிய புலவர், இரவலர்க்கு இட்டு வழங்குவார் இலராய உலகில், அவர்க்கு அருங்கலம் அளித்து ஆதரிப்போன் இவன் ஒருவனே எனக்கூறிய கூற்றால் அவன் கொடைக்குணத்தையும் பாராட்டிய பண்பு பாராட்டற்குரியதாம்.

“ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போர் யார்என வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்
படை வேண்டுவழி வாள் உதவியும்,
வினை வேண்டுவழி அறிவு உதவியும்,
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநுகம் படாஅ ஆண்டகை உள்ளத்துத்
தோலா நல்லிசை நாலைகிழவன்
பருந்து பசி தீர்க்கும் நற்போர்த்
திருந்து வேல் நாகன் கூறினர் பலரே.” (புறம் : கஎக)

# ௨௫. வருமுலையாரித்தி

இவர் பெண்பாற் புலவராவர் எனக்கொள்வர், குறுந்தொகைப் பதிப்பாசிரியர். அவ்வாறு கோடற்குரிய காரணம் எதையும் அவர் காட்டினாரல்லர்; வருமுலையாரித்தி என்ற தொடர் அமையப் பாடிய காரணத்தால் பெற்ற பெயராதலும் கூடும் ஆதலின், இவரைப் பெண்பாலார் எனத் துணிந்து கொள்வதற்கில்லை.

ஆண்மகன் ஒருவன், தன் உள்ளம் விரும்பிய பெண் ஒருத்தியைப் பெற எண்ணியக்கால், தன் ஆண்மையால் அறவழியின்நீங்கிப் பெற முயலாது, தன் கருத்தினை அவள் ஏற்று இசையுமாறு பலகாலும் அவள்பால் சென்றும், பணிந்த மொழிபல கூறியும் தான் எண்ணியதை முடித்துக் கோடல் வேண்டும்; ஆண்மகன் இத்தகைய பண்பட்ட உள்ளமுடையனாதல் வேண்டும் என்ற தம் கருத்தினைப் புலவர் வருமுலையாரித்தியார் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

"ஒருநாள் வாரலன் ; இருநாள் வாரலன் ;
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி, என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை." (குறுந் : ௧௭௬)

உள்ளம் கலங்கிய கலக்கத்திற்குப், பெருமழை பிறர் நாட்டில் பெய்ததாக, ஆங்கிருந்து பெருகி ஓடிவரும் வெள்ளத்தின் கலங்கிய நிலைமையினை உவமை கூறியது, உள்ளக்கலக்கத்தின் கொடுமையினை விளக்கிநிற்றல் காண்க.

"வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழும் என் நெஞ்சே." (குறுந் : ௧௭௬)

# உ௬. வன்பரணர்

சங்க காலப் புலவர்களுள், பரணர் என்ற பெயருடையார் மூவர். அவர்கள், ஒருவரின் ஒருவர் வேறு அறிதற்குப் பரணர் எனவும், நெடுங்களத்துப் பரணர் எனவும், வன்பரணர் எனவும் வழங்கப்பட்டனர். பரணர், சேரன் செங்குட்டுவனைப் பாடியவர்; நெடுங்களத்துப் பரணர், நெடுங்களம் எனும் ஊரிற் பிறந்தவர்; வன்பரணர், கண்டீரக்கோப் பெருநள்ளியையும், வல்வில் ஓரியையும் பாடியவர். இவர் பெயர்க்கு முன்னே காணப்படும் வன் என்ற சிறப்பு வருதற்குரிய காரணம் விளங்கவில்லை. இவர் காலப் புலவர்கள், இவராற் பாராட்டப் பெற்றோராய அவ் விருவரையும் பாடிய, கபிலர், கல்லாடனார், கழைதின் யானையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், பரணர், பாலத்தனார், பெருந்தலைச் சாத்தனார் முதலியோராவர்.

கண்டீரக் கோப் பெருநள்ளி, கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; குமணனுக்கு முற்பட்டவன்; தோட்டி என்ற மலைக்கும், அதைச் சூழஉள்ள மலைநாட்டிற்கும் உரியவன்; வில்லாற்றல் மிக்க வீரர்க்குத் தலைவன்; தன் நாடு நோக்கி வருவார்க்கு யானையும், தேரும், பொன்னும், பொருளும் அளித்துப் போற்றுபவன்; இவன் அளிப்பது மட்டுமன்று; இவன் இல்லாக் காலத்தில், இவன் நாடு நோக்கிச் செல்வார்க்குப் பிடி யானைகள் பலவற்றை இவன் பெண்டிரும் அளிப்பர்.

ஒருநாள் நள்ளி, காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான்; அக்காலை, அவ் வழியே வந்த வன்பரணர், வறுமையாலும், வழிநடை வருத்தத்தாலும் மெலிந்து, மரமொன்றின் கீழ் இருந்து இளைப்பாறினர்; இருந்தாரை, அந் நிலையிற் கண்ட நள்ளி, தான் வேட்டையாடிக் கொணர்ந்த விலங்கின் தசையைக் கடைக்கோலால் உண்டாக்கிய தீயில் தானே சுட்டு, அவர்க்கும், அவரோடு வந்தார்க்கும் வழங்கினான்; ஆரப் பசித்த அவர்கள், அது

தீர உண்டபின்னர், மீண்டும் வழியே செல்லலாயினர்; அப்போது, நள்ளி, அவர்களை அணுகி, "ஐய! காட்டில் வாழ்கின்றேன்; கையில் ஒன்றுமிலேன்," என்று கூறிக் கழுத்தில் அணிந்திருந்த ஆரத்தையும், கையிற்கிடந்த கடகத்தையும் அளித்து மகிழ்ந்தான்; அவன் இன்னான் என்பதை அறியாத வன்பரணர், "வேண்டாதபோதே வலியவந்து விருந்தேற்றுப் போற்றும் நீ யார்?" என்று வினவ, அதற்கு விடையளியாதே வெளியேறினான்; பின்னர் அவ் வழி வந்தோரால், அவன் நள்ளி என்பதறிந்த வன்பரணர், உள்ளமும், உரையும் ஒருவழி நிற்க, உயர்ந்த பாக்கள் பல பாடிப் பாராட்டினார். காட்டகத்தே கண்ட காட்சி அமைய வந்த பாட்டு அவற்றுள் ஒன்று.

"கூதிர்ப் பருந்தின் இருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதல் பொருந்தித்
தன்னும் உள்ளேன், பிறிதுபுலம் படர்ந்தஎன்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணம் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்கும் சென்னிச்
செல்வத் தோன்றல் ஓர்வல்வில் வேட்டுவன்,
தொழுதனென் எழுவேன் கைகுவித்து இரீஇ,
இழுதின் அன்ன வானிணக் கொழுங் குறை
கானதர் மயங்கிய இளையர், வல்லே
தாம்வந்து எய்தா அளவை, ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, 'நின்
இரும்பே ரொக்கலொடு தின்மென'த் தருதலின்
அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி,
நன்மரன் அளிய நறுந்தண் சாரல்
கன்மிசை அருவி, தண்ணெனப் பருகி,
விடுத்தல் தொடங்கி னேனாக, வல்லே,
'பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லை: காட்டு நாட்டேம்' என
மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்,
மடைசெறி முன்கைக் கடகமோடு ஈத்தனன்;

'எந்நாடோ ?' என நாடும் சொல்லான் ;
'யாரீரோ ?' எனப் பேரும் சொல்லான் ;
பிறர் பிறர் கூற வழிக்கேட் டிசினே." (புறம் : ௧௫0)

நள்ளியின் கொடைச் சிறப்பை, அவன் நாடடைந்து நேரிற் கண்ட புலவர் வன்பரணர், அதைத் தம் நாவார வாழ்த்துவாராயினர் ; நள்ளி, தம்மைப்போலும் புலவர்க்கும், பாணர் முதலாம் இரவலர்க்கும், களிறுகளையும், கலன்களையும் நாடோறும் அளிப்பதால், வறுமையொழிந்து வாழ்ந்த அவர்கள், தம் வறுமை போகவேண்டி, பொருள் ஒன்றே பெற்று, புகழ் சிறிதும் பெறாத மன்னர் அவைதோறும் சென்று, அவர் தரும் பொருள் கருதி, அவர்பால் இல்லாத குணங்களை இருப்பனவாகக் கூறிப் பொய் பாராட்டவேண்டிய பழிநிலை அற்றவராயினர் என்றும், இரவலரும், புலவரும், நள்ளி அளித்த பொருளால், நல்வாழ்வு வாழலாயினர் ஆகவே, அவர்கள் வேறு பிறரைப் பாடவேண்டிய இன்றியமையாமை யற்றவராயினர் ; பாடற்றொழிலை அவர் மறந்துவிடவே, எந்தப் பண்ணை எந்தக் காலத்தில் பாடவேண்டும் என்ற பாடற் பண் அறிவையும் இழந்தனர் ; அதனால், காலையில் பாட வேண்டிய மருதப் பண்ணை மாலையிலும், மாலையில் பாட வேண்டிய செவ்வழிப் பண்ணைக் காலையிலும் பாடலாயினர்; இவ்வாறு அவர்கள் தம் குலத்தொழிலையும் மறக்கச்செய்த மாண்பு, நள்ளியின் கொடைக் குணத்திற்கு உண்டு என்று பாராட்டிய பாக்கள், புலவர்தம் புலமைச் சிறப்பினைப் புலப்படுத்தி நிற்றல் காண்க.

"நாடொறும் நன்கலம் களிற்றொடு கொணர்ந்து
கூடு விளங்கு வியன்நகர்ப் பரிசில் முற்றளிப்பப்
பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே."

"நள்ளி ! வாழியோ ! நள்ளி ! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக், காலைக்
கைவழி மருங்குல் செவ்வழி பண்ணி

வரவு எமர் மறந்தனர்; அது, நீ
புரவுக் கடன் பூண்ட வண்மை யானே,"
(புறம்: கசஅ, கசக)

ஓரியும், கடையெழு வள்ளல்களுள் ஒருவனாவன்; மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கொல்லிமலை இவனுக்கு உரியது; அம் மலையில், அழகொரு மொருங்கு திரண்டு உருப்பெற்ற பாவை ஒன்று உண்டு; அவன் நாட்டு மக்கள், உழுதொழில் தவறி உணவின்றி வருந்த வேண்டிய காலத்தே, காட்டில் யானைகளைக் கொன்று, அவற்றின் கொம்புகளை விலையாகக் கொடுத்து உணவு பெற்று உண்பர்; ஓரி, காரியோடு போரிட்டு இறந்தான்; ஓரி, மாரிபோல் வழங்கும் மாபெரும் வள்ளலாவன்; ஓரி, விற்போர் வல்லவன்; அதனாலேயே வல்வில் ஓரி என வழங்கப்பெற்றவன்; இவன் வில்லாற்றலை நேரிற் கண்டு மகிழ்ந்த பாணர், அதனைப் பாடிப் பரவியும் உள்ளார்; ஓரி கையேந்திய வலிய வில்லினின்றும் புறப்பட்ட அம்பு விரைந்து சென்று, முதற்கண் வேழத்தை வீழ்த்திப், பின்னர்ப் புலியின் உயிரைப் போக்கி, மானை மாளச்செய்து, பன்றியின் உயிரைப் பறித்து, இறுதியில் புற்றில் அடங்கிக் கிடக்கும் உடும்பின் உடலிற் சென்று தைத்து நிற்கும் என்று கூறிய இப் பாராட்டு, இயற்கையோடியைந்து நின்று அவன் ஆற்றலை அறிவித்து நிற்றல் காண்க.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்
புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழல் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்."
(புறம்: கருஉ)

வல்வில் ஓரியும், காண்டீரக் கோப் பெரு நள்ளியைப் போன்றே, வன்பாணர்க்கு, வழியிடையிலேயே, உணவளித்து வழிபாடு செய்ததோடு, அவரும், அவர் சுற்றமும்

அவர் தம் தொழில் மறக்குமளவும் பெரும் பொருள் கொடுத்தும் சிறப்பித்துளான்.

கண்டீரக்கோப் பெருநள்ளி நல்கிய பெருவளத்தால், அவர்கள் தம் பண் அறி அறிவினை இழந்ததைப் போன்றே, வல்வில் ஓரி வழங்கிய வற்றாப் பெரும் பொருள் உடைமையால், அவர்கள், இசையெழுப்பிப் பாடலும், ஆடலுமாய தம் தொழிலை மறந்தனர் எனப் புலவர் கூறுவர்.

> "கடும்பே, பனிநீர்ப்பூவா மணிமிடை குவளை
> வாளார்த் தொடுத்த கண்ணியும், கலனும்
> யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
> பசியாராகல் மாறுகொல் விசிபிணிக்
> கூடுகொள் இன்னியம் கறங்க
> ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே."
>
> (புறம்: கடுஙு)

காட்டிடை நடந்த பெரும்போரில் தன் கணவன் விழுப்புண் பெற்று வீழ்ந்தானாக, ஆண்டு அவன் உடலைத் தேடிச் சென்ற அவன் மனைவி, "அந்தோ!" "ஐயோ!" என வாய்விட்டுக் கதறி அழுவாளாயின், அவள் அழுகையொலி கேட்டு, அக்காட்டுள் உறை கடும்புலி வந்து அவன் உடலையும் தின்றுவிடுமே; அதனால் அவன் உடலைக் கண்டு மகிழ்தலும் இன்றாமே என்ற அச்சத்தால் வாய்விட்டு அழுதலும் செய்திலள்; அவன் உடலை அச்சம் நிறைந்த அக்காட்டினின்றும் எடுத்துச் சென்று காக்கலாம் எனிலோ, அகன்ற மார்புடை அவன் உடலை எடுத்துச் சேறல் அவளால் இயலாது ஆதலின், அதையும் அவள் செய்திலள். இவ்வாறு வருந்திய அவள், தன்னை இவ்வாறு வருத்திய கூற்றமும், இவ்வாறே வருந்தி அழிக! எனக்கூறி வருந்தினாள் எனப் பாடிய பாட்டொன்று, பண்டைத் தமிழகத்தின் படைமறவர் பண்பாட்டினை உணர்த்தி நிற்கிறது.

> "ஐயோ! எனின், யான் புலி அஞ்சுவலே;
> அணைத்தனன் கொளினே, அகன்மார்பு எடுக்க வல்லேன்;
> என்போல் பெருவிதிர்ப்பு உறுக! நின்னை
> இன்னாதுற்ற அறனில் கூற்றே." (புறம்: உருடு)

கேட்டினும் உண்டு ஓர் உறுதி என்ப; தலைவன் ஒருவன் பொருள் கருதிப் பிரிந்தறியாத் தன் மனைவியைப் பிரிந்து சென்றிருந்தான்; அப்பிரிவால் இருவருமே வருந்தினர்; ஆயினும், தலைவன் மீண்டுவரும் பருவம் வந்துற்றது என்பதறிந்த அவன் மனைவி, அவன் பிரிவை எண்ணி அழுவதை மறந்தாள்; மீண்டுவரும் அவனை மகிழ்ந்து வரவேற்க விரும்பினாள்; அவன் விரும்பி உண்ணும் உணவு பல ஆக்க எண்ணினாள்; அதை ஏவல் மகளிர் செய்யின், அவன் விரும்பும் சுவை அறிந்து ஆக்கார் என்று கருதினாள்; உடனே அன்று காறும், அட்டிற்சாலை புகுந்தறியா அவள், ஆங்குச் சென்று, தன் உடல் வருத்தமும் பேணாது, வகைவகையான உணவுகளை ஆக்கி முடித்தாள்; அழகிய அணிபல அணிந்து கொண்டாள்; எதிர்ப்பட்டார் எவரிடத்தும் இன்னுரை வழங்கலாயினள்; மனைவிபால் உண்டாய இம் மாற்றத்தை அறிந்தார் வாய்க் கேட்ட அவன், அவள்பால் அத்தகையை மாண்பு வரச்செய்த தன் பிரிவை வாழ்த்தினான்; அவள் பால் அன்று காணலாம் அம்மாண்புகள் என்றும் நிலைத்து நிற்க விரும்பினான். பழந்தமிழ் மகளிர் பால் தாம் கண்ட இம் மாண்புகளைப் புலவர் வன்பரணர் பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார்.

"முற்றையும் உடைய மோ?.........
.........................................
விருந்தயர் விருப்பினள் வருந்தும்
திருந்திழை அரிவைத் தேமொழி நிலையே." (நற்: ௧எ௪)

# உஎ. வாடாப் பிரமந்தன்

இவர் பெயர் வாடாப் பிரபந்தன் எனவும், வாடாப் பிரமாந்தன் எனவும் ஏடுகளில் காணப்படுகின்றது. இவர் பெயரன்றி, பிற எதுவும் தெரிந்திலது. குறுந்தொகைக்கண் காணப்படும் செய்யுள் ஒன்றே இவர் பாட்டாக நமக்குக் கிடைத்துளது,

தலைவன் பொருள்குறித்துப் பிரியக் கருதுகின்றனன் என்பதைக் குறிப்பால் அறிந்து வருந்துகிறாள் என்பதறிந்த தோழி, அவளை நோக்கி, "தோழி! மாவின் தளிர்போலும் மென்மையும், பொன்னிறமும் பெற்ற நின் அழகை மதிப்பாரல்லர் அவர்; அவர் தேடிச் செல்லும் பொருளும், நம்மினும் சிறந்த தன்று; அவர் செல்லும் ஆறும் கொடுமையற்றதன்று; நீண்ட மூங்கிலும் வாடும் நீரற்றது; அவ்வழிச் செல்வாரை அழித்து அவர் பொருளைக் கொள்ளை கொண்டு உண்ணும் கொடியவர் வாழ்விடம், கொடிய யானைகள் பலகூடிவாழும் கொடுமை உடையது; ஆகவே, அவர், நின் அழகு அழியுமாறு, நின்னினும் சிறவாத பொருள் பொருட்டுக் கொடிய காட்டுவழிச் செல்ல எண்ணார்; நீவருந்தற்க!" எனக் கூறித் தேற்றினாள் என்ற பொருள் பொதிந்த சிறப்புடையது அப்பாட்டு.

"நெடுங்கழை திரங்கிய நீரில் ஆரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறு கூட்டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி,
இறப்பர் கொல் வாழி தோழி! நறுவடிப்
பைங்காண் மாஅத்து அந்தளிர் அன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினும் சிறந்த அரும்பொருள் தரற்கே."

(குறு: உசுக)

## உ அ. வான்மீகியார்

வடமொழி இராமாயணம் எழுதிய வான்மீகியார் வேறு; இவர் வேறு; வடமொழி வான்மீகியார்பால், இவருக்கோ, அல்லது இவர் தந்தையார்க்கோ பேரீடுபாடு உடைமையால், இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது போலும். வடமொழிவல்ல முனிவர் பெயர்களைப் பண்டைத் தமிழாசிரியர் மேற்கொண்டனர் என்று செந்தமிழ் நாட்டுப் புலவர் பெயர்களை நோக்கினோர்க்குப் புலனும். வடமொழி வான்மீகியாரின் வழிவந்தவர் இவர் எனக் கூறுவாரும் உளர். "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரத்தால், இவர் பெயர் வான்மீகனூர் எனவும் வழங்கப்பட்டது என்பது தெரியவரும். இவர் பெயர், வான்மீகையார் எனவும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இதுவே உண்மைப் பாடமாயின், இது, மழையினும் சிறந்த வண்மையுடையார் எனப் பொருள்தந்து, செந்தமிழ்ச் சான்றோர் ஒருவரது தமிழ் இயற்பெயராய், ஓரளவு ஒலி ஒற்றுமை உண்மையால், வடமொழி வான்மீகியார் பெயரோடு தொடர்புபடுத்தப் பெற்றதாம் எனக் கோடல் பொருந்தும்; இல்லறத்தினும் துறவறமே சாலச்சிறந்ததாம் என்ற பொருள் விளங்க வந்த புறப்பாட்டொன்று புறநானூற்றின்கண் இடம் பெற்றுளது.

மக்கள் மனம் இன்ப நாட்டமுடையது; அவ்வின்பத்தைத் தேடித் திரிவது; உலக மக்கள் ஓயாது உழைப்பதெல்லாம் அவ்வின்பத்தினைப் பெறற்பொருட்டே; அதற்காகவே உலகில் வாழ்கின்றனர்; அதற்காகவே பொருள்தேடிப் போர்புரிகின்றனர். ஆனல், எதை இன்பமென அவர் கருதுகின்றனரோ, அஃது உண்மை இன்பமாகாது; எங்கு இன்பத்தைப் பெறலாம் என எண்ணுகின்றனரோ, அங்கு அதைப்பெறல் இயலாது; இன்பம் கருதி எதைத் தேடிச் செல்கின்றனரோ, அவரை

அது அடைய விரும்பாது; இவ்வுண்மைகளை உணர்ந்து உணர்த்தி, துறவறத்திற்கு உயர்வுகாண முயன்றுளார் புலவர்; உலகில் இன்பம் பெறலாம் என எண்ணுவது பேதைமை; உலக இன்பம் நிலையற்றது; இன்பம் நிலையாகப் பெறவேண்டின், அவ்வின்பம் நிலவும் உலகில் வாழ்வு நிலையுடையதாதல் வேண்டும்; ஆனால் உலகில் அத்தகைய வாழ்வு அரிதினும் அரிது; நிலையற்ற வாழ்வுநிறைஉலகில், நிலைபேறுடைய இன்பத்தை எதிர்நோக்கி நிற்றல் அறிவுடைமையன்று; "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே அல்கா நல்குரவு அவாவெனப் படுமே" என்ப ஆகலின், நிறை உள்ளம் உடையவரே பெருஞ்செல்வம் பெற்றவராவர்; பொருள்பெறும் பேராசை உடையார்க்கு, அந்நிறைவுள்ளம் உண்டாதல் இல்லை ஆதலின், அவர் எத்துணைப் பெரும் பொருள் பெற்றவராயினும், அவர் செல்வராகார்; ஆகவே, செல்வத்தின்பால் சென்ற உள்ளம் உடையார்பால் செல்வம் சேர்வது இல்லை; அச்செல்வம் பற்றிய சிந்தையற்றவரிடத்திலேயே அச்செல்வம் செழிக்கச் சேரும்; அதனால், பொருள்தேடிப் பேரின்பம் பெறலாம் என எண்ணுவது பேதைமை; அஃது இயலவும் இயலாது; ஆகவே, உலகியல் வாழ்வாகிய இல்லறவாழ்வு, துறவறவாழ்வோடு சிறிதும் ஒப்புடையதாகாது என உணர்ந்த அறிவுடையோர், உலகியல் வாழ்வைக் கைவிட்டுத் துறவற வாழ்வினை மேற்கொண்டு உயர்ந்தனர் எனக் கூறியுள்ளார் புலவர்.

துறவற நெறியினைத் தெளியக்கூறிய இவரே, அரசியல் நெறிபற்றிய அரிய கருத்து ஒன்றையும் அள்ளி வீசியுள்ளார்; நாட்டில் நல்வாழ்வு நிலவ வேண்டின், அந்நாடு நிலையான அரசியல் உடையதாதல் வேண்டும்; அழிக்கலாகா அரசியல் நிலவும் நாட்டிலேயே இன்பம் நிற்கும்; நாளுக்கொரு தலைமையென நிலையற்ற அரசியல் நிலைபெறும் நாட்டில் அமைதிகாணல் இயலாது; அமைதி குலைவுற்ற நாட்டில் இன்ப வாழ்விற்கு இடையூறு பல உண்டாம்; ஆகவே, நாடு நல்வாழ்வு வாழவேண்டின், அந்

நாடு மாறாத் தலைமையால் மாண்புறுதல் வேண்டும் என்று கூறியுள்ளார். "ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே, வேந்தமைவில்லாத நாடு" என்ற குறட்பாவின் கருத்தினையும் நோக்குக. இத்துணை அருங் கருத்துக்கள் பலவும் ஒருங்கே அமையப் பாடிய புலவர் பெருமையினைப் பாராட்டுவோமாக!

பருதிசூழ்ந்த இப்பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தியற்றே;
வையமும், தவமும் தூக்கின், தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆகலின்,
கைவிட்டனரே காதலர்; அதனால்
விட்டோரை விடாஅள் திருவே;
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே."

(புறம் : ௩௫௮)

## உகூ. வினைத்தொழிற் சோகீரனார்

தும்பிசேர்கீரனார் என்ற பெயருடையாரொருவரும், பண்டைப் புலவர் வரிசையில் இடம்பெற்றுள்ளனர். அவர் பெயர்க்கான காரணத்தைக் காணமாட்டாமையால், அவர் பெயரைத் தும்பிசேர்கீரனார் என்றும், தும்பி சொகினனார் என்றும் பலவாறாகக் கொள்வர். அப்பெயரைப் போன்றே இப்புலவர் பெயரும் ஐயப்பாட்டிற்குட்பட்ட பெயராக அமைந்துளது. இவர் பெயர்க்கு முன்வரும் வினைத் தொழில் என்ற சிறப்பிற்குரிய காரணத்தையும் காண் டற்கு இல்லை. இவர் பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது.

நெய்தல் நிலப்பண்புகளை விளங்க உரைக்கும் அப் பாட்டில், கடல்ஒலி அடங்க, ஊதைக்காற்று மணக்கும் கானற் சோலை கவினிழக்க, மணல் பரந்து மகிழ்ச்சியூட்டும் மாநகர்த் தெருக்களில் கூகைகள் குரல் கொடுக்க, நாற் சந்திகளில் பேய் உலாவவரும் நள்ளிருள் செறிந்த நடு யாமத்தே, மீன்களும் இயக்கம் ஒழிந்து இனிது கண்படுக் கும் என, நள்ளிருட்காலம் நன்கு எடுத்துரைக்கப்பட் டுளது.

அவ்வாறு மீனுறங்கும் அக்காலத்தும் காதலர், தம் வேட்கை நிறைவேறப்பெறாமையால் கண் உறங்கலின்றிக் கலங்கி வாழ்வர் எனக் காதலர்தம் வாழ்வும் காட்டப் பட்டுளது.

"ஓதமும் ஒலி ஓவின்றே; ஊதையும்
தாதுளர் கானல் தெளவென்றன்றே;
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோடு ஏறி,
ஆரிரும் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்;
அணங்குகால்கிளரும் மயங்குஇருள் நடுநாள்
..........................................
மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான் கண் துஞ்சிலன்; யாதுகொல் நிலையே!"

(நற்: நஉகக.)

---

## ௯0. வெண்கொற்றன்

கொற்றன் என்பது இவர் இயற்பெயர். இவர் பெயர்க்கு முன் வந்துள்ள வெண் என்ற சிறப்பு வருதற்குரிய காரணம் விளங்கவில்லை. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளது.

ஊதைக் காற்றாகிய வாடைவீசும் குளிர்காலத்தே ஈ முதலிய சிற்றுயிர்களின் தோற்றம் மிகுதியாம் என்பதும், அக்காலத்தே அவற்றால் மக்களே அல்லாமல், மாடு முதலாயினவும் பெருந்துயர் உறும் என்பதும், அக்காலத்து இராக்காலத்தே, ஈக்கள் தன்னை மொய்த்துத் துன்புறுத்தல் அஞ்சிய பசு, அவை தன்னைத் தீண்டாமை குறித்துத் தன் தலையினைப் பலகாலும் ஆட்டும் என்பதும், அவ்வாறு அது ஆட்டுந்தோறும், அதன் கழுத்தில் கட்டப்பெற்ற மணி ஒலிக்கும் என்பதும், எல்லாரும் உறங்கும் நள்ளிரவில் எழும் அம்மணி ஒலி, தனித்துத் துயில்உறாது, துயர்உற்று வாழும் மகளிர்க்குப் பேரச்சம் தரும் என்பதும் இவர் பாட்டில் விளங்க உரைக்கப் பெற்றுள்ளன.

“சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறையரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர்கொல் இறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன் நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.” (குறுந் : ௮௬)

## ௩௧. வெண்பூதனார்

தேவன், நாகன், பூதன் என்பன சங்ககாலத் தமிழ் மக்கள் தங்கள் மக்கட்கு இட்டு வழங்கிய தெய்வப் பெயர்களாம். வெண்பூதனார் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் வந்துளது; தம் முயற்சியால் வந்த பொருளைத் தாம் உண்ணுங்கால் உண்டாம் உயரிய இன்பத்தினை உள்ளவாறு உணர்ந்தவர் புலவர்,

இன்பங்களுள், ஈத்து உவக்கும் இன்பமே இறப்ப உயர்ந்ததாம்; அவ்வின்பத்தினும், முன்னோர் ஈட்டிய பொருளை, தான் வறிதே இருந்துண்ணல் இன்றித் தானே அரிதின் முயன்று முடித்த பெரும் பொருளைப் பிறர்க்கும் ஈத்து, தானும் உண்பனாயின் அந்நிலையில் உண்டாம் இன்பத்திற்கு, ஈடும், எடுப்பும் எங்கும் இல்லை என்ப; "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேஉள" எனப் பாராட்டப் பெற்றுப், பேரின்ப நிலைக்களனாய் விளங்குபவளாய பெண்ணொருத்தி தரும் இன்பத்திற்குத், தான் தேடிப்பெற்ற பொருளைத் தன் மனைநோக்கி வருவார்க்கு மகிழ்ந்து அளித்து, அருந்தி வாழும் வாழ்வால் பெரும் பேரின்பத்தையே உவமை காட்டுவர் ஆசிரியர் வள்ளுவனார் எனின், அவ்வின்பத்தின் சிறப்பினை என்னெனப் புகழ்வது! "தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால், அம்மா! அரிவை முயக்கு." தன் முயற்சியால் தந்த பொருளை உண்ணுவழி உண்டாம் இன்ப உயர்வினை, "தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்" என்ற குறளாலும் போற்றியுள்ளார். இவ்வுண்மை உணர்ந்த புலவர், வெண்பூதனார், அவ்வின்பத்தினைப் பலாக்கனியின் பெருஞ்சுவை தரும் பேரின்பத்திற்கு உவமை காட்டியுள்ளார்.

"தம்மில் தமது உண்டன்ன, சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவு."

தான் விரும்பிய தலைமகனுக்கே, தன்னை மணம் செய்துதர இசைந்து, அவ்விசைவினைப் பெற்ற அவன், வரைந்துகொள்ளும் முறையோடு வருவன் என்ற செய்தியையும் வெளியிட்டாள் தாய் என்பதறிந்த தலைவியும், அவள் தோழியும், அச்செய்தி கேட்ட பெருமகிழ்ச்சியால், “அவ்வாறு கூறிய நம் அன்னை, அமரர்க்கும் கிடைத்தற்கு அரிய அமிழ்த உணவை ஆரப்பெறுவாளாக ! பெரும்புகழ் நிறைந்த அப்பேருலகே அவள் இருந்து வாழும் உலகாகுக! என வாழ்த்தினர் எனக் கூறித் தமக்கு நன்மை புரிந்தார் நல்வாழ்வு வாழவிரும்பும் நல்லுள்ளமுடையர் தமிழர் என்ற செய்தியையும், அவர்கள் தேவர்உலக வாழ்வும், அத்தேவர் தம் அமிழ்தவுணவும் உயர்ந்த பண்பாடுடையன என்ற எண்ணமுடையராவர் என்ற செய்தியையும் அறிவித்துள்ளார் புலவர் :

“அரும்பெறல் அமிழ்தம் ஆர்பத மாகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ ! அன்னை ;
தம்மில் தமது உண்டன்ன சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வரும் என்றோளே.” (குறுந் : அ௩)

## ௩௨. வெண்மணிப்பூதி

இகர ஈறுகொண்ட பெயருடைமை நோக்கி இவரைப் பெண்பாற் புலவருள் ஒருவராகக் கொள்வாரும் உளர். வெள்ளூர்கிழார் மகனார் ஒருவரின் பெயரும் வெண்பூதியார் என வருதலை நோக்கின் அவ்வாறு கொள்வது பொருந்தாமை தெளிவாம். பூதி, திருநீறு எனப் பொருள்பட வரும் விபூதி என்பதன் தலைக்குறை. ஆகவே இவர் சைவராவர் எனக் கோடலும் உண்டு. அரியலூர்ப் பக்கத்தே வெண்மணி என்றோர் ஊர் உளது; இவரை அவ்வூரினராகக் கொள்வது பொருந்தும். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

களவொழுக்கம் மேற்கொண்ட ஓர் ஆண்மகன், தான் காதலித்த பெண்ணை விரைவில் மணந்துகொள்ளானாக, அதனால் வருந்திய அப்பெண், அவ்வருத்தத்தால் தன் தோள்களும் மெலிந்துவிட்டன; அம்மெலிவினைத் தாய் அறியின் தம் ஒழுக்கத்திற்கும், உறவிற்கும் கேடுண்டாம் என்பதை எடுத்துக்கூறி அவனை விரைந்து வந்து வரைந்து கொள்ள வேண்டுவாள், அதை விளங்க உரைக்காது, "தோழி! தலைவன் அழகினை நம் கண்களும் கண்டன; அவன் கூறிய இனிய சொற்களை நம் காதுகளும் கேட்டன; ஆனால் இப்போது அவனைக் காண்பதோ, அவன் சொல்லைக் கேட்பதோ அரிதாகிவிட்டது; இருந்தும் நம் கண்களும், காதுகளும், அதனால் கவலைகொண்டன அல்ல; ஆனால் இத் தோள் மட்டும், அவனைப் பெற்ற அன்று மகிழ்ந்தது; அவனைப் பெறமாட்டாமையால் இப்போது வாடி வருந்துவானேன்!" என்று கூறிக் குறிப்பால் உணர்த்தினாள் என்ற உயர்ந்த கருத்தமைய வந்துள்ளது அப்பாட்டு.

"கொண்கன்
கண்டன மன்எம் கண்ணே; அவன் சொல்
கேட்டன மன்எம் செவியே; மற்றவன்
மணப்பின் மாணலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்ப எம்தடமென் தோளே."

(குறுந்: ௨௯௯)

## ௩௩. வெள்ளாடியனார்

இவர் பெயர், வெண்வட்டியார், வேளாவட்டனன் என்றெல்லாம் காணப்படும். பொருட் சிறப்பு, அப் பொருளைத் தேடிப் பெறும் அருமை, அப் பொருளை அடைய எண்ணும் உள்ளத்தின் உரம் ஆய இவை குறித்துப் புலவர் கூறும் பொருளுரை, பொன்னே போல் போற்றத் தக்கனவாம். ஒரு வினையைத் தொடங்குவார், தொடங்கிய அவ்வினையை இடையே கைவிடுதல் ஆண்மையன்று; இடுக்கண்கள் பல அடுக்கி வரினும், அவை நோக்கி எடுத்த வினையை இடையே விடாது நின்று முடித்தற்கு உள்ளத்தே ஊக்கமும் உரமும் மிகமிகத் தேவை. பொருள் பெற விரும்புவார், அதை எவ்வாற்றானும் பெற்றுவிடுதல் வேண்டும் என விரும்புதல் கூடாது; அப் பொருள் அறவழியுறுதலையே விரும்புதல் வேண்டும்; இடுக்கண்படினும் இளிவந்த செய்தல் கூடாது; ஈன்றாள் பசி காணும் பருவத்தும், சான்றோர் பழிக்கும் செயல் புரிதல் கூடாது; பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல்குரவே தலை;" ஆகவே, அப்பொருள் அறவழி வருதலையே விரும்புதல் வேண்டும்; அதற்கு ஏற்ப அருஞ்செயல் ஆற்றல் வேண்டும்; புலி, பசியால் பெருந்துயர் உற்ற காலத்தும், இடப் பக்கத்தே வீழ்ந்ததனை உண்ணாது; அத்தகைய உள்ள உரம் வேண்டும் என்றெல்லாம், பொருள்பெற விரும்புவான் மேற்கொள்ளும் வினைத் தூய்மையினை விளங்க உரைத்துள்ளார்.

"தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்து உயிர் மறுகுவதாயினும் இடப்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக்கு அகன்ற காலை." (அகம்: உக)

மனிதனை மாண்புடையனாக்குவது மானமும், நாணமும் என்ற இவ்விரு நற்பண்புகளே ஆம்; இவை இரண்டும்

பெற்றவரோ பழி கண்டு அஞ்சுவர்; பழிகண்டு அஞ்சும் அறிவு அவர்பால் உண்மையினாலேயே, அவர் அறவழி நடக்க எண்ணுகின்றனர்; இவ்விரு நற்பண்புகளும் இல்லாதார் செய்யும் இழி செயல்களை எண்ணிக் கூறலும் இயலாது!

மனைவிபால் கொண்ட மட்டற்ற அன்பால் அவளைப் பிரியாது உறைய விரும்புவனாயின், அவனால் பொருளால் பெறலாம் பேறுகளைப் பெறல் இயலாது; பொருளின்றி வாழ்வாரை, உலகத்தார் பழித்து உரைப்பர்; அதனால் மனைவி, எத்துணை மாண்புநிறை பேரழகு உடையளாயினும் அவளைப் பிரிதல் வேண்டும்; அப்பொருளைத் தேடிச் செல்லும் பெருநெறி எத்துணைக் கொடுமை நிறைந்ததாயினும் அந்நெறி செல்ல அஞ்சாமை வேண்டும்; பிரிந்து சென்று பொருள் தேடிக் கொணர வேண்டும் என்ற எண்ணத்தை உலகம் பழிக்கும் என்ற எண்ணம் உண்டாக்குகிறது. அதனால் அருமை மனைவியையும் பிரிந்து பொருள் தேடிச் சென்றனர் தமிழர் என்ற ஓர் அரிய உண்மையினையும் உணர்த்தியுள்ளார் புலவர்.

"உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கரும் கடத்திடை
எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தளை யாக வைகி மாண்வினைக்கு
உடம்பு ஆண்டு ஒழிந்தமை யல்லதை
மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே."

(அகம் : உக.)

## ௩௪. வெள்ளியந்தின்னனூர்

வெள்ளியந்தின்னனூர் என்ற இப்பெயர் இவர்க்கு ஏன் இடப்பட்டுளது? இவர் தம் பிறப்பு, குலம் யாவை? என்பன குறித்து ஏதும் அறிதற்கில்லை. இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது. ஒரு பொருள் ஒருவர்க்கு இன்பம் அளித்தலும், அன்றித் துன்பம் தருதலும், அவர் தம் உள்ள இயல்பை ஒட்டியதாம்; ஒருவர் உள்ளம் மகிழ்ந்திருப்புழி, காணும் எப்பொருளும் மகிழ்ச்சியினை அளிக்கும். அவர் தம் உள்ளம் துன்பத் தொடர்புடையதாயவழி, அவையே துன்பம் தருவனவாய்த் தோன்றும். ஆகவே, உலக இன்ப துன்பங்களுக்கு உள்ளமே காரணமாம். இதை உணர்ந்தே, "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே; அல்கா நல்குரவு அவாவெனப் படுமே" என்று உரைத்துச் சென்றனர் பெரியோர். இக்கருத்து வெளிப்படும் வகையில் வந்ததொரு பாட்டைப் புலவர் பாடியுள்ளார்; டலால் நாறும் பரதவர் தம் சிற்றூர், அப்பரதவர் மகளைக் காண்டற்கு முன் இன்பம் தந்தது; அவளைக் கண்டு, ஆனல், அவளைப் பெறமாட்டாக் காலத்தே அச்சிற்றூர் துன்பம் தருவதாய் இருந்தது எனக் கூறினன் ஒரு தலைவன் என்று கூறியுள்ளார் அப்பாட்டில். இன்ப, துன்பங்கட்கு உள்ளமே காரணம்; அவ்வுள்ளத்தைத் தொழிற்படுத்தவல்ல ஆற்றல் அவளுக்கே உண்டு எனக் கூறும் ஆண் உள்ளத்தின் அழகினையும், பெண்ணுலகின் பெருமையினையும் பாராட்டுவோமாக!

"துறைநணி யிருந்த பாக்கமும் உறைநனி
இனிதுமன்; அளிதோ தானே......
மீனெறி பரதவர் மடமகள்
மானமர் நோக்கம் காணு வூங்கே."

(நற் : ௧0௧)

# ௯௫. வெள்ளெருக்கிலையார்

வேள் எவ்வியைப் பாடிய புலவர்கள் கபிலர், குடவாயிற் கீரத்தனார், நக்கீரர், பரணர், மாங்குடி கிழார், மாமூலனார் போன்றார் காலத்தே வாழ்ந்து, அவர்களைப் போன்றே அவனைப் பாடியுள்ளார். வேள் எவ்வியைப் பாராட்டிய பாராட்டிலேயே, அகுதை என்பானொரு வீரனின் கொடைச் சிறப்பினையும் பாராட்டியுள்ளார். வேள் எவ்வி, பாரிக்குரிய குடிவழி வந்தவன்; இவனுக்கு உரிய நாடும் ஊரும், மிழலைக் கூற்றமும், நீடூருமாம்; வாட்படை, வேற்படை மிக்க பெரும்படை யுடையவன்; தனக்குப் பணியாத பகைவராயினார் சிலரை வென்று, அவ்வெற்றிக் களிப்பால், அப்பகைவர்க்கு உரிய அரிமணம் என்னும் ஊர்க்குப் புறத்தே உள்ள உறத்தூர் எனுமிடத்தே தன் வீரர்க்குப் பெருஞ் சோறளித்து விழாக் கொண்டாடினான்; தன் நண்பன் அன்னி என்பான், திதியன் என்பானொடு பகைத்தவழி, அவனொடு பகைத்தல் அறிவுடைமையன்று என அறிவுரைகூறிய அரிய நண்பன்; இவனுக்குரிய மிழலைக் கூற்றம், தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியனால் கைப்பற்றப்பட்டது. தன்னைப் பாடிவரும் பாணர் முதலாயினார்பால் பேரன்புடையவன்; இதனால் அப்பாணரும் அவனைப் பெரிதும் விரும்புவாராயினர்; அவன் இறந்தான் எனக்கேட்ட பாணர் பலரும், அவன் இறந்த பின்னர்த் தம் கையாழ் இருந்து பயனுறுதல் இல்லை என எண்ணியவராய், அதை முறித்துப் போட்டுப் புலம்பினர் எனின், அவர், அவன்பால் கொண்டிருந்த ஆர்வத்தினை அளவிட்டுக் காணல் ஆகுமோ? இத்தகைய பெருமை யுடையானாகிய வேள் எவ்வி இறந்தான் எனக் கேட்டு வருந்திய புலவர்களுள் வெள்ளெருக்கிலையாரும் ஒருவர்.

ஒருமுறை பகைமேற் சென்ற எவ்வி, ஆங்கே அரும் போர் ஆற்றி இறுதியில் இறந்தான்; அவன் அப்போரில் விழுப்புண் பல பெற்றுப் பெருமையுற்றான்; போர்க்

களத்திருந்து மீண்டார் சிலர், ஆங்கு எவ்விக்கு உண்டான இறுதி நிலையினை, ஊரில் உள்ளார்க்கு எடுத்துக் கூறினர்; அச் சொல் புலவர் காதிற்கும் எட்டிற்று; எவ்வியின் கொடைக்குணம், பொருள்வளம், படைப் பெருமை ஆகியன கண்டு கண்டு மகிழ்ந்த புலவர்க்கு அவர் கூறியன ஆற்றெணுத் துயர் அளிப்ப ஆயின; அவர் கூறியன பொய்யாகிப் போர்க்களம் புகுந்த எவ்வி பெற்ற வெற்றி யனைப் பெருமையுற மீள்வதை அவர் உள்ளம் அவா விற்று; அவர் பேரவா, அவர் கூறியன பொய்யாகுமாக! பொய்யாகுமாக! எனப் பலகால் கூறி வேண்டவும் தூண் டிற்று; வேண்டியும் பயனென்? மாண்டான் மீண்டா னல்லன்; இறந்த அவன் பீடும், பெருமையும், பெயரும் பொறித்த கல்லை நட்டு வழிபடலாயினர் அவன் சுற்றத் தார்; அவன் மனைவி, அச் சிறு இடத்தை மெழுகிப், புல்லைப் பரப்பி, அதன்மீது பிண்டம் வைத்துப் படைக்கும் காட்சியைக் கண்டார் புலவர்; கண் கலங்கினின்றூர். எவ்வி யின் மனைநோக்கி இம் மாநிலத்துள்ளார் அனைவருமே அன்றே வருவர்; வருவார் பலரோடும் இருந்து உண்டு இறும்பூது கொள்ளும் எவ்விக்கா இச் சிறு பிண்டம்! என எண்ணி எண்ணி வருந்தினூர். அவ்வாறு அவர் வருந்திய வருத்தம் இரு பாக்களாக உருக்கொண்டது.

எவ்வி இறந்தான் என்ற செய்தி பொய்யாகுமாக என வேண்டிய புலவர், ஊரார் பலரும் ஒன்று நிகழ்ந்து விட்டதாகக் கூறினூராகவும், இறுதியில் அது நிகழாது போனதாக ஒரு நிகழ்ச்சி தம் காலத்தே நிகழ்ந்ததை எடுத்துக்கூறி, அதுபோல் இவர் கூறுவனவும் பொய்யாகுக என்று கூறியுள்ளார்.

வள்ளலும் வீரனுமாக அகுதை என்பானெருவன் இருந்தான்; அவன் பகைவர் எறிந்த ஆழிப் படையால் அழிந்தான் என்று பலர் கூறினர்; ஆனல் இறுதியில், அவன் அப் படையால் அழிந்திலன் என்பது உறுதி யாயிற்று; இந் நிகழ்ச்சியை எடுத்துக் கூறி, அகுதை ஆழியால் இறந்தான் என்ற சொல் பொய்யானதைப்

போன்றே எவ்வி விழுப்புண்பெற்று வீழ்ந்தான் என்ற சொல்லும் பொய்யாகுமாக எனக் கூறியுள்ளார்.

"பொய்யா கியரோ! பொய்யா கியரோ!
பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்தாள் அகுதைகண் தோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ!
இரும்பாண் ஒக்கல், தலைவன்; பெரும்பூண்
போரடு தானை எவ்வி, மார்பின்
எஃகுறு விழுப்புண் பல என
வைகுறு விடியல் இயம்பிய குரலே."

"நோகோ யானே! தேய்கமா காலை!
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்கு உண்டனன் கொல்!
உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே."

(புறம்: உ௩௩, உ௩௪)

## ௯௩. வெள்ளை மாளர்

வெள்ளை மாளர் என்ற இப் பெயரன்றி, இவர் வரலாறு குறித்து வேறு குறிப்பு ஒன்றும் கிடைத்திலது; இவர் வரலாறு குறித்தோ, அன்றி இப் பெயர் குறித்தோ ஒன்றும் விளங்காமையால், இவர் பெயர் வெள்ளை மாளனார் எனவும் கொள்ளக் கிடக்கின்றது எனவும், இவர் பெயர் வெள்ளைமாளர் என்பதன்று, வெள்ளை மாறனார் என்பதாம் எனவும் பலரும் பலவாறு கூறுவாராயினர்.

போர் மேற்சென்று விழுப்புண் பெற்று வீரர் பலரும் வீடு திரும்பினாராக, ஒரு வீரன் மட்டும், பகைவரைப் பாழ் செய்தன்றி மீளேன் எனக் கூறிப் பெரும்போர் செய்தமையால் அவன் தேர், காலந்தாழ்த்து வந்தது எனக் கூறிப் பழங்கால மறக்குடி மாண்பினை வாழ்த்தியுள்ளார் புலவர். வீரர் விழுப்புண் பெற்றாராக, புண்பெற்றாரைப் பேய் முதலாயின அண்டி அச்சுறுத்தாமை கருதிய, அவ் வீரர்க்கு வாழ்க்கைத் துணையென வந்த மாண்புடை மனைவியர், வேப்பிலை கொணர்ந்து வீட்டு இறப்பில் செருகுவர்; காஞ்சிப் பண் பாடுவர்; வெண்சிறு கடுகு புகைப்பர்; அவர்தம் இச் செயல்களால் மறவர்சேரி ஆரவாரம் நிறைந்து தோன்றும் என்று கூறிப் பழந்தமிழர் தம் போர்ப் பண்பினைப் போற்றிப் புகழ்ந்துள்ளமை நோக்குக.

"வேம்புசினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்,
எல்லா மனையும் கல்லென் றவ்வே;
வேந்து உடன்று எறிவான் கொல்லோ
நெடிது வந்தன்றால் நெடுந்தகை தேரே." (புறம்: உசுக)

# ௩௭. வேட்ட கண்ணன்

வேட்டம் : வேட்டை ; இவர் வேட்டுவர் குலத்து வந்தவர் ; கண்ணன் என்ற இயற் பெயருடையவர் ; வேடர், யானை முதலாம் பெரு விலங்குகளையே யல்லாமல் குறும்பூழ் போலும் சிறு பறவைகளையும் வேட்டையாடுவர் ; "யானை வேட்டுவன் யானையும் பெறுமே : குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே" என்ற தொடரை நோக்குக. இவர் தாம் வேடர் என்பதற்கேற்ப, நெய்யை நிறையவிட்டுப் பொரித்த குறும்பூழ் இறைச்சி இனிமை மிக்கது என்று கூறியுள்ளார். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

தலைவன், மணத்திற்குரிய முயற்சிகளை மேற்கொண்டான் என்ற நற்செய்தி நல்கிய அவன் குற்றேவல் மகன், நிறை நெய்யிட்டுப் பொரித்த காடை நல்லிறைச்சி ஆரப் பெற்று அகமகிழ்க என வாழ்த்தினள் தோழி என்ற பொருளமைய வந்துள்ளது அப்பாட்டு. தலைவன் குற்றேவலர் பலரைக் குறைவறப்பெற்ற பெருமையாளன் என்பதற்கேற்ப, தலைவியும், விருந்தினர்க்கு, நெய் கனி குறும்பூழ் இறைச்சியைக் குறைவறக் கொடுக்கும் பெருமையள் அவள் எனக்கூறி, "ஒத்த தலைவியும் தலைவனும் காண்ப" என்ற இலக்கணத்திற்கு உதாரணம் அளித்துள்ளார் புலவர். நல்லன கூறி நன்மை புரிந்தார்க்கு நாவிரும்பும் நல்லுணவு அளித்து நன்றி பாராட்டல் வேண்டும் என்ற நல்லுரையினையும் நல்கியுள்ளார் புலவர். இத்துணைப் பெரும் பொருளும் ஒருங்கே தோன்ற உள்ளது ஒரு சிறு பாட்டு ; அது இது :

"நெய்கனி குறும்பூழ் காயமாக
ஆர்பதம் பெறுக தோழி ! அத்தை ;
பெருங்கல் நாடன் வரைந்தென ; அவனெதிர்
நன்றோ ? மகனே ! என்றனென் ;
நன்றே போலும் என்று உரைத் தோனே."

(குறுந் : ௩௮௯)

## ௩௮. வேளாசான்

ஆசான், ஆசிரியன் எனும் பொருள் உடையது; அந்தணராய்ப் பிறந்தார் அனைவரும் வேள்வி இயற்றும் ஆசிரியராகி விடுவதிலர்; அவருட் சிலர்மட்டுமே அத்தொழில் உடையராவர்; மதுரையில் வாழ்ந்த அத்தகைய ஆசிரியர்களுள் நம்புலவர் ஒருவராதலின், இவர் மதுரை வேளாசான் என அழைக்கப் பெற்றார்.

பழங்கால அரசர்கள், ஒருவரையொருவர் பகைத்துப் போரிட்டு வாழ்வதையே வாழ்வாகக் கொண்டிருந்தமையால், அக்காலத்தில் நாட்டில் எப்போதும் போர் நிகழ்ந்து கொண்டே யிருக்கும்; இதனால் ஊர்கள் பாழாகும்; மக்கள் மடிவர்; நாட்டில் அமைதி குன்றும். இக்கொடுங் காட்சியினைக் காணப் பொறாத அக்காலப் பெரியோர்கள், போர்மேற் கொண்ட இரு அரசர்களையும் அடுத்து அறவுரை கூறிப் போர் நீக்க முயன்றுள்ளனர்; அவ்வாறு தூதுபோதல், ஆன்றவிந்தடங்கிய சான்றோர்க்கே இயலும் ஆதலின், "ஓதலும், தூதும் உயர்ந்தோர் மேன" எனத் தொல்காப்பியர் விதியும் வகுத்துளார்.

ஓர் அந்தணன் தூது செல்ல, போர் நின்ற நிகழ்ச்சி யொன்றைப் புலவர் கூறியுள்ளார். இரண்டு பெரிய அரசர்கள் பகைத்தனர்; ஓர் அரசன் கோட்டையை மற்றோர் அரசன் முற்றுகை செய்துவிட்டான்; கோட்டைக்குரியோன், கோட்டையின் வாயிலை அடைத்துச் சீப்புச் செறித்துவிட்டான்; முற்றுகையிட்டிருப்போனும், மதில் மீது ஏறிப் போரிடுதற்கு வேண்டும் ஏணிகளையும் பொருத்திவிட்டான்; இவ்வாறு இருவரும் போருடற்றற்கு ஆவன புரிந்து இரவு கழிவதைக் காத்திருந்தனர்; அந்நிலையில், புறத்தே தங்கியிருக்கும் அரசன் பாசறையினின்றும் வந்த ஒரு பார்ப்பான், தளர்ந்த மேனியும், தள்ளாடிய நடையும் உடையனாய்க் கோட்டைக் காவலனையும் கேட்காதே உட்புகுந்தான்; சிறிது நேரத்திற்கெல்லாம்

வெளிப்போந்து விட்டான்; அவன் வெளிப் போந்த பின் னேரத்திற் கெல்லாம், உள்ளிருக்கும் அரசனும், அடைத் திருந்த சீப்பை நீக்கி வாயிலைத் திறந்துவிட்டான்; புறத் திருக்கும் வேந்தனும், கோட்டையைத் தாக்கச் சார்த்தி யிருந்த ஏணைகளை ஒழித்துவிட்டு ஊர் திரும்பலாயினன். இவ்வாறு போர் ஒழிந்தமைக்கு அந்தணனே காரணம், அவன் கூறிய அறவுரைகளே காரணம் என அறிந்தார்; அவ்வந்தணனைப் பாராட்டினர்; அப்பாராட்டுரையினைப் பாட்டாக்கித் தந்துள்ளார் புலவர்.

> " வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
> உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
> எல்லிவந்து, நில்லாது புக்குச்
> சொல்லிய சொல்லோ சிலவே; அதற்கே
> ஏணியும், சீப்பும் மாற்றி,
> மாண்வினை யானையும், மணிகளைந் தனவே."
>
> (புறம்: ௩0௫)

## ௩௨௯. வேளா தத்தர்

தத்தன் என்பது இவர் இயற்பெயர்; இவர் பெயர்க்கு முன்வரும் வேளா என்ற அடை ஏன் வந்தது என்பது விளங்கவில்லை; வேளாளன் தத்தன் என்பது வேளாதத்தன் எனக் குறைந்தது எனக் கூறுவர் சிலர்; அஃது உண்மையோ, பொய்யோ அறிதற்கில்லை.

இவர் மாலைக் கடலிடையே தோன்றும் மதியத்தின் அழகிய காட்சியினையும், மலைகளிடையே ஓடி இழியும் அருவிகளின் வெண்ணிறக் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்தவர்; தலைவன் ஞாயிறு போன்ற அறவுள்ள முடையவன்; அவன் மனைவி, ஞாயிறு, கீழ்த் திசைக்கண் இருப்பின் கிழக்கு நோக்குவதும், அவன் மேற்றிசை செல்லின் மேற்கு நோக்குவதும், அவன் நடுவானத்தே விளங்கின் உச்சியை நோக்குவதும் ஆய இயல்பினையுடைய நெருஞ்சி மலர்களைப்போல் தலைவன் எண்ணியதையே எண்ணும் இயல்புடையாள் எனக், கணவன், மனைவியர்க்குள்ள உறவு முறையினையும் உணர்ந்தவர். இவ்வளவு பெருங் கருத்துக்களையும், சிறு செய்யுளொன்றில் அடக்கிக் கூற வல்ல ஆற்றல் வாய்ந்தவர்.

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதுகின்றான் என உணர்ந்த தோழி, தலைமகள்பால் அதைக்கூறி, 'அவன் பிரிந்த வழி, எவ்வாறு ஆற்றியிருப்பையோ' என்று கவன்ற தோழிக்கு, "தோழி! அவர் எண்ணமே, என் எண்ணமாம் ஆதலின் ஆற்றுவேன்" என்று கூறினாள் என்பதை இந்தப் பாட்டின் மூலம் புலப்படுத்துகின்றார் புலவர்.

"எழுதரு மதியம் கடற் கண் டாஅங்கு
ஒழுகு வெள்ளருவி, ஓங்குமலை நாடன்,
ஞாயிறு அனையன்; தோழி!
நெருஞ்சி அனைய, என்பெரும்பணைத் தோளே."

(குறுந்: ௩௧௫)

## ௩0. முடிவுரை

கல்வியும் செல்வமும் நாட்டின் இரு கண்களாம்; செல்வமும், கல்வியும் சிறக்கப்பெற்ற நாடே, உலகில் சீரும், சிறப்பும் பெற்ற பெருநாடெனப் போற்றப்பெறும். அவை வாய்க்கப்பெறு நாடு, நாடாகாது; காடெனவே காட்சிதரும். கல்வியும், செல்வமும் ஒன்றையொன்று இன்றியமையாதன; அவற்றுள் ஒன்றைப் பெற்று, ஒன்றைப் பெறு நாடு பெருமையுறுவதில்லை என்பதெல்லாம் உண்மையேயெனினும், அவ்விரண்டனுள் கல்வியைப் பெற்றுச் செல்வத்தைப் பெறு நாடு பெருங் கேடுறுவதில்லை; ஆனால், இதற்கு மாறாகச் செல்வத்தைச் சிறக்கப் பெற்றுக் கல்வியைக் கண்ணெடுத்தும் பாராத நாடு, கல்வி, செல்வம் ஆய அவ்விரண்டினையும் ஒருங்கே இழந்த நாட்டைக்காட்டினும் மிக்கதொரு பெருங் கேடுற்றுப் பாழுறும்.

கல்வி, செல்வம் ஆய இவ்விரண்டினையும் ஒருங்கே பெறுதல் அரிதினும் அரிதாம். "இரு வேறு உலகத்தியற்கை; திருவேறு; தெள்ளியராதலும் வேறு." எனக் கூறுவர் வள்ளுவப் பெருந்தகையாரும். கல்வியுள்ள இடத்தே, செல்வம் நில்லாது; செல்வம் உள்ள இடத்தே, கல்வி நில்லாது. கல்வியுடையார், செல்வமுடையாராதலும், செல்வமுடையார், கல்வியுடையாராதலும் இலர்; அறிவுடையார், பொருளினும் அறிவே ஆற்றலுடையது என்பதையும், "தொட்டனைத்தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு," "தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு," "வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்ற உண்மைகளையும் உணர்ந்தவராதலின், அப் பொருள்பெறு முயற்சி மேற்கொள்ளாது, அறிவுவளர் வழியினையே மேற்கொள்வதால், பொருள் அவர்பால் அடைந்திலது.

பொருளுடையார், தம் அறியாத் தன்மையினால் பொருளே எல்லாம் என எண்ணி விடுவதாலும் செல்வத்தை இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த

வருத்தலும் வல்லார்க்கே இயலும். ஆதலின், அவர்கள், தம் வாழ்நாட்களை யெல்லாம், அப்பொருளை ஈட்டலும், காத்தலுமாய தொழிற்கே கழித்துவிடுவதாலும் அன்னார் அறிவைப் பெற வேண்டும் என்ற எண்ணமற்றவராகி விடுகின்றனர். இவ்விருவர் நிலைகளும் குறைபாடுடையனவே; அறிவுடையார் நல்வாழ்வு வாழ, அவர்க்குப் பொருள் தேவை. பொருளுடையார், அப் பொருளை நல்வழியிற் பேண, அவர்க்கு அறிவு தேவை; ஆகவே, ஒவ்வொருவரும் இரண்டையும் பெறுதல் வேண்டும். ஆகவே, எந்த நாட்டில், எந்தக் காலத்தில், மிகுந்த கல்வியும், திரண்ட செல்வமும் ஒருங்கே பெருகி மண்டிக் கிடக்கின்றனவோ, அந்த நாடு ஒன்றுதான். அக்கால நாடுகளுள்ளே, நாகரிகத்தின் நடுநாயகமாய் விளங்கும்.

அவ்வாறு கல்வியும், செல்வமும் சிறக்கப் பெற்ற நாட்டிலும் அவ்விரண்டனையும் ஒருங்கே பெற்றார் அரியராவர்; பொருள் பெறாமல் அறிவொன்றையே பெற்றாரும், அறிவு பெறாமல், பொருளொன்றையே பெற்றாருமே மிகப் பலராவர்; ஆதலின், அந்நாட்டில் பொருளுடையார்க்கு அறிவுடையார் வழிகாட்டுவோராகவும், அக் கல்வியுடையார் காட்டிய வழியில், செல்வம் உடையார் செல்வோராகவும் வாழ்தல் வேண்டும். அதனால் அவர்களும் வாழ்வர்; உலகமும் வாழும். அவ்வாறின்றி, உலகம் பொருளுடையார் வழி நடப்பது என்றாகிவிட்டால், அவ்வுலகம் அவர்கள் அறியாமை வயப்பட்டு அழிதல் உறுதி.

உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கின், முற்றிலும் முரண்பட்ட இரு பொருள்கள், ஒன்றையொன்று இன்றியமையாதனவாய்க் கொண்டு இணைந்து தொழில் புரிவதாலேயே, உலக வாழ்வு வளம்பல பெற்று, இன்பம் பெருகி இயங்குகிறது என்ற உண்மையுணரப்படும். அறிவுருவாகிய உயிரும், அறிவில்லா வுடலும் மாறுபட்டனவே யென்றாலும், அவை ஒன்றையொன்று இன்றியமையா நிலையில், ஒன்றுபடுவதாலேயே, மக்கள் வாழ்வு நடைபெறுகிறது. நுண்பொறிகளை ஆக்கித் தரும் அறிவு நூல்

கைவரப் பெற்றாரும், அறிஞரும் அந் நுண் பொறிகளை இயக்கும் கல்லா மக்களும் முற்றிலும் மாறுபட்டவரே யெனினும், அவர் இருவரும் ஒன்றுபட்டுழைப்பதாலேயே, உலக மக்கள் வாழ்வு வளம் பெறுவதைக் காண்கிறோம்.

சட்டக்கலை தேர்ந்த நீதியாளனும், படைபல பயின்று பெற்ற உடல்வலியுடையானும், முற்றிலும் முரண்பட்ட இருவேறு நிலையினரே யெனினும், முன்னோன் மொழி வதைப் பின்னோன் ஏற்றுப் போற்றி நடப்பதாலேயே உலகில் அமைதி நிலவக் காண்கிறோம். இந்நிலை மாறின், உலகில் யாண்டும், எக்காலத்தும் அமைதி காண்பது அரிதாகிவிடும். கண்ணும், காதும் முதலியன ஒன்றன் நன்மை தீமைகளைப் பிரித்தறியும் உணர்வுடைய அறிகருவி களாம்; கையும் காலும் முதலாயின, அவ்வுணர்வற்றுத் தொழிலாற்றுதற்கென்றே தோன்றிய தொழிற் கருவி களாம். கண்ணும், காதும் முதலாய அறி கருவிகள் அறி வித்தவாறே, கையும் காலுமாகிய தொழிற் கருவிகள் தொழிலாற்றினால்தான், உடலிற்கு ஊறுண்டாகாது இன்பம் உண்டாம். அவ்வாறின்றி, கையும், காலும் செய்யும் அவ்வளவு தொழிலையும் பார்த்துக் கொண்டி ருக்கவே, கண்ணும் காதும் உள்ளன என்று கொண்டு இயங்குவதாயின், உடல் அழிவது உறுதி, உறுதி, முக் காலும் உறுதி. இவ்வாறே, ஒரு நாட்டில் நல்வாழ்வு நடைபெற வேண்டுமாயின், ஏவும் வினைமுதல் கல்வியாள ராகவும், இயற்றும் வினைமுதல் செல்வராகவும் அமைதல் வேண்டும்.

நம் தமிழகம், பண்டு பெருமைக்குரிய நாடாக விளங் கிற்று என்றால், அதற்குக் காரணம் அக்காலத்தில் அறிவன அறிந்த அறிவுடையோராய்ப் புலவர் சொல்வழி, அக்கால அரசர்களும், பிற செல்வர்களும் பின்பற்றி நடந்தனர் என்பதே; ஆகவே, ஒரு நாடு வாழ்வதும், தாழ்வதும் அந்நாட்டுச் சான்றோர் வாழ்வாலும், தாழ்வாலுமேயாம் என்பதை உணர்ந்து வாழ்ந்தனர் அக்காலத் தமிழர். "எவ் வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

என்றார் ஔவையார். "சான்றோர் பலர், யான் வாழும் ஊரே" என்றார் பிசிராந்தைப் பெருந்தகையார்; "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே; நிகழ்ச்சி அவர்கட்டாகலான்" என்றார், ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார். "தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின்றேல், மண்புக்கு மாய்வது மன்" என்றார் திருவள்ளுவனார்.

இவ்வுண்மை உணர்ந்த அறிஞரும், அரசரும், பண்டு நம் தமிழகத்தே பெருக வாழ்ந்தனர். அக்கால அறிஞர்கள், தம் வயிற்றுப்பாட்டிற்கு வழி காண்பதே வாழ்க்கை; அதற்காகப் பிறரைப் பாடிப் பிழைப்பதே தம் தொழில் என்பதை மறந்து, தவறு கண்டவழி, அத் தவறு செய்தான் நாடாள் அரசனே யெனினும், 'அவன் அரசன்; நமக்கு வேண்டும் பொன்னும், பொருளும் அளித்துப் புரப்பவன்; ஆகவே, அவனைக் கடுஞ் சொல் கூறிக் கண்டித்தல் கூடாது' என எண்ணாது, இடித்துக் கூறித் திருத்துவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அரசரும் தம்பால் வந்து நின்று இரந்து நிற்கும் எளிய வாழ்க்கையினையுடைய புலவர்கள், தம்மை அண்டிப் பிழைக்க வந்தவரேயல்லால், அறிவூட்ட வந்தவரல்லர் என்று இகழ்ந்துவிடாது, அவர் அறிவினுக்கடிபணிந்து, அவர் ஆட்டியவாறு ஆள்வதே அரசர்க்கு அழகு எனக் கொண்டு, அவர் கூறும் பொருளுரைகளைப் பொன்னேபோல் போற்றி மேற்கொண்டனர். இவ்வாறு புலவர் வழிகாட்ட, அவ்வழியே அரசர்கள் சென்ற காரணத்தால், செந்தமிழ் நாடு சீரும், சிறப்பும் செழிக்க, பாரோர் போற்றும் பெருநிலையுற்றுத் திகழ்ந்தது.

இவ்வாறு நாடு வாழ, நல்லறிவூட்டி வாழ்ந்திருந்தனர் புலவர் நானூற்று அறுபத்தெண்மர். அவர்கள் நானூற்றறுபத்தெண்மரும், புலமையுடைமையால் ஓரியல்புடையராய்க் காணப்படுகின்றனரே யெனினும், குலத்தால், குணத்தால் மேற்கொண்ட தொழிலால், ஆற்றிய தொண்டால் அவர் பல்லாற்றானும் வேறுபட்டவரேயாவர். சங்க காலத் தமிழ்

மக்கள், ஆயர், வேட்டுவர் எனவும், பாணன், பறையன் எனவும், அந்தணன், அரசன் எனவும் தொழில் பற்றிப் பிரித்தழைக்கப் பட்டுள்ளனரெனினும், அப்பிரிவுணர்ச்சி, அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ந்து வாழ்தற்கு வழி செய்வனவாய கல்வி, பொருள் ஆகிய இவைகளைப் பெறுதற்குச் சிறிதும் தடையாய் நிற்கவில்லை. பிரித்துணர்ந்து பாழ் செய்யும் பொல்லாங்கில்லா நல்வாழ்வு பெற்றிருந்த காரணத்தால், அந்தணர்க்கும் அரசர்க்கும் அறமுரைக்க வல்ல அறிவுசான்ற புலவர் பெருமக்கள் பலர் அப்பல்வேறு குடிகளினும் வந்து பாரோர் போற்ற வாழ்ந்தனர்.

படிக்க ஓர் இனம்; பாடுபட ஓர் இனம் என்ற இழி நிலை நிலைபெறுவதால், ஓர் இனம் படித்துப் பாராண்டு உயர, ஏனையோர் எழுத்தறிவு பெறும்வாய்ப்பும் இலராய்ப் பாட்டாளிகளாய்ப், பசியும், பிணியும் உற்றுப் பாழுறுவதின்றி, எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடி வந்தார் அனைவரும் கற்றற்குரியவர் என்ற உயர்நிலை பெற்றுத் திகழ்ந்த காரணத்தால், பண்டைத் தமிழகத்து எல்லாக் குடிகளினும், இறப்ப உயர்ந்த கல்வியறிவு பெற்றுக் கவினுற்று வாழ்ந்தாரைக் காணுகின்றோம்.

அக்கால அரசரும், செல்வரும், புலவர்கள் எக்குடிப் பிறந்தாராயினும், அவர்தம் குடிகொண்டு குறை காணாது, அவர்தம் அறிவறிந்து, அருகழைத்து, அவர் வேண்டுவன வெல்லாம் அகமகிழ்ந்தளித்துப் போற்றிப் பாராட்டுவாராயினர்.

கல்வி, வாழ்வை வளமாக்குதற்காம் செல்வந்தரும் கருவி எனக்கொண்டு கற்கும் இக்கால மக்களைப் போன்றவரல்லர் பழந்தமிழர்; கருத்து விளக்கத்திற்காகவே, அவர்கள் கல்வி கற்றனர். தம்மை வாழவைக்கும் வழித்துணை, கல்வியொன்றே என்றும் கருதிலரல்லர்; வாழ்வளிக்கும் வளம்பெற அவர்கள் வேறு வழிகளைக் கண்டிருந்தனர். முயற்சி திருவினை ஆக்கும் என்ற மூதறிவினராதலின், உழவு, நெசவு போன்ற கைத்தொழில்களையும், வாணிபத் துறைகளையும் மேற்கொண்டு வளம் பலபெற்று வாழ்ந்

தனர்; இவ்வாறு செல்வம் சேர்க்கும் வழிகளைச் சிறக்க வுணர்ந்திருந்த அவர்கள், செல்வமே யெல்லாம் என்ற எண்ணமுடையராய் இருந்துவிட்டாரல்லர். செல்வம், உடல்வாழத் துணைபுரிவனவற்றுள் தலையாயதேயெனினும், உயர்ந்தோர் போற்றும் உயர்வாழ்வுபெற, அதன் துணை ஒன்றே போதாது; உயிர்க்குணங்களை வளர்த்து உயர்ந் தோராகக் கல்வியின் உறுதுணையே இன்றியமையாதது என உணர்ந்து, கல்வியை விரும்பிக் கற்றனர். அதனால், வயிறு வளர்க்கவென்றே கற்கும் இக்கால மக்களினும், வாழ்வு வளம்பெற வேண்டி, வரிசை பலபெற்று விளங்கக் கற்ற பண்டையோர், பல்லாற்றானும் சிறந்து விளங்கினர். அதனால், அக்காலக் குடிதோறும், குலந்தோறும் புலவர் பல்லோர் பிறந்து பார்புகழ வாழ்ந்தனர். அக்காலத்தே வாழ்ந்த புலவர்கள் நானூற்று அறுபத்தெண்மருள், அறு தொழில் புரியும் அந்தணர் குலத்துவந்த புலவர் பலர்; வில்லேருழவராய் வியனுலகு ஆண்டாருள், சொல் லேருழவராய்ச் செந்தமிழ் காத்தார் கணக்கற்றார்; வணிகர் குல மணிகளாய் வந்து வளம்பல கொழித்தாருள், பாக்கள் பல புனைந்து பண்பாடு வளர்த்தார் பல்லோர். செம் பொன்னும், நவமணியும், கரும்பொன்னும் கொண்டு, அணியும் ஆயுதமும் ஆக்கித்தரும் அருந்தொழில் உடை யாருள் உலகம் போற்றும், உயர்பெரும் புலவராய் வாழ்ந் தார் எத்தனையோ பெரியார்; குயவர் குலத்தே வந்து, குன்றாப்புலமை யுற்றாரும் உளர்; உடற் பிணிபோக்கும் உயர்ந்த மருத்துவத் தொழில்பூண்டாருள்ளும், உயிர்ப் பிணிபோக்கும் உரன்மிகு புலமையுடையார் சிலர் வாழ்ந் தனர்; புலவராய்ப் பிறர்போற்றத் தாம் வாழ்வதோடு, பிறரையும் அப் புலமை யுடையராக்கும் பேருள்ளங் கொண்டு, ஆசிரியத் தொழில் பூண்டு வாழ்ந்தார் பலர். சுருங்கக் கூறின், பழந்தமிழ்க் குடிகளுள்ளே, புலவரைப் பெற்றுப் புகழ்பெறாக் குடியே இல்லை எனலாம்.

இவ்வாறு வாழ்ந்த அப் புலவர் நானூற்று அறுபத் தெண்மரும், பாடல் புனைவது, பரிசில்பெற்றுண்பது

என்ற அவ்வளவோடு நின்றுவிட்டாரல்லர்; அன்றைய தமிழகத்தின் அரசியல் வாழ்வில், அவர்கள் மேற்கொண்ட பணிகள் பலப்பல; அவர்கள், அக்கால அரசவைதோறும் சென்று சென்று, அரசர்க்கும் மக்கட்கும் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்கா; பழந்தமிழ் நாட்டின் பெருமையில் புலவர்க்கும் பெரும்பங்குண்டு; அப்புலவர்களின் வரலாற்றினை விளங்க உணர்வார், அவர்கள் அன்று ஆற்றிய தொண்டின் அருமை பெருமைகளை உணராமற் போகார்.

தமிழகம் தன்னேரில்லா அரசு பெற்றுத் தழைத்திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம் என்ற பாராட்டுரைகளுக்கிடையே தன்னேரில்லா அரசோச்சி அத் தமிழகம் தாழ்ந்தமைக்கும், அம் மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ் நாட்டின் சிறுசிறு பகுதிகளை ஆங்காங்கே ஆண்டுகொண்டிருந்த குறுநில மன்னர்களுமே காரணமாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையிலேயே அன்றைய அரசியல் அமைந்திருந்தது. தமிழரசர் மூவரும், ஒற்றுமை கொண்டு ஊராண்டவரல்லர்; அவர் ஒவ்வொருவரும், பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமுடையவராவர். ஒரு குடியில், ஒரு காலத்தே ஆற்றல் மிக்க அரசனொருவன் தோன்றி விட்டால், அவன், பிற அரசுகளையெல்லாம் பணிய வைத்துப் பேரரசனாய் வாழவேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும் செல்வமும் கண்டு மனம் பொறாத ஏனைய அரசர்கள் அனைவரும் ஒன்றுகூடி, அவனை அழிக்க வழிகோலுவதும் அக்கால வழக்கமாம். ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒரு குடியிற் பிறந்தவர்களே, ஒருவரோடொருவர் பகைத்துப் போர்மேற்கொண்டனர்; அம்மட்டோ! தந்தை, மகனை எதிர்த்தான்; மகன் தந்தை மேல் போர்கொண்டு எழுந்தான். பழைய தமிழகத்தின் அரசியல் நெறியிது. இவ்வரசியல் முறையால், தமிழகம் முழுதும் அழிந்து, மண்ணோடு மண்ணாய் மறைந்து

போகாமல், தமிழகம் என்ற பெயரால் இன்றும் ஒரு நாடுளது என்ற இந்நிலைக்கு அக்காலத்தே வாழ்ந்த புலவர்களே காரணராவர். வாழப்பிறந்த உயிர்கள் வாழாது வீணே மடிவதுகாண, அவர்கள் உள்ளம் பொறாராயினர்; அதனால், அவ்வுயிர்கள் அழிவதைத் தடுக்கத் தம்மாலாவன செய்வதே அறிவுடையோர் கடனாம் என்ற கொள்கையினராய் வாழ்ந்தனர்; அவர்கள் தலையிட்டால் தடையுற்ற போர்களும், அதனால் பிழைத்து உயிர்வாழ்ந்த உயிர்களின் தொகையும் மிகப் பலவாம். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இரு சோழகுலச் சிற்றரசர் இருவர்க்கிடையே, ஆவூர், உறையூர் குறித்து எழுந்த போர்களைப் போக்கப் பெரிதும் முயன்றார் கோவூர்கிழார்; சேரனுக்குரிய கருவூரை முற்றி அழிக்க முனைந்த குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் போர் வெறியைப் போக்கினார் ஆலத்தூர் கிழார்.

தன்னைப் பகைத்தெழுந்த தன் மக்கள்மீது போர் கொண்டெழுந்த கோப்பெருஞ்சோழன் கொடுஞ்செயலைப் போக்கினார் புல்லாற்றூர் எயிற்றியனார்; அதிகமான் நெடுமானஞ்சிக்கும், தொண்டைமானுக்கும் இடையே பகை வளராது தடுக்க தொண்டைமான் அவைக்குத் தூது சென்றார் ஔவையார். அதியமான் நெடுமானஞ்சிக்கும், அவன் பகைவனும், அவன் தகடூரை அழித்த பெருஞ்சேரலிரும்பொறைக்கும் இடையே வளர்ந்த பகையைப் போக்கத் தாமும் முயன்றதோடு, தம்போலும் பிறபுலவர் துணைகொண்டும் முயன்றார் அரிசில்கிழார். பாரியின் பறம்பாலை முற்றி அழிக்க முன்வந்த மூவேந்தர்க்கு அறிவுரை பல வழங்கி, அவர் போர் வேட்கையைப் போக்க எண்ணினார் கபிலர். இவ்வாறு, அக்காலப் புலவர் பலரும், பாடிப் பிழைப்பதே தம் தொழில் என்று அடங்கியிராது, அக்கால அரசர்கள், நெறி தவறுந்தோறும், அஞ்சாது முன்வந்து, ஏற்றவகையால் இடித்துக்கூறித் திருத்தியதினாலேயே, தமிழொலி கேட்கும் நாடு ஒன்று, உலகின் ஒரு பகுதியாகத் திகழ்கின்றது. வாழ்க அப் புலவர்கள்.

அக்காலத் தமிழரசர்கள், தம் பகைவர்கள்பால் கொண்ட ஆத்திரத்தால் அறிவிழந்து, தம் ஆண்மைக்கும், பெருமைக்கும் பழிதரும் செயல்களை ஒரோவழிச் செய்து விடுதலும் உண்டு. அவ்வாறு, அவர்கள் மேற்கொள்ளும் பழிச்செயல்களைத் தடுத்து, அவர்க்குப் பழியுண்டாகா வண்ணம் காப்பாற்றியதோடு, அவரால் அழிய இருந்தார் உயிரையும் காத்து உயர்துணை புரிந்தாரும், அப்புலவ ரிடையே சிலர் உளர். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், தன் பகைவனாய மலையமான் மக்களைப் பற்றிக் கொணர்ந்து, தன் பட்டத்து யானையின் காற்கீழிட்டுக் கொல்லத் துணிந்தகாலை, ஆண்டுப்போந்த புலவர் கோவூர் கிழார், கிள்ளிவளவன் பிறந்த சோழர்குடியும், அம்மக்கள் பிறந்த மலையமான் குடியும், இரவலரைப் புரக்கும் பண்பால் கொண்டுள்ள ஒற்றுமையையும், அம்மக்கள் தம் நன்கிளமைப் பருவநிலையையும் எடுத்துக்கூறி, அவர்களையும் காத்து, கிள்ளிவளவன் பெருமையையும் காத்தார். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளிகட்கிடையே நிலவும் பகையினை உணரானாய்; நலங்கிள்ளிபால் பரிசில் பெற்று, நெடுங்கிள்ளிபால் பரிசில்பெறச் சென்ற இளந்தத்தன் எனும் புலவன் ஒருவனை, அவனை, அவன் தன்பால் உளவறிந்து போகவந்த நலங்கிள்ளியின் ஒற்றனவன் எனப் பிறழக் கொண்டு, நெடுங்கிள்ளி கொல்லப் புகுந்தகாலை, அவண் வந்த புலவர் கோவூர்கிழார், புலவர்தம் வாழ்வியல் இத் தன்மைத்து; அவர் அரசியற் சூழற்கு அப்பாற்பட்டவர் என்பதையெல்லாம் எடுத்துக்கூறி, அப்புலவனைக் கொல்லாது போகவிடுமாறு செய்து, புலவன் உயிரையும், அரசன் புகழையும் ஒருங்கே காத்தார்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண், மேற் சென்றிடித்தற் பொருட்டு;" "அழிவினவை நீக்கி ஆறுய்த்து, அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" என்ற உண்மையுரைகளை உணர்ந்து நடப்பவர் பழந்தமிழ்ப் பாவலர்கள்; அவர்கள் தமக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றிப் புரக்கும் அரசர்கள் நல்வாழ்வு

வாழவேண்டும்; பழியின் நீங்கிய பண்புடையராதல் வேண்டும் என்ற பேரெண்ணம் உடையராயினர்; அதனால் அரசர்கள் தவறு செய்வர், செய்கின்றனர் என்பதை அறிந்த அக்கணமே, அவர்கள்பால் சென்று, அவர் அறிவு திருந்தும் அறவுரைகளை அஞ்சாது எடுத்துக்கூறி நல்வழிப் படுத்தியுள்ளனர்; புலவர்கட்கு வரையாது வழங்கும் வள்ளியோனாய் வாழ்ந்த வையாவிக்கோப் பெரும்பேகன் பால், பரத்தையர் ஒழுக்கம் உண்மை கண்டு உளம் நாணிய புலவர்கள், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலியோர், அவன், அவளோடு வாழும் நல்லூர் சென்று, நல்லுரை புகன்று, அவனை நல்லவனாக்கி நனிமிக மகிழ்ந்தனர்.

உலகுபுரக்கும் உயர்வுடையதாகிய சிறப்புமிக்க உழவுத்தொழிற்கு உறுதுணையாக, நீர்நிலை யமைத்தல்போலும் செயல்களைச் செய்துதாராது, அவ்வுழவுத்தொழில் புரிவாரிடமிருந்து நிலத்திறைகளை மட்டும் தள்ளாது தண்டும் இயல்பினரைத் தன் அரசியல் அலுவலராக மேற்கொண்டமையால், குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்பால் உண்டாய பெரும்பழியை, அவனுக்கு அவன் நாட்டு உழவர் அடையும் அல்லல்களை எடுத்துக்காட்டி, மழையின்மையாலோ, மன்னன் தன் கடமையிற் றவறுவதாலோ உண்டாம் நிலவரிக் கடன்களைத் தண்டாமல் விடுவதோடு, அவ்வுழவுத் தொழிற்கு உறுதுணையாக நீர்நிலை பலவாக்கித் தருதலும் வேண்டும் என்று அறிவுரை கூறித் திருத்தி அரசியல் நெறிவாழத் துணைபுரிந்தார் புலவர் வெள்ளைக்குடி நாகனார். பாண்டியன் அறிவுடை நம்பியின் அரசியல் அலுவலர், தம் நாட்டு மக்களிடத்தே வரி தண்டுங்கால் அறநெறிமேற் கொள்ளாது, தம் அறிவுநெறி மேற்கொண்டு, முறையின்றி, வருத்தி வாங்குவது கண்ட புலவர் பிசிராந்தையார், அறிவுடை நம்பிபால் சென்று, முறையின்றி வரி வாங்கின், அவன் நாடேயன்று அவனும் அழிவுறுவன் என்பதைத் தெளிய எடுத்தோதி, அவனை அழிவுப் பாதையினின்றும் அகற்றித் துணைபுரிந்தார்.

கெடுங்காலக் கைவிடும் கேண்மையுடையாரல்லர் நம் பைந்தமிழ்ப் புலவர். தமக்குப் பொன்னும், பொருளும் அளித்துப் புரந்த பேரரசர்கள், அரசியல் சூழ்ச்சியால் அல்லல் பல அடைந்து தாழ்வடைவராயின், அவர்கள் தாழ்ந்துவிட்டார்கள். இனி, நம்மைத் தாங்குதல் அவர்களால் இயலாது என்று எண்ணி, அவரைவிட்டுப் பிரிந்து வேற்றிடம் செல்லார் நம்புலவர். தம்மைப் பேணிய அப்பேரரசர்க்கு, அவர் பகைவராலோ, அல்லது பிறவகையாலோ உண்டாம் கேடுகளைத் தம்மால் இயன்றவரை போக்க முயல்வர். முடியாது போயின், அவர் அழியுங்கால், தாமும் அவரோடு உடன் அழிவர். 'கெட்டகாலை விட்டனர் என்னாது, நட்டோர் என்பது நாட்டும்'' நற்பண்பு, பழங்காலப் புலவர்கள்பால் பொருந்தி நின்ற பெரும் பண்பாகும்.

மூவேந்தர் முற்றுகையால் பாரியும், அவன் பறம்பரணும் பாழுறுவண்ணம் காக்க எவ்வளவோ முயன்றார், அப்பாரியின் ஆருயிர் நண்பர் கபிலர்; ஆனால், முடியவில்லை; மூவேந்தர் சூழ்ச்சியால் பாரி இறந்துவிட்டான்; அவனை இழந்து வாழ எண்ணாத கபிலர், அவன் மக்கள் மணவினையை முடிக்கும் தம் கடமை கழிந்தவுடனே, நண்பனை எண்ணி வடக்கிருந்து உயிர் நீத்தார். கோப்பெருஞ் சோழனைப் பார்த்துப் பழகியறியாதவர் புலவர் பிசிராந்தையார்; ஆயினும் அவனைத் தம் உயிரொத்த நண்பனாகக் கொண்டு வாழ்ந்திருந்தார்; அந்நிலையில் தன் மக்கள்பால் கண்ட மாண்பிலாச் செயல்கண்டு மனம் உடைந்து வடக்கிருந்து உயிர் துறந்தான் கோப்பெருஞ் சோழன்; தம் நண்பன் வடக்கிருக்கின்றனன் என்பதறிந்து ஓடோடி வந்து, அவனோடு தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தார் புலவர் பிசிராந்தையார். கோப்பெருஞ் சோழனோடு வடக்கிருந்தார் பிசிராந்தையார் ஒருவர்மட்டு மல்லர்; பொத்தியார், பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார் போலும் புலவர்களும் அவன் பிரிவாற்றாது வடக்கிருந்து உயிர் துறந்தனர். கரிகாற் பெருவளத்தானோடு மேற்கொண்ட போரில், தான் புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர்துறந்தான்

பெருஞ்சேரலாதன்; அஃதறிந்த, அவன் அவைக்களப் புலவர் பலரும், அவனோடு தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தனர்.

பழந்தமிழ்ப் புலவர்கள்பால் காணலாம் மற்றொரு பெரும்பண்பு, வறுமையிற் செம்மை; புலவர்கள், வறுமைத்துயர் வாட்டிய காலத்தும், அது குறித்துத், தம்மை மதியாதார் மனைசென்று பொருள்பெற எண்ணுவாரல்லர். அரசரையடைந்து பொருள்வேண்டி நிற்கும் அவர்கள், அளிக்கும் அரசர்கள், தம்பால் அன்பும், ஆர்வமும் காட்டி அளித்தல் வேண்டும்; தம் தகுதிக்கேற்பப் பெரும்பொருள் அளித்தல் வேண்டும் என்றே விரும்புவர். அதற்கு மாறாக, அவ்வரசர்கள், அன்பும், ஆர்வமும் இலராய்க் கடன் எனக் கருதிக் கொடுக்கும் பொருளையும், தம் வரிசை நோக்கி வாரி வழங்காது, சிறிதே கொடுக்கும் பொருளையும் பெற்று மீள்வாரல்லர். மறுத்தே மீள்வர். பிறபுலவர்க்கு அளிப்பதைப்போன்றே, பெரும் புலவராய தமக்கும் ஒப்ப வழங்கிய மலையமான் திருமுடிக்காரியின் செயல்கண்டு நாணிய புலவர் கபிலர், "பொதுநோக்கொழிமதி புலவர்மாட்டே" என, அவனுக்கு அறிவுரை கூறினார். அதியமான் நெடுமானஞ்சி, தன் அரசியல் அலுவல்களால், கண்டு அளவளாவி அளிக்க இயலாது, காணாதே பொருள் கொடுத்தானாகக் "காணாது ஈத்த இப் பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலேன் அல்லேன்" என்று வெறுத்துரைத்து வேற்றிடம் சென்றார் புலவர் பெருஞ்சித்திரனார்; அவரே, வெளிமான் தம்பி, தம் வரிசையறியாது சிறிதே வழங்கினான் எனக் கண்டு சினங்கொண்டு, குமணனைப் பாடிப்பெற்ற யானையை அவ்வெளிமான் காவல் மரத்தில்கட்டி, வெளிமானை அழைத்துக் காட்டி, "இரவலர் உண்மையும் காண்; இரவலர்க்கு ஈவோர் உண்மையும் காண்," என உரைத்து உயர் புகழ் பெற்றார்; அதியமான் நெடுமானஞ்சியைக் காணச் சென்ற ஔவையாரை, அவன் விரைந்துவந்து வரவேற்கானாகவே, அதனால் கடுஞ்சினம் கொண்ட ஔவையார், "பெரிதே உலகம்; பேணினர் பலரே; எத்திசைச் செலி

னும், அத்திசைச் சோறே," என்றுரைத்துத் திரும்புவா ராயினர்.

இவ்வாறு நாடுவாழ நல்லறிவூட்டியும், தம் நேரிய வாழ்வால் நன்னெறி காட்டியும் வாழ்ந்தனர் புலவர் நானூற்று அறுபத்தெண்மர். தமிழகம், பண்டு தான் பெற்றிருந்த செல்வச் சிறப்பை இழந்துவிட்ட இக்காலத் திலும், தமிழரும், தமிழகமும் உலக அரங்கில் உயர்நிலை பெற்றுத்திகழ்வதற்குக் காரணமாய் விளங்குவன, தமிழ் மொழி பெற்றிருக்கும் தனிச் சிறப்புடைய இலக்கியச் செல்வங்களேயாம். ஆகவே, அவ் விலக்கியச் செல்வங்களை ஆக்கி அளித்து, அதன் வழியாகத் தமிழர்க்குத் தாழ்வி லாச் சிறப்பளித்த அப் புலவர் பெருமக்கட்குத் தமிழ் நாட்டார் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ள னர். ஆனால், பெறுதற்கரிய பேரிலக்கியப் பெருஞ் செல் வங்களைப் படைத்தளித்த அப் புலவர்களின் வரலாற்றினை அறியும் வாய்ப்பினைத் தமிழகம் இழந்துவிட்டது. புலவர் கள், இலக்கிய வளர்ச்சியிலேயே கருத்துடையராய் நின்று விட்டனரே ஒழிய, தங்கள் வரலாற்றைத் தங்கள் வாயி லாகவே அளிக்கத் தவறி விட்டனர். இதனால், அப் புலவர்க ளுடைய வரலாற்றினை அறிய இயலாமற் போனதோடு, அவர்களிற் பலருடைய இயற்பெயர்தாமும் அறிய இயலா மற் போய்விட்டது. தமக்கு உலக அரங்கில் உயர் இடம் தேடித்தந்த புலவர் பெருமக்கட்குத் தமிழ்மக்கள் அளித்த கைம்மாறு தான் என்னே!

இவ்வாறு புலவர்களின் வரலாற்றினை அறிய மறந்த நன்றிகெட்ட தமிழரிடையே, நன்றி மறவாத் தமிழர்களும் சிலர் இருந்துள்ளனர். அவர்கள், அப்புலவர்களின் வர லாற்றினை அறியப் பெரிதும் முயன்று, முடியாமற்போகவே, அவர்கள் பெயரையாவது அறிந்து அறிவிக்க முயன்றுள் ளனர். அம்முயற்சியில், ஓரளவு வெற்றியும் பெற்றனர். புலவர் ஒருவருடைய ஊரும், அவர் மேற்கொண்டிருந்த தொழிலும், அவர் இயற்பெயரும் அறியப்பெறின், உறை யூர் மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூலவாணிகன்

சித்தலைச் சாத்தனார் என்றும், ஊரும், பெயரும் அறிந்ததோடு அவர் தந்தை பெயரையும் அறியப்பெறின், மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்றும், ஊரும், தொழிலும் அறிந்து, இயற்பெயர் அறியப்பெறுதொழியின் உறையூர் இளம்பொன் வணிகனார், வெண்ணிக்குயத்தியார் என்றும், புலவர் பிறந்த ஊர்மட்டும் அறியப்பெறின், கல்லாடனார், கழாத்தலையார் என்றும், அறிந்த வரலாறுகளை அப்புலவர் பெயரோடு இணைத்து வழங்கித் தமிழுலகம் அறிய வகை செய்தனர். அவ்வளவோடு நில்லாமல், ஊரோ, பெயரோ, உற்ற தொழிலோ அறியமாட்டாப் புலவர்களையும், அவர் தம் பாக்களைப் பயின்று, அப் பாக்களில் அவர் ஆண்ட அழகிய உவமைகள் அரிய சொற்றொடர்களால், ஓரேருழவன், செம்புலப் பெயல் நீரார் எனவும், கங்குல் வெள்ளத்தார், பதடி வைகலார் எனவும் பெயரிட்டு அறிமுகமாக்கியுள்ளனர். இவ்வாறு அறிந்த புலவர்களின் சிறுவரலாறுகளையும், தமிழுலகம் மறந்துவிடாது போற்றிக்காத்தல் வேண்டும் என்னும் பேருள்ளம் கொண்டு, கபிலர் முதலாக பேயனார் ஈறாக உள்ள, சங்கப் புலவர் வரிசை நூல்கள் பதினாறினும், அப்புலவர்கள் நானூற்று அறுபத்தெண்மர் வரலாறு, அவர் பாக்களின் துணைகொண்டே ஓரளவு விரித்துரைக்கப்பட்டுளது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய அப்பழம் பெரும் நூல்களைப் பாடித் தந்தவர் அப்புலவர்கள் நானூற்றறுபத்தெண்மரே யெனினும், அவர்கள் அப் பாக்களைப் பாடப் பெருந்துணை புரிந்தவர், அக்கால அரசர்களேயாவர். நிரம்பிய வாழ்க்கையும், நிறைந்த உள்ளமும் நிலவும் நாட்டிலேயே, நல்ல இலக்கியங்கள் தோன்றக்கூடும். அந்நாட்டில் வாழ்பவரே, பொருள்வளத்தைப் போற்ற வேண்டிய கவலையற்றவராய்ப் பேரிலக்கியம் போலும் பொன்றாக் கலை வளத்தைப் போற்றி அளிப்பர். "வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்," என அப்புலவருள் ஒருவரேகூறுவதும் காண்க. அத்தகைய நல்லாட்சி, தமிழ் நாட்டிலும் நிலவச்

செய்து, தமிழிலக்கியம் தோன்றத் துணைபுரிந்ததோடு, அப் புலவர் வேண்டும்போதெல்லாம், வரையாது வழங்கி, அப்புலமையுள்ளம், வறுமையால் வாடிக் கருகிவிடாது, பொருள் நிறைந்த பாக்கள் பல பாடிப் பயன் விளைக்கப் பெருந் துணைபுரிந்தவர் அக்கால அரசர்களே யாவர். ஆகவே, அப் பாக்களின் இயற்றும் வினை முதல்வராகிய அப் புலவர்களைக் கண்டு பாராட்டிய நாம், அப் பாக்களின் ஏவும் வினை முதல்வராகிய அவ்வரசர்களைக் கண்டும் பாராட்டக் கடமைப்பட்டவரன்றோ!

நல்ல இலக்கியங்களை நமக்களித்த புலவர்களை நாம் மறந்து விட்டோம்; ஆனால், தமக்குப் பொருள் அளித்துப் புரந்த அரசர்களை அப்புலவர்கள் மறந்தாரல்லர்; தாம் பாடிய பாக்கள் இடையிடையே, அவ்வரசர்களின் குணஞ் செயல்களை எடுத்துக் கூறிப் பாராட்டி, அவர்தம் வரலாற்றினை ஓரளவு உணர்த்திச் சென்றுள்ளனர். இவ்வாறு, அப் பாக்கள் துணைகொண்டு நோக்குவார்க்கு நூற்று அறு பதின்மர்க்கும் மேற்பட்ட அரசர்களின் வரலாறு விளங்கித் தோன்றும். அவ்வாறு அறிந்த அவ்வரசர் வரலாறு களையும், ஓரளவு அறிந்து, தமிழகத்தார்க்கு அளிக்க எண்ணி, "சங்க கால அரசர் வரிசை" என்ற தொகுப்பின் கீழ்ச் **சேரர், சோழர், பாண்டியர், வள்ளல்கள், அருதை, திரையன்** என்ற தலைப்புக்களைக் கொண்ட ஆறு நூல்களின் வழியாக, அளித்துள்ளோம். புலவர் வரலாறுகண்டு நன்றி பாராட்டிய தமிழகம், அப்புலவர்க்குப் பொருள் அளித்துப் பேணிய அரசர் வரலாறும் கண்டு நன்றி செலுத்துமாக.

# சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை

ஆசிரியர் : திரு. கா. கோவிந்தன், எம்.ஏ.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. | கபிலர் | 1 | 12 |
| உ. | பரணர் | 1 | 12 |
| ங. | நக்கீரர் | 1 | 12 |
| ச. | ஔவையார் | 1 | 12 |
| ரு. | பெண்பாற் புலவர்கள் | 1 | 12 |
| சு. | உவமையாற் பெயர்பெற்றோர் | 1 | 12 |
| எ. | காவல பாவலர்கள் | 1 | 12 |
| அ. | கிழார்ப் பெயர்பெற்றோர் | 1 | 12 |
| கூ. | வணிகரிற் புலவர்கள் | 1 | 8 |
| க0. | மாநகர்ப் புலவர்கள் I | 1 | 8 |
| கக. | மாநகர்ப் புலவர்கள் II | 1 | 8 |
| கஉ. | மாநகர்ப் புலவர்கள் III | 1 | 8 |
| கங. | உறுப்பாலும் சிறப்பாலும் பெயர்பெற்றோர் | 1 | 8 |
| கச. | அதியன் விண்ணத்தனார் முதலிய கூரு புலவர்கள் | 2 | 4 |
| கரு. | குட்டுவன் கண்ணனார் முதலிய அ0 புலவர்கள் | 2 | 0 |

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

தலைமை நிலையம் :
24, கீழைத் தேர்த்தெரு,
திருநெல்வேலி.

கிளை நிலையம் :
1/140, பிராட்வே,
சென்னை - 1.